Registered at the G. P. O as a Newspaper

வாரப்பதிப்பு

விலை சதம் 15

# ஈழநாடு

EELA NADU

பட்டுப் பருத்திப்
பிடவைகளுக்குச்
சிறந்த ஸ்தாபனம்
டயரும்ஸ்
மெயின்வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 389 | National TAMIL DAILY | தேசிய தினசரி | தபாற் பெட்டி எண்: 49

மலர் 4 | யாழ்ப்பாணம். பிலவ மாசி 7 ஆம் நாள் ரம்ழான் 12 (18-2-62) | ஞாயிற்றுக்கிழமை | இதழ் 8

# 'ஸ்ரீ' வழக்கில் தீர்ப்பு மார்ச் 7-ல் வெளியாகும்

## இரு தரப்பு தொகுப்புரைகளும் முடிவடைந்தன

### இந்திய மோட்டார்வழக்கு உதாரணம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

**தமிழ்'ஸ்ரீ'வழக்கு நேற்றுமீண்டும் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இரு தரப்பு வழக்கறிஞரும் தொகுப்புரை நிகழ்த்திய பின் தீர்ப்புக் கூறுவது மார்ச் 7-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.**

இவ்வழக்கில் முடிக்குரிய தரப்பில் திரு. ரஞ்சித் அபயசூரியாவும், எதிர் தரப்பில் திரு எம். திருச்செல்வம் கியூ. ஸி யும் ஆஜராயினர்.

வழக்கின்போது இந்தியாவில் நடைபெற்ற ஒரு மோட்டார் வழக்கை உதாரணமாக எடுத்துக்காட்டி பிராஸிக்கியூஷன் தரப்பில் விவாதிக்கப் பட்டது.

மோட்டார் கார் இலக்கத் தகட்டிலுள்ள எழுத்தை உருத் தெரியாத முறையில் மாற்றியதாகக் குற்றஞ்சாட்டி பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினத்தினுடைய கார் சாரதி திரு. கந்தசாமி வேலும் மயிலும் மீது தொடரப்பட்ட வழக்கில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. ரஞ்சித்அபயசூரியா நேற்று தமது தொகுப்புரையை ஆரம்பித்தார்.

மோட்டார் கார் 'செவி' இலக்கத்தைப்பற்றி பிராஷிக்கியூஷன் கவலைப்படவில்லை. காரின் உரிமைபற்றி குற்றச் சாட்டில் இல்லை. மோட்டார் போக்குவரத்து கமிஷனர் வழங்கிய மோட்டார் இலக்கத் தகட்டிலுள்ள தெளிவான எழுத்தை தெளிவில்லாமல் செய்தது என்பதுதான் குற்றச் சாட்டு.

அடையாள இலக்கத்தகட்டைப் பற்றி மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் இலக்கத் தகட்டின் பிரமாணம் தெளிவான இலக்கம், எழுத்து ஆகியவை பற்றி தெளிவு படுத்தியுள்ளது ஒரு காரின் இரண்டு இலக்கத்தகடுகளிலும் உள்ள வடிவம் மாற்றப்பட்டால் கூட இச்சட்டத்தை மீறியதாகும். மோட்டார் பதிவு இலக்கத்தை எந்த விதத்திலும் மாற்றினாலும் தெளிவில்லாமல் செய்தாலும் இலக்கத்தகடு வழங்கியதன் நோக்கமே குழப்

(12-ம் பக்கம் பார்க்க)

★ ஈழநாடு 18—2—62 ★

## கூடிக் கலந்த கோள்கள்

எட்டு கோள்களும் கூடிக் கலந்துவிட்டன. நம்மில் பலரும் பயந்ததுபோல், அவ்வளவு தீங்குகள் ஏற்படவில்லை. நாட்டில் நடந்த வழிபாடுகளும், பிரார்த்தனைகளும், ஓமங்களும்தான் இதற்குக் காரணமென்று சிலர் நம்பலாம். இவையெல்லாம் வெறும் மூடநம்பிக்கையென்றும், கோள்கள் கூடுவதால் உலகத்துக்கோ மக்களுக்கோ எவ்வித அபாயமும் ஏற்பட்டு விடாதென்றும், கூறியவர்கள், தாங்கள் கூறியது பலித்ததென்று கூறி மகிழலாம்.

ஆனால் இதில் எது சரி, எது தவறு என்று அறுதியிட்டுக் கூற நம்மால் முடியவில்லை. மனிதனின் அறிவு மிகவும் சிறியது. அடுத்த நிமிடம் நமக்கு என்ன நேரப்போகிறதென்று நம்மால் நிச்சயமாக எதுவும் கூற முடியாத நிலையில் இருக்கிறோம். "ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாகும், அன்றி அதுவரினும் வந்தெய்தும் ஒன்றை நினையாது முன்வந்து நிற்பினும் எல்லாம் எனையாளும் ஈசன்செயல்" என்ற நிலையிலேயே நம்மில் பலரும் இருந்து வருகிறோம்.

இந்நிலையில் நாம் என்ன செய்ய வேண்டுமென்பதே கேள்வி. கோள்கள் கலந்ததும், சிலர் கடவுளையும் அத்துடன் மறந்துவிட்டிருக்கலாம். சிலர், லட்சார்ச்சனை, வழிபாடுகளைத் தொடர்ந்து நடத்தி, கோள்களினால் தொடர்ந்து தீங்கு ஏற்படாமல் பாதுகாத்துக்கொள்ள முயலுகின்றார்கள். வெளிவழிபாடுகள் நம் மனதைச் சுத்தப்படுத்தி அன்பு நெறியில், எம்மை எவ்வளவு தூரம் செலுத்த உதவுகிறதோ அவ்வளவும் நல்லது. அன்பு வழியிலே தொடர்ந்து உறுதியான காரியங்கள் செய்து வருபவர்களே, நாளுக்கும், கோளுக்கும் அஞ்சாமல், 'அஞ்சுவது யாதொன்றுமில்லை. அஞ்ச வருவதுமில்லை' என்ற திண்மையுடனே, திருவருளைத் துணையாகப் பெற்ற வீரர்களாக வாழ்க்கையை வெற்றியுடன் நடத்தமுடியும்.

## இன்று

இன்று காலை 7-30 மணி தொடக்கம் மாலை 9-30 மணி வரைக்கும் தவத்திரு. ஸ்ரீலஸ்ரீ யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தாவும் ஸ்ரீலஸ்ரீ சுவாமி சுப்பிரமணியானந்தாவும் மற்றும் திவ்விய ஜீவனசங்க யாழ்ப்பாணக்கிளை உறுப்பினர்களும் காங்கேசன்துறை விளையாட்டு மைதானத்தில் யோகவிளக்கமும், அருளுரையும் அளிப்பார்கள்.

## தமிழாசிரியர் விடுமுறைக் கழகம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் தமிழாசிரியர் சங்கத்தின் விடுமுறைக் கழகத்தை அடுத்த மாதம் 8-ம், 9-ம் திகதிகளில் நடாத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வட பகுதி உதவி வித்தியாபதி திரு. எஸ். யூ சோமசேகரம் முதல் நாள் கழகத்தையும், யாழ்ப்பாணக் கல்வி அதிகாரி திரு. எஸ தணிகாசலம் இரண்டாம் நாள் கழகத்தையும் ஆரம்பித்து வைப்பரெனத் தெரிகிறது.

பார்லிமெண்ட்

# கிரிமினல் சட்ட விசேஷ மசோதா அங்கீகாரம்

## சாதகமாக 89 வாக்குகள்: பாதகமாக 52 வாக்குகள்

### சபை வியாழக்கிழமை வரை ஒத்திவைப்பு

கொழும்பு, சனி

**பார்லிமெண்டில் கிரிமினில் சட்ட விசேஷ மசோதா இரண்டாம் முறையாக வாசிக்கப்பட்டு 39 அதிகப்படி வாக்குகளால் அங்கீகரிக்கப்பட்டது. மசோதாவுக்கு சாதகமாக 89 பேரும், பாதகமாக 52 பேரும் வாக்களித்தனர். ஒருவர் வாக்களிக்கவில்லை.**

கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியவைகள் மசோதாவுக்குச் சாதகமாக வாக்களித்தன. சுயேச்சை அங்கத்தவர்களான திரு. எம். ஐ எம். அப்துல் மஜீத், திரு. எம். சி. அஹமத், திரு. பி. டி. எஸ். குலரத்ன, ஆகியோரும் சாதகமாக வாக்களித்திருந்தனர். ஐக்கிய தேசியக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, தமிழரசுக் கட்சி ஆகியவைகள் மசோதாவுக்கு பாதமாக வாக்களித்தன. சுயேச்சை தமிழ் அங்கத்தவர்களும் திரு. டபிள்யு தஹநாயக்கா, திரு. ஆர் ஜீ. சேனநாயக்கா ஆகியோரும் பாதகமாக வாக்களித்தனர். ஸ்ரீமதி குஸுமா ராஜரத்ன வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. சபை வியாழக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இலங்கைப் பார்லிமெண்டின் சரித்திரத்திலேயே இதுவரையில்லாத வகையில் ஜனப்பிரதிநிதிகள் சபை, வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகி, இன்று பிற்பகல் 5 மணிக்கு முடிவடைந்தது. மொத்தம் 31 மணித்தியாலங்களுக்கு சபை விவாதம் நடைபெற்றது. முன்னர் நடைபெற்ற, பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்பது பற்றிய விவாதம் 22 மணித்தியாலங்களுக்கு மட்டுமே நடைபெற்றது. அதற்கு முன்னர் நடைபெற்ற சிங்களம் மட்டும் மசோதா பற்றிய விவாதம் 16 மணித்தியாலங்கள் நடைபெற்றன. மசோதாவின் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது பகுதிகள் சபை வியாழக்கிழமை கூடும் பொழுது விவாதத்துக்கு எடுக்கப்படும்.

மசோதாவின் முதல் பகுதியை சதித்திட்டத்துக்கு மட்டும் உபயோகப்படுத்துவதென்று தீர்மானிக்

(12-ம் பக்கம் பார்க்க)

**வியாழபகவான் மாற்றம்**

மாசி மாதம் 13-ந் திகதி (24-2-62) சனிக்கிழமை 46 நாடி 09 விநாடியில் வியாழபகவான் மகரத்திலிருந்து கும்பத்திற்கு மாறுகின்றார். இவரது மாற்றம் தேசத்துக்கும் தேச மக்களுக்கும் பெரும் மாறுதல்களைக் கொண்டுவரும்.

# உங்கள் இராசி பலன்

சோதிட ஆசான் செ. தெல்லியூர் எழுதுவது

பிலவ ஆண்டு மாசி மாதம் 7-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை (18-2-62) முதல் மாசி மாதம் 13-ந் தேதி சனிக்கிழமை (24-2-62) வரை உள்ள பலன்கள்.

*இன்று மாசி மாதம் 7-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5-15 வரை சதுர்த்தசி பின் பூரணை. இரவு 4-49 வரை ஆயிலியம். அதன் பின் மகம். இன்று நவக்கிரக பிரார்த்தனைகளும் தெய்வ வழிபாடுகளும் செய்வதற்கு உகந்த தினமாகும்.*

## மேட இராசி

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம் முடிய)

இவ்விராசியில் ஜெனனமானவர்களுக்கு இவ்வாரத்தில் தொழில் விருத்தி, இலாபகர சிந்தனை, அரசியல் நடப்பில் வெற்றி, சமூகமதிப்பு, குடும்ப நலம், வர்த்தகச்சிறப்பு, வெளிநாட்டு இறக்குமதியில் நன்மைகள், உத்தியோகத்தில் நற்பெயர், பதவி உயர்வு, பயிர்த்தொழில் பலிதம் கல்வி மேன்மை, பெண்களுக்குரிய சுபகருமங்கள் சிறப்பாக நடத்தல் ஆகியன காணப்படுகின்றன. பெப்ரவரி மாதம் 22, 24ந் தேதிகள் நன்மை தருவன.

★

## இடபஇராசி

(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடம் முன்னரை.)

இவ்விராசியில் ஜெனனமானவர்களுக்கு இவ்வாரத்தில் தொழிற்சிறப்பு, சமூகமதிப்பு, அரசியல் வெற்றி, குடும்பஒற்றுமை, தெய்வவழிபாடு, உத்தியோகத்தில் மேலதிகாரிகள் ஆதரவு, உழைப்புக் கடுமை, வர்த்தகமேன்மை, கமத்தொழிலில் சிறிது கஷ்டமான பலன்கள், கல்வி மேன்மை, பண உதவி, பெண்களுக்கு நற்பலன்கள், குடும்பத்தில் சந்தோஷம், தெய்வசிந்தனையும் செலவுகளும் காணப்படுகின்றன. இவர்களுக்கு பெப்ரவரி 18, 24 சுபதினங்களாகும்.

★

## மிதுன இராசி

(மிருகசீரிடம் பின்னரை, திருவாதிரை, புனர்பூசம் முன் முக்கால் முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் பொறுமையின்மையால் கஷ்டங்கள் விளைதல், தொழில்வெறுப்பு, பணமுடை, வியாபாரநிலையில் மந்தம், கமத்தொழிலில் கடும்உழைப்பும் பலிதக்குறைவும், உத்தியோகத்தருக்கு தொழிலில் வெறுப்பும், வீண்பகைகளும், கல்வியில் ஊக்கமின்மையும், பெண்களுக்கு பிதுருவழிஆதரவு, செல்வச் செழிப்பு ஆகியனவும் காணப்படுகின்றன. இவர்களுக்கு பெபரவரி 19, 20 சுபதினங்களாகும்.

★

## கடக இராசி

(புனர்பூசம் 4-ம் பாதம், பூசம் ஆயிலியம் முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் குடும்ப நிம்மதி, தொழில் மதிப்பு, பணவரவு, தேகநலக் குறைவால் செலவு, வர்த்தகத்தில் மத்திமமான பலன், உத்தியோக கஷ்டம், பயிர்த்தொழில் சுணக்கம், கால்நடைநட்டம், கல்வி மேன்மை, ஞாபகசக்தி திறமை, பெண்களுக்கு, துணைவருக்கு நன்மைகள் ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு பெப்ரவரி 18, 22, 23 சுபதினங்களாகும்.

★

## சிங்க இராசி

(மகம், பூரம், உத்தரம் 1-ம் பாதம் முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் தெளிவானசிந்தனை, நன்முயற்சி, உற்சாகம், பணவரவு, குடும்பச்சிறப்பு, பெண்களால் நன்மைகள், வர்த்தகத்தில் போட்டி, பணநெருக்கடி, உத்தியோகத்தில் மறைமுகமான எதிர்ப்பு, பயிர்த்தொழிலில் மத்திமபலன், கல்விஊக்கமின்மை, பெண்களுக்கு நலக்குறைவு ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு பெப்ரவரி 19, 21, 24 சுபதினங்களாகும்.

## கன்னி இராசி

(உத்தரம் பின்முக்கால், அத்தம், சித்திரை, முன்னரை)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் தொழில் வெற்றி, சாதக பலன்கள், செல்வாக்குயர்வு, பணவரவு, குடும்பச்சிறப்பு, தெய்வவழிபாடு, வர்த்தக மேன்மை, உத்தியோக செல்வாக்குயர்வு, அனுகூல இடமாற்ற உத்தரவு, பயிர்த்தொழில் நட்டம், வாக்கு வன்மை, வித்தியாபிவிருத்தி, பெண்களுக்கு குடும்பச் சண்டை, செலவதிகம் ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு பெப்ரவரி 18, 22 சுபதினங்களாகும்.

★

## துலா இராசி

(சித்திரை பின்னரை, சுவாதி, விசாகம் முன் முக்கால் முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரம் தெளிவான சிந்தனை, நல்லோர் நட்பு, குடும்ப நன்மைகள், பிரயாணசுகம், பணவரவு, வர்த்தகத் துறையில் ஆதாயம், உத்தியோககஷ்டம், பயிர்த்தொழில் நட்டம், பிரயாணத்தால் கஷ்டம், கல்விமதிப்புயர்தல். பெண்களுக்கு சந்தோஷம் ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு பெப்ரவரி 18, 20, 21, 24 சுபதினங்களாகும்.

★

## விருச்சிக இராசி

(விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை முடிய)

இவ்விராசியாளருக்கு இவ்வாரம் செய்காரியசித்தி, முதியோர் உதவி, பணவரவு, செல்வாக்கு, உற்றாருக்காக கஷ்டமனுபவித்தல், தொழிலில் சிறப்பு, வர்த்தகலாபம், உத்தியோகத்தில் கஷ்டம், வெளியூர்ப் பிரயாணங்கள், பயிர்த்தொழில் மூலம் வரவு, ஆதாயம், கல்வியில் ஊக்கக்குறைவு, பெண்களுக்கு மாதுருவர்க்க உதவி ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு பெப்ரவரி 19, 21, 23 சுபதினங்களாகும்.

★

## தனு இராசி

(மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் பாதம் முடிய)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் உடல்நலக்குறைவு, குடும்பத்தில் வைத்தியச் செலவு, பணவரவு, சமுகத்தில் நற்பெயர், பிரயாணசுகம், வர்த்தகஆதாயம், உத்தியோகச் சிறப்பு, வருமான உயர்வு, பயிர்த்தொழில் தமாதம், நட்டம், கல்விவிருத்தி, பெண்களுக்கு உடல்நலம், குடும்பசந்தோஷம், ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு பெப்ரவரி 22-ந் தேதி சுபதினமாகும்.

★

## மகர இராசி

(உத்தராடம் பின்முக்கால், திருவோணம், அவிட்டம் முன்னரை முடிய)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் கடும் உழைப்பு, பலிதக்குறைவு, பணக்கஷ்டம், வைத்தியச் செலவுகளதிகரித்தல், வர்த்தகத்துறையில் முன்னேற்றம்-லாபம், வரவு, உத்தியோகத்தில் கஷ்டங்கள், மனவெறுப்புகளேற்படல், தாயாதி கஷ்டங்களால் பயிர்த்தொழில் நட்டம், கல்விவளர்ச்சி, பெண்களுக்கு குடும்பச்சிறப்பு, பொருள்வரவு, விவாகமுயற்சிகள் ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு பெப்ரவரி 18, 24 சுபதினங்களாகும்.

★

## கும்ப இராசி

(அவிட்டம்பின்னரை, சதயம் பூரட்டாதி முன்முக்கால் முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் பணவிவகாரங்கள், வீண்மனப்பயப்பிராந்தி, அலைச்சல், நம்பிமோசமடைதல், வர்த்தகநட்டம், உத்தியோகத்தில் கடும்உழைப்பும் பலிதக்குறைவும், பயிர்த்தொழில் கஷ்டம், கல்வி நிலையில் கஷ்டம், தேகநலக் குறைவு. பெண்களுக்கு குடும்பச்சிறப்பு, ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு பெப்ரவரி 18, 20, 21 சுபதினங்களாகும்.

★

## மீன இராசி

பூரட்டாதி 4-ம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் தொழிற்சிறப்பு, பணவரவு, குடும்பச் சிறப்பு, தேவாலயதரிசனங்கள், வர்த்தகத்தில் ஆதாயம், இறக்குமதி நன்மை, உத்தியோகத்தில் கடும் உழைப்பு, கமத்தொழிற்சிறப்பு, பொருள்வரவு, வித்தைலாபம், மதிப்புயர்தல், பெண்களுக்கு குடும்பச்சிறப்பு, பணவரவு ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு பெப்ரவரி 19, 21, 22, 23 சுபதினங்களாகும்.

# நிழல் போற்றும் நிலை!

— ச. வே. பஞ்சாட்சரம் —

நாறிச் சிதம்பிய பொய்கையில் பூவினை
நாமகள் பூமகள் செல்வமென்பார் — மிடிச்
சேறில் சிறந்தவொர் சேயிழைப் பூவினை
சிச்சி வெறுஞ்சுமை என்றிடுவார்.

ஏட்டில் விளங்கிடும் நல்லவர் தம்மையோ
ஏற்றிப் புகழ்ந்து வணங்கிடுவார் — தினம்
நாட்டில் திரிந்திடும் நல்லவர் தம்மையோ
நல்லன் இவன் எனக் கூசிடுவார்.

தொண்டைப் புகழ்ந்தொரு மேடையில் பேசிடில்
சொக்கி மிக மிகத் தேவையென்பார் — அதைக்
கொண்டு பிறர்நலம் பேணிடு வோர்மனம்
குத்துஞ் செயல்பல செய்திடுவார்.

தெய்வக் கதைகளைச் சேர்வடி வங்களை
சென்னி மிசைவைத்துத் துள்ளிடுவார் — புவி
உய்யத் தகுந்தநல் தெய்விகப் பண்புகள்
ஒன்றும் வளர்த்திடும் எண்ணமிலார்.

உண்மைப் பொருளினை விட்டவ ராயதை
ஒட்டி எழும்நிழல் போற்றுகிறார் — மனக்
கண்ணைத் திறந்திவர் பார்ப்பதன்றோ முறை
கண்டு தகும்நெறி கொள்வதென்றோ!


# ஈழநாடு

தேசிய தினசரி

## சந்தா விபரம்

ஈழநாடு தினசரி (பக்கங்கள் 8)பிரதி சதம்10
ஈழநாடு வாரப்பதிப்பு (பக்கங்கள் 12) பிரதி சதம் 15

விற்பனையாளர் மூலம்.

முற்பணம் கட்டுபவர்களுக்கு தபால் அல்லது ஆள்மூலம் வசதிபோல். (தினப்பதிப்பு)

| | | |
|---|---|---|
| ஒரு வருடம்: | ரூபா | 33-00 |
| 6 மாதம்: | ரூபா | 17-00 |
| 3 மாதம்: | ரூபா | 9-00 |

மூன்று மாதத்துக்குக் குறைந்த சந்தாதாரர்களாகச் சேர விரும்புவோர் சமீபத்திலுள்ள ஏஜண்டுகளிடம் சந்தாவைச் செலுத்தும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

வாரப் பதிப்பு உட்பட

| | |
|---|---|
| ஒரு வருடத்துக்கு | ரூபா 40-00 |
| 6 மாதத்துக்கு | ரூபா 21-00 |
| 3 மாதத்துக்கு | ரூபா 11-00 |

"நாங்கள் தமிழ்ப் பிள்ளைகளாய்ப் பிறந்து, தமிழ் வாசனையில் வளர்ந்து, தமிழ் மொழியில் பேசிப் பழகினோம். ஆங்கில, சிங்கள மொழி வாசனை ஆரம்ப நாட்களில் எமக்கு இருந்ததில்லை . . . உங்களுக்கு இருக்கும் வசதிபோல எங்களுக்கு இருந்ததில்லை..."

# ஆரம்ப மேற்பிரிவுக் கல்வியும் : : : : போதனு மொழியும்

பேராசிரியர் செ. சுந்தரலிங்கம்

## ஈழப்பாட்டனின் கடிதங்கள்: 4

திருலிங்கம் தோட்டம்.
வற்றுப்பளை,
முள்ளியவளை,
பெப்ரவரி, 18-2-62.

எனது அருமையான
இராஜ்-குமார்,

உங்களை நினைக்கும் போது என் மனதில் ஒருவித மகிழ்ச்சி உண்டாகிறது. உங்கள் வயதில் நான் எப்படியிருந்தேன், என்ன செய்தேன், எவ்வகையான குழப்படிகளில் ஈடுபட்டேன் என்னும் எண்ணங்கள் தொடராக ஞாபகத்திற்கு வருகின்றன. எனவே, இந்தக் கடிதத்தை உங்களுக்கு அன்புடன் எழுதுகின்றேன்.

நீங்கள், கொழும்பு, சென்ற். தோமஸ் ஆரம்பபாடசாலையின் மத்தியபிரிவிலுள்ள, தமிழ்ப் பிள்ளைகளுக்காக நடத்தப்படும் வகுப்பில், தமிழ்மொழியிலேயே உங்கள் பாடங்களைப்படிக்கின்றீர்கள். அத்துடன் உங்களுக்கு ஆங்கிலமும் ஒரு முக்கிய பேசும் மொழியாகக் கற்பிக்கப் படுகின்றது. மற்றும் பல அரசாங்க பாடசாலைகளைப் போலன்றி உங்கள் பாடசாலையில் சிறந்த முறையொன்று இப்பவும் உண்டு. ஆங்கில பாடநேரத்திலும், தேகாப்பியாசம், ட்றில் வகுப்புநேரத்திலும், தமிழ், சிங்கள, முஸ்லிம், பறங்கிப் பிள்ளைகள் எல்லோரையும் ஒன்றுகச் சேர்த்து, முறையே படிப்பிப்பதையும், பயிற்சி கொடுப்பதையும் பற்றியே நான் குறிப்பிடுகின்றேன். அது நல்லமாதிரி.

தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழி அறிவும் உங்களுக்குண்டு. அன்றுட வாழ்க்கையில் உங்கள் வீட்டிலுள்ள சில சில வேலைக்காரரோடும், ஆயாவோடும் நீங்கள் சிங்களத்தில் பேசுகின்றீர்கள். சிங்களமொழியையும் பேச விளங்க அறிவதற்கு உங்கள் வீடு உதவியாயிருக்கிறது. சிங்களமொழியை எழுதவோ, அல்லது வாசிக்கவோ நீங்கள் படிப்பதில்லை. பேச்சளவிலும், பேச்சை விளங்குமளவிலும் தேர்ச்சியடைந்திருக்கிறீர்கள். அப்படித்தான் இருக்கவேண்டும்.

### நீங்கள் அதிர்ஷ்டசாலிகள்

உங்கள் அப்பாவிலும், ஐயாவிலும் பார்க்க நீங்கள் அதிர்ஷ்டம் மிக்கவர். நாங்கள் தமிழ்ப் பிள்ளைகளாய்ப் பிறந்து, தமிழ் வாசனையில் வளர்ந்து, தமிழ் மொழியில் பேசிப்பழகினோம். ஆங்கில, சிங்களமொழிவாசனை ஆரம்ப நாட்களில் எமக்கு இருந்ததில்லை. ஏழு எட்டு அல்லது ஒன்பது வயதுப்பராயத்திலே நாங்கள் ஆங்கிலம் எழுதவாசிக்கப் படிக்கத் தொடங்கியபோது படிப்படியாக தமிழ்படிப்பதைக் கவனிக்காது விடநேர்ந்தது. உங்களுக்கு இருக்கும் வசதிபோல எங்களுக்கு சிங்கள ஆயாமாரின் பராமரிப்போ, தினசரி சிங்களம் பேசிவளரும் வீட்டு வசதிகளோ இருந்ததில்லை.

உங்கள் ஐயாவுக்கு நன்றுகச் சிங்களம பேசத்தெரியாது. உங்களுக்குச் சிங்களமொழியில் இருக்குமளவு விளங்குமாற்றலும், பேசுமாற்றலும் அவருக்கில்லை. உங்கள் ஐயா சிங்களத்தில் அரைகுறைப பேச்சுப் பேசுவார். சிங்களம் விளங்க முடியாது திகைமுக்காடும் போது நீங்கள் உங்கள் ஐயாவைப பகிடிபண்ணிச் சிரிப்பீர்கள்.

உங்கள் அப்பா சிங்களத்தில் அறிவுள்ளவராயிருக்கிறதற்குக் காரணம் என்னவென்று தெரியுமா? அவர் இலங்கைச் சிவில் சேவையில் சேர்ந்தபின் சிங்களம் பேச, எழுத வாசிக்கத் தெரிந்திருப்பது அத்தியாவசியமாக இருந்தது. அதன்மூலம் பதவியேற்றமும், சம்பளஏற்றமும் அரசாங்கத்திடமிருந்து பெறமுடியும். சிங்கள ஆசிரியர் ஒருவரை வீட்டில் வைத்து சிங்களம் படிப்பதற்கு மாதமொன்றுக்கு ரூ 40 வீதம் சிங்களப் பண்டிதர் வேதனம் என்னும் அலவன்சை அரசாங்கம் கொடுத்து வசதியேற்படுத்தியது. கந்தோர் நிர்வாகம் சம்பந்தமாக பொதுமக்களோடு தொடர்புகொள்ளக்கூடிய அளவுக்கு சிங்களத்தில் தேர்ச்சியுண்டா என்பதை அறிந்து கொள்ள அரசாங்கத்தினல் நடத்தப்படும் சோதனையில் சித்தியடைய வேண்டியதும் இன்னெரு காரணம். இக்காரணங்களால் இருபத்திநாலு வயதலே, இரண்டுவருட காலத்துக்குள் சிங்களத்தில் எட்டாம் வகுப்புத்தராதரத்துக்கு ஏறக்குறையச் சமானமான இரு சோதனைகளை எடுத்துச் சித்தியெய்தினர் உங்கள் அப்பா.

உங்களுக்கு வயதும் ஏற ஏற உடலும் வளர்ச்சியடைகிறது. வகுப்பும் உயர, உயரபுத்தியும், திறமையும் தினந்தோறும் நிறைந்துகொண்டேபோகிறது. ஆங்கிலத்தில் தவறின்றி, நிதானமாய், சரளமாய் பேச முடிகிறது. இப்போது உங்களுக்குள்ள இந்தத் திறமைகள் நாளடைவில் முதிர்ந்து, பரந்து நல்லபலன் தரும் என்பது எனது நம்பிக்கை.

### காலம் மாறிவிட்டது

உங்கள் அப்பாவின் காலம் வேறு. தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளைப் படிப்பியாது, தமிழ், சிங்கள, சோனக, பறங்கிப் பிள்ளைகளையெல்லாம் ஒருமித்து வைத்து ஆங்கிலத்தில் மாத்திரம் கல்விகற்பித்து வந்தபடியால், சிலவேளைகளில் எந்தப்பையன் என்னசமூகத்தைச் சேர்ந்தவன் என்ற வித்தியாசத்தைக் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு, மாணவர்கள் 'கிய நாங்கள, எல்லோரும் ஒரு இனப்பிள்ளைகள் போல உண்டு, உடுத்து உறவாடியும், படித்து, பழகி, விளையாடியும், மகிழ்வுடன் வளர்ந்தோம். காலம் மாறிவிட்டபடியால், உங்கள் நாளில், இன்று விளையாட்டிலும் இன வேறுபாடு. பள்ளிக்கூடக்கல்விமுறையிலும் மொழிவேறுபாடு. இப்படிக் கேவலமான சிக்கல்கள உங்கள் அப்பாவின் நாட்களில் இருந்ததில்லை. கிறிக்கெட் பந்தாட்டத்தில் இன்று பல பள்ளிக்கூடங்களில் தமிழ் பிள்ளைகளுக்கும், சிங்களப்பிள்ளைகளுக்குமிடையே போட்டி விளையாட்டுகள் நடக்கப்படுவதாக அறிகிறேன். தமிழ் பேசும் பிள்ளைகள், சிங்களம் பேசும் பிள்ளைகள், ஆங்கிலம் பேசும் பிள்ளைகள் என்னும் பிரிவினை மனப்பான்மை பள்ளிக்கூட வகுப்பறைகளிலேயே வேருன்றிவிடுகின்றது. பிள்ளைகளை - 'பரலல்ஸ்ட்றீம்' அதாவது சமாந்தரமொழி வகுப்புகள் என்று அழைக்கப்படும் மூன்று பிரிவான வகுப்புகளில் படிப்பிக்கின்றார்கள்.

பள்ளிக்கூடங்களில் இப்படியான "பரலல் மொழி வகுப்புகள்" ஏற்படுத்தும் திட்டம் எப்போ, எப்படி உருவாகியது என்று கேளுங்கள். அன்றொரு நாள் உங்கள் ஞானிமாமா கல்விகற்ற றோயல் ஆரம்ப பயிற்சிப்பாடசாலைக்கு உங்கள் அப்பா சென்றிருந்தபோது, அங்கு படிப்பித்த ஒரு ஆசிரியர் உங்கள் அப்பாவைச் சந்தித்துப் பின்வருமாறு கூறினர். "சிங்களப்பிள்ளைகளுக்குச் சிங்கள மொழியில் போதிப்பதற்கு ஒரு பகுதியும, பறங்கிப்பிள்ளைகளுக்கு ஆங்கில மொழியில் போதிப்பதற்கு இன்னுமொரு பகுதியுமாக, இனிமேல்எங்கள் பாடசாலை இரு பகுதிகளாக இயங்கவேண்டும்" என்று கல்வி மந்திரி (சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா அவர்கள்) உத்தரவிட்டிருக்கிறர். அப்பா அந்த ஆசிரியரிடம் விசாரித்தார். "தமிழ் பிள்ளைகளுக்கும், முஸ்லிம் பிள்ளைகளுக்கும் தமிழ் மொழியில் போதிப்பதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது" என்று. "தமிழ்மொழியில் போதிப்பது பற்றி ஒரு உத்தரவுமில்லை" என்றார் ஆசிரியர். உங்கள் அப்பாவுக்குக் கோபம் பொங்கிக்கொண்டு வந்தது. கல்விமந்திரிக்கு விபரங்களை விரைந்து வரைந்தார். கல்வி மந்திரியின் ஒருதலைப்பட்சமான உத்தரவினை வன்மையாகக் கண்டித்துப் புதினப் பத்திரிகைகளுக்கு எழுதினர். மக்கள் அபிப்பிராயத்திற்கு மந்திரியார் மலைந்திருப்பப்பட்டார். கற்றறிந்தோர் வற்புறுத்தலுக்கு தலைவணங்கினர் கல்வி மந்திரியார். தமிழ்பிள்ளைகளுக்கும், முஸ்லிம் பிள்ளைகளுக்கும் தமிழ்மொழியில் கல்விகற்பிப்பதற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கும்படி உத்தரவு பிறப்பித்தார் கல்விமந்திரி அவர்கள். அன்றுமுதல் ஆரம்பமானதுதான் "பரலல் மொழி வகுப்பு படிப்பு முறை".

உங்கள் அப்பாவின் காலத்திலிருந்ததைவிட உங்கள் ஞானி மாமாவின் காலத்தில் வித்தியாசமாகவும், இப்போ உங்களின் காலத்தில் இன்னும் வேறுபல மாற்றங்களையும், எட்டு அல்லது ஒன்பது வயதுப் பிள்ளைகளுக்குரிய மத்திய பிரிவுக் கல்விமுறை அடைந்திருப்பதைக் காணலாம் இக்காலக் கல்வித்துறை அறிஞர் அபிப்பிராயப்படி இம்மாற்றங்கள் அத்தியாவசியமெனக் கருதப்பட்டது

### வீட்டில் பேசும் மொழி

"சிறு பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கச் சிறந்த மொழி அவர்கள் வீட்டில் தினமும் பேசிப் பழகும் மொழியாகும். தங்கள் வீட்டில் எந்த மொழியில் இலகுவாகப் பேசிப் பழகுகின்றார்களோ அந்த மொழியில்தான் பிள்ளைகள் பள்ளிப் படிப்பை ஆரம்பிக்கவேண்டும். அல்லாதவிடத்து அவர்களுடைய ஞாபக சக்தி, நியாய புத்தி, முறை வளர்ச்சிப்பலம் தாக்கமடையும். பிள்ளைகள் தம் சிந்தனைத் திறனை அபிவிருத்தி செய்யாது, பிறமொழிச் சொற்களையும். சொற்றொடர்களையும் மனனம் செய்வதிலேயே புலன்செலுத்துவர். அந்நிய மொழிப் பதங்களின் கருத்துக்களைத் தெரிந்து விளங்கித் தெளிவுகொள்வதில் சதாமனக் குழப்பம் உண்டாவதால் இளம்பிள்ளைகளின் மனவளர்ச்சி தடைப்பட்டும், தரமதமாகியும் சிக்கலடைந்துவிடுகிறது. ஒரு பிள்ளை தனது உண்மையான மனருபத்தை சுயகோலத்தை-வெளிப்படுத்த உதவுவது அப்பிள்ளையின் சிறந்த சுகமான மொழியாகும். பிள்ளைகள் தங்களின் உள்ளத்தெழுச்சிகளையும், உணர்ச்சிகளையும், எண்ணங்களையும் விளங்கச்சொல்ல, அவர்களின் விருப்பத்திற்குரிய இலகுவான வீட்டுப் பாஷை எதுவோ, அதுவே வசதியானது. அந்த மொழி எதுவாயினும் சரி, அதைத்தான் நான்'சுகபாஷை' அதாவது பிள்ளைகளுக்குப் பேச, விளங்க, படிக்க இலகுவான மொழி என்று இங்கே குறிப்பிடுகின்றேன். சுவபாஷை வேறு 'சுகபாஷை' வேறு; சுவபாஷை, சொந்தப்பாஷை, தாய்ப்பாஷை என்பன ஒரு பொருட் சொற்றொடர்கள், 'சுகபாஷை,' இலகுவான பாஷை, வீட்டுப்பாஷை என்பன ஒரு பொருள் சொற்றொடர்கள். ஆகையால்தான், நான் சாதாரணமாக வளக்கத்திலிருந்துவரும் "தாய்ப் பாஷை" என்னும் சொற்றொடரைப் பாவியாது, எனது சொந்த ஆக்கமாகிய 'சிறந்த வீட்டுப் பாஷை" என்னும் சொற்றொடரை ஒரு நல்ல உயர்ந்த நோக்கத்துடனேயே இங்கு எடுத்தாண்டுள்ளேன்."

### சிவில் சேவை

சிவில் சேவையை விட்டு விலகி சர்வகலாசாலைப் பேராசிரியராகக் கடமையாற்றத் தொடங்கிய நாள்முதல், கல்வித்துறை, கல்வி கற்பித்தல் துறை ஆகியவற்றில் எனது கொள்கையைப் பலவழிகளாலும் வற்புறுத்தி வந்திருக்கின்றேன்.

### சுவபாஷை

உங்களுக்கே தெரிந்த விஷயம்: சில தமிழ்க்குடும்பங்களிலும், சிங்களக் குடும்பங்களிலும் பெற்றோர் ஆங்கிலத்திலேயே எப்போதும் பேசுவார்கள். ஆனதினல் அவர்களின் பிள்ளைகளும் ஆங்கிலத்திலேயே பேசி வளர்ந்திருக்கிறார்கள். அந்தப்பிள்ளைகளின் "சுகபாஷை" அதாவது சுகமான வீட்டுப்பாஷை எதுவென்றுல் ஆங்கிலமேதான். தமிழுமல்ல, சிங்களமுமல்ல. ஆனல் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கும்போது, தமிழ்ப்பிள்ளைகள் என்ற காரணத்தால் தமிழ் மொழியிலும், சிங்களப்பிள்ளைகள் என்ற காரணத்தால் சிங்கள மொழியிலும் படிக்க வேண்டும், என்று கட்டாயப்படுத்துவதால் பிள்ளைகளுக்கேற்படும் வசதியீனங்கள் பலவாகும். அச்செய்கை பிள்ளையின் அறிவு வளர்ச்சிக்குமட்டுமல்ல உடல் வளர்ச்சிக்கும் பங்கமாகும். எந்த மொழி பேசும் பிள்ளைகளுக்கும் இந்த உதாரணம் பொருந்தும்.

சுவபாஷை என்பது பிள்ளையின் பெற்றோருடைய பிறப்பு மொழி பிள்ளையின் பெற்றோர் தமிழராயிருந்தால் தமிழ் மொழிதான் அவர்கள் பிறப்பு மொழி. ஆனல், சில தமிழ்ப் பெற்றோர் அதிகமாக ஆங்கிலத்திலேயே வீட்டில் பேசுகின்றனர் என்று வைத்துக் கொள்ளுவோம். அப்பெற்றோரின் பிள்ளைகள் ஆங்கில மொழியை தினமும் கிரகித்து வருவதால் அப்பிள்ளைகளுக்குத் தமிழிலும் பார்க்க ஆங்கிலத்திலேயே விரைவாகப்படிக்க விளங்க முடியும். கொழும்பு செட்டிகளின் குடும்பங்களிலுள்ள மொழிப் பாவனைமுறை இதற்கோர் சிறந்த உதாரணம்.

பார்த்தீர்களா, இராஜ்குமார் இப்படியான குடும்பத்திலுள்ள ஒரு பிள்ளைக்கு சுவபாஷை தமிழாயிருந்தபோதிலும் உண்மையில் அதன் 'சுகபாஷை' ஆங்கிலம் அல்லவா? எந்த முக்கியமான வித்தியாசத்தை நீங்கள் எப்போதும் மனதில் வைத்திருப்பது நல்லது. ஆனல் உங்களுக்குச் சுகபாஷையும் சுவபாஷையும் ஒன்றுதான். அது உங்கள் தாய் மொழியாகிய தமிழேதான். இது உங்களுக்கு நல்ல வாய்ப்பாகும். மீட்டும், மீட்டும் நான் வற்புறுத்துவது என்னவென்றுல், பெற்றோர் எம்மொழிக்குரியவராயிருப்பினும், [illegible]பார் எம்மொழி அபிமானியாயிருப்பினும் காரியமில்லை. பிள்ளையின் நலம் கருதி, அந்தப் பிள்ளையின் "சுகபாஷை"யில். அதாவது அதன் சிறந்த, சுகமான, வீட்டில் பேசிப்பழகும் பாஷையில்தான் பள்ளிக்கூடத்திலும் கல்விகற்பிக்க ஆரம்பிக்க வேண்டும்.

நீங்கள் ஆங்கிலம் படிக்கத் தொடங்கிய நாட்களில் "படம் பார்த்துப் படித்தல்" என்னும் நேரடி முறையினல் உங்கள் பெற்றோர் அம்மொழியை உங்களுக்குக் கற்பித்தனர். அதனல்தான் நீங்கள் இன்று தமிழிற்போலக் கெட்டித்தனமாகவும், சுகமாகவும் ஆங்கிலத்திலும் வாசிக்க எழுத முடிகிறது.

### பொறுப்பு மிக்கது

எனதுள்ளத்தில் ஊறிப்போன இன்னுமோர் கொள்கை "நீங்கள் வளர்ந்துவரும் நாட்களில் மேல்வகுப்புகளில் உங்களுடைய ஆசிரியர்கள் விஞ்ஞான பாடங்களை ஆங்கிலத்தில் மட்டும் கற்பிக்க வேண்டும். இதற்கேற்றமாதிரி பள்ளிக்கூடத்தில் படிப்பித்தல் முறை அமையவேண்டும். தமிழிலே புதுச் சொற்களைக் கண்டுபிடித்தோ, உண்டாக்கியோ சேர்த்து, அதன்பின் தமிழ்மொழிமூலம் விஞ்ஞானம் கற்பிப்பது தமிழ் அபிமானமாகாது. தமிழ்மொழிச் சேவையும் ஆகாது. தமிழ்மொழி வளர்ச்சியடையவும் உதவாது. தமிழ் பிள்ளைகளுக்குத் தீமை விளைவிக்கும் கைங்கரியமாகவே அந்தக் கற்பித்தல்முறை அமையும். மொழி அபிமானம் மொழி அபிவிருத்திபற்றிப் பேசுவதெல்லாம் ஒருபுறம் பிள்ளைகளுக்கு மொழி அறிவுண்டாக்கல், கல்வி கற்பிக்கும் முறை என்பன வித்தியாசமானதும், பொறுப்பு நிறைந்ததுமான விடயங்கள் ஆகும். இந்த இரு வேறு அம்சங்களையும் கலந்து, மாறிப் புரிந்துகொள்வதால் கஷ்டமடைபவர்கள் எம்குழந்தைகளே. எமது நாட்டின் எதிர்காலத்திற்கு அது நட்டம்."

நீங்கள் செய்யவேண்டியது என்னவென்றுல் ஆங்கிலத்திலும் தமிழிலும் நிறைந்த அறிவும், திறமையும் அடையும் வண்ணம் கெட்டித்தனமாகப்

(10-ம் பக்கம் பார்க்க)

# இந்திய நாடக மேடை

## பத்தாண்டுக்காலத்தில் பல மாற்றங்கள்

—கமலாதேவி சட்டோபாத்தியாயா—

**வேகமாக இயங்கும் உலகிலே நாம் வாழ்கின்றோம். ஆதலால் பொறுமை குறைந்த சபையோர் சுருக்கமான நாடகங்களையே வேண்டுகின்றனர். நாடகங்களுக்குப் புராண இதிகாசங்களை விட, வழக்கிலுள்ள சமுகப் பிரச்சினைகளே பொருளாக அமைய வேண்டுமென்பதே இன்றைய போக்காகும்.**

எக்காலத்தையும், எந்நாடுகளையும், இயற்கைச் சூழ்நிலைகளையும் சேர்ந்த எல்லா மக்களிடத்தும் மேடைக்கலை மோகம் ஆழ வேரூன்றியுள்ளது. இந்தியாவிலே, முற்காலத்தில், இக் கலைகளில் பல விழாக்களையும், ஆலயங்களையும் சுற்றி வளர்ந்தன. இவற்றிலிருந்து, தனிப்பட்ட குடும்பங்களையோ அல்லது வட்டாரங்களையோ சேர்ந்த பரம்பரை நடிகர்களாலான நடிகர் குழுக்கள் உருவாகின.

இவற்றுள், கூடிய பிரசித்தம் பெற்றவை பொதுவாக மக்கள் சீர் குன்றியதாலும் ஆதரவு குறைந்ததாலும் ஆரம்ப மலர்ச்சி மறைந்து மங்கிய நிலையாயினும் இந்தியக் கிராமங்களில் இன்னும் வழங்குகின்றன. வேலை குறைந்த காலங்களில், விவசாயிகளும் அவர்களது சமுதாயத்தினரும் இந்நடிகர் குழுக்களின் கலை நிகழ்ச்சிகளைப் பொழுது போக்காகக் கொண்டதால், இம்மேடைக் கலைகளில் சில காலத்துக்குக் காலம் நிகழ்த்தப்படுவன ஆயின. எனவே, உண்மையாய் உணர்ந்து அனுபவித்தலைவிடப் பெரிய பரிசு ஒன்றையும் வெட்காது, களிப்பையும் சிரிப்பையும் பரப்பியபடியே இவர்கள் தமது பகுதிக் கிராமங்களைச் சுற்றினர். நீண்ட கோடை இரவுகளில், ஒளி வீசும் தாரகைகளின் கீழ், தங்கள் உறங்கும் மனங்கள் விழிப்படைய சோர்வுற்ற இதயங்கள் மலர்ச்சியடைய இந்நடிகர்களின் குதூகலத்தையும் இசையையும் தத்துவக் கருத்துக்களையும் அனுபவித்தவாறு இருப்பர்.

### அனுபவத்தின் சாதனை

இந்நாடகங்கள், கிராமியக் கலைகள் சில சமயங்களில் இருப்பது போல் சிறப்பற்றவையாய் இருக்கவில்லை. இவற்றுள் சில சிறந்த இலக்கியப் பகுதிகள் பின்னணியில் பாடப்பட நடனத்தால் ஆடப்படும் பண்டைச் சீரிய நாடகங்களாயிருந்தன. உலகம் அளித்துள்ள மிகச் சிறந்தவற்றுள் சிலவான இவையெல்லாம் பல நூற்றாண்டுகளின் ஆராய்ச்சியின், பரிசோதனையின், அனுபவத்தின் சாதனையாகும். இயல்பான திறமையும் மேதா விலாசமும் எவ்வளவு தூரத்திற்கு இவற்றிலுள்ளன என்பதை இதிலிருந்து ஊகிக்கலாம்.

இதிலிருந்து முக்கியமான உண்மையொன்று தெளிவாகிறது. கடந்த கால இந்தியாவிலே கலை, தொழில்களின் எல்லா நிலைகளிலும் போலப் பண்டைய சீரியநாடகமும் மக்களிடையே தோன்றிய கலைஞர்களால் சிருஷ்டித்து வளர்க்கப்பட்டதே அன்றி சமுதாயத்திலிருந்து பிரிந்து நின்ற விகார புத்திக்காரர்களால் அல்ல. மிகச் சிறந்த கலா சிருஷ்டிகளெல்லாம் முழுச் சமுதாயத்திலிருந்து பிறந்தனவாதலால், அவர்களின் பண்பாட்டு நிலை மிக உயர்ந்ததாகவும், எமது சமுதாயங்களை இன்று பிரிக்கும் கலாச்சார இடைவெளி அன்று இத்தனை பெரிதாகவும் இருக்கவில்லை என்பதும் இதனல் பெறப்படும்.

பொருளாதாரப் பிரிவுகள் எப்படியாய் இருந்திருப்பினும் பொது மக்கள் கலாச்சாரப் பண்புகளோடு முற்றாகத் தொடர்பிழந்து விடவில்லை. இப்படி இல்லாது, நாட்டினது பண்பின் உறைவிடமாய் மக்கள் இருந்திராவிட்டால் இவற்றுள் சிலவோ அன்றி எல்லாமோ அடியோடு தொலைந்து போயிருப்பன. தலைமுறைக்குத் தலைமுறை, முன்னோர் கண்டுபிடித்த பேருண்மைகள், அவர்கள் வகுத்த தத்துவங்கள், உருவாக்கிய கலைகள் ஆகிய, இப் பெருந்திரளினரின் தூய உள்ளங்கள் பயபக்தியோடு வளர்த்த இச்செல்வங்களில் சிலவாவது எதிர்கால சந்ததியினருக்கும், எமது அறியாமை மலைந்து நாம் நமது கலாச்சார மரபுரிமை வளத்தை உணரும் நாள் வரைக்குமாகக் காப்பாற்றப்பட்டுள்ளன.

### புதிய மறுமலர்ச்சி

சுதந்திரம் எமது கலாச்சார வாழ்விலே ஒரு புதிய மறுமலர்ச்சியைஏற்படுத்தியுள்ளது. ஏற்கெனவே, தேசிய விழிப்புணர்ச்சியின் எழுச்சி, பட்டுப்போனவையெல்லாம் பச்சிளம் துளிர் விட்டுத் தழைப்பதற்கான ஊக்கமளித்து வருகின்றது. ஆனல், தேசிய விழிப்புணர்ச்சியின் எழுச்சி எவ்வாறு கலாச்சார வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக அமைகிறதோ அவ்வாறே கலாச்சாரத்தின் வெவ்வேறு அம்சங்களும் தேசிய கௌரவத்திற்கும் சுதந்திரக் கற்பனைக்கும் வழிகோலுகின்றன. ஏனெனில், செப்பமற்றதை நேர்த்தியான உலோகமாக மாற்றும், குழம்பிய ஒலிகளை இசையாக மாற்றும், மனித குலத்தின் இலட்சியங்கள் அபிலாஷைகள், அவற்றை அடைவதற்கான போராட்டங்கள், அப்போராட்டங்களில் வெளிப்படும் உணர்ச்சிகள், அவற்றின் ஏற்ற வீழ்ச்சியின் வேகம், அவர்கள் உணரும் வெற்றிகள் ஏமாற்றங்கள்—முதலிய பலதிறப்பட்ட செப்பமற்றதும் நுண்மையானதும், பலவீனமானதும், பலமானதுமான பன்னிழைகளை நாடகமாக நெய்யும் மந்திரக் கோலே கலையுணர்வு. இதன் வழியேதான், மனித குலம் கேள்வி எழுப்பும் தன் மனதைவிட்டு மேலெழுந்து நேரடியான அனுபவத்துறையில் பிரவேசிக்கின்றது. இதனல் தான் நாடகம் இத்தனை முக்கியமானது என்பதுடன் நாடகம் அளிக்கப்படும் முறையைப் போல அதன் பொருளும் முக்கியத்துவம் வாய்ந்தது. பர்னட் ஷா சொல்லுவது போல்: "கற்பனையின் மூலமே உண்மைகளை அறிவூட்டுவனவாக மட்டுமன்றி, விளங்கக்கூடியனவாகவும் ஆக்க முடியும்."

பழையது தன்னுருவை இழந்து வரப் புதியது தன் ஏற்றத்தை நிலைநாட்டுவதற்கு வேண்டிய துணிவையும் வலிமையையும் அடையப்பெருத பெரும் மாற்றங்கள் நிகழும் காலமாக இது விளங்குகிறது.

### நாடகம்

சிருஷ்டிக்கும் தன்மைபெற்ற உள்ளத்தின் மிகுந்த சக்தி வாய்ந்த முதிர்ச்சியுள்ள சித்திரிப்பே நாடகமாகும். இது எல்லாக் கலைகளினதும் தொகுப்பாகும்: சிற்பம், சித்திரம், நாடகம், நடனம், இசை, கவிதை ஆகியவற்றின் திறமையான சேர்க்கை மனித மனத்தையும் புலன்களையும் தவிர்க்க முடியாது கவருகின்றது விசேஷமாக பெருந் தேசியநெருக்கடியின் தாக்குதலின் கீழ் கற்பனையின் ஊற்றுகளும், செயல் ஆற்றலும் அவற்றின் சாதாரண வேகத்தை மீறிப் பாய்கின்றன.

நாடகத்துறையின் முன்னேற்றம் வியக்கத்தக்கது. நாடெங்கும் இடைபொழுது போக்காகவும் வாழ்க்கைத் தொழிலாகவும் கொண்ட ஆயிரக்கணக்கான குழுக்கள் தோன்றியவாறே இருக்கின்றன.

எங்கள் கலாச்சாரத்தின் மற்றும் அம்சங்களைப்போல். தற்கால இந்திய நாடகத்தையும் பாதித்துள்ள ஒரு முக்கிய காரணம் மேலைத் தேயங்களாகும். மேற்கத்திய நாடகமுறைகளும் மேடைக்கலையும் எங்களதற்கு மிகவும் பயன்படுகின்றன. நீண்டவிரிவான நாடகங்களினதும் எமது பண்டைய நாடகங்களுக்குரிய நீண்ட தன்னுரைகளினதும் விரிவான வருணனைப் பகுதிகளினதும் இடத்தை நறுக்கான, கூடிய நேரடியான வசனங்களுள்ள குறு நாடகங்கள் எடுக்கின்றன.

### இன்றைய தேவை

வேகமாக இயங்கும் உலகிலே நாம் வாழ்கின்றோம். ஆதலால், பொறுமை குறைந்த சபையோர் சுருக்கமான நாடகங்களையே வேண்டுகின்றனர். நாடகங்களுக்குப் புராண இதிகாசங்களை விட வழக்கிலுள்ள சமுகப்பிரச்சினைகளே. பொருளாக அமைய வேண்டுமென்பதே இன்றைய போக்காகும். நாடகத்தில் கூடிய வேகமும், நாடக அமைப்பில் அடையாள முறைமையைவிட யதார்த்தமே வேண்டப்படுகின்றது. கூடிய செல்வாக்குப் பெற்றுவரும் ஓரங்க நாடகங்கள் நாடகத்தில் இன்னுமொரு புதிய அம்சமாகும்.

இப்புதிய போக்குகள் இந்திய நாடகத்திலே புதியமுறைகளை அமைக்க உதவியபோதும் புதிய சீரிய அல்லது ஜனரஞ்சகமான அமைப்புகள் தோன்ற இன்னும் காலமிருக்கிறது. அமைப்பிலே விரைவான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சென்ற பத்தாண்டு காலத்தில் கூட இந்திய நாடகம் பல மாற்றங்கள் அடைந்துள்ளது. ஆயினும் ஒவ்வொரு இந்தியப் பிரதேசமொழியிலும் அவற்றுக்குரிய அமைப்போடு நாடகங்கள் இருப்பதால் பொதுப்படையாகக் கூற முடியாது. எனினும், இவையெல்லாம் ஒரே விதமான சக்தி வாய்ந்த தற்காலப் பாதிப்புகளை உணர்வதால் காலக்கிரமத்தில் எல்லாப் பிரதேச மொழிநாடகங்களுக்கும் அவ்வவற்றின் ஸ்தலப்பிரதேச மண்வாசனையோடு, சில தேசியப் பண்புகள் தோன்றலாம்.

### இந்தியத் தழுவல்கள்

இக்கால நாடகத்தின் ஒரு சிறு, ஆனல் பெருமளவு முக்கியமான பகுதி தான் மேனாட்டு நடனங்களின் மொழி பெயர்ப்புகள் அல்லது அவற்றின் இந்தியத் தழுவல்கள். இவையும் இந்தியாவின் புதிய நாடகத்தை அமைப்பதற்குக் குறிப்

(10-ம் பக்கம் பார்க்க)


## தாயும் மகளும் நவ நாகரீகமாகத் திகழ உகந்தது ஜம்பிங் பிஷ்

### பிரிண்டட் பேப்ரிக்

தாயும் மகளும் நவநாகரீகமாக உடுத்துவதற்கு இந்தப் புதிய பேப்ரிக்குகளை நிச்சயம் நீங்கள் தேர்ந்தெடுப்பீர்கள். இந்த அச்சடி கேம்பிரிக்குகள் பிரகாசமானவை, கறையில்லாதவை, நீடிய காலம் உழைப்பவை. குறைந்த விலையில் கிடைப்பவை. பல கலர்களிலும், பல்வேறு டிசைன்களிலும் கிடைப்பவை. இன்றே ஜம்பிங் பிஷ் பேப்ரிக்குகளில் நீங்களும் தைத்து உடுத்துங்கள் —இது சிக்கன வாழ்விற்கு ஸி. டப்ளியூ. ஈ. அளிக்கும் அன்பளிப்பு.



ஏக விநியோகஸ்தர்கள்: சி. டப்ளியூ ஈ.

கிடைக்குமிடங்கள்: சி. டப்ளியூ. ஈ. இலாகா, ஸ்டோர், கோட்டை, கொழும்பு மக்கலம் ரோட், மெயின்வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும்- CWE ஸி. டப்ளியூ- ஈ, தரத்திலும் ரகத்திலும் உயர்ந்த பொருட்களையே உங்களுக்கு அளிக்கின்றது

**வானத்திலே பவனி வந்துகொண்டிருந்த சந்திர னைச் சுற்றிப் படர்ந்திருந்த பரிவட்டத்திலிருந்து நேரம், நடுநிசியைத் தாண்டிவிட்டதென்பதை மன் னன் உணர்ந்தான்.**

**கலை நிறைவோடு பவனி வந்த முழுமதியில் யாழ்ப்பாண இராச்சியம் குளித்துக்கொண்டிருந் தது.**

# திருவன்

'செங்கை ஆழியான்'

நல்லூர்க் கந்தனின் ஆலய காண்டாமணியின் 'கணீ' ரென்ற நாதம், யாழ்ப்பாண இராச்சியத்தின் பெருமையை விளக்கும் அரண்மனையிலும், செல்வச் செழிப்பைப் பறை சாற்றிக்கொண்டு எழுந்திருந்த மாளிகைகளிலும், ஏழ்மையின் சின்னங்களாக விளங்கும் மண் குடிசைகளிலும் நாதவெள்ள மாகச் செறிவோடு நிறைந்து, கேட்டோரை 'முருகா' என்று முணுமுணுக்க வைத்தபின் தேய்ந்து அழிந்தது. நாதத்தின் இனிமை காதுப்பறைகளில் மோதியபோதுகூட குணவீரசிங்கையாரியன், சிந்தனை கலையாது அரண்மனை மேன் மாடத்தில் அமர்ந்திருந்தான். நினைவு அலைகள் கொந்தளித்து, அவனை எங்கெங்கோ வெல்லாம் இழுத்துச் சென்று நெடுந்துயரை ஊட்டின.

மாலை நீங்கி இரவு படர்ந்த பின்பும், குணவீரனின் சிந்தனை கலையவில்லை. நிழலுருவாக, எழிலோடு தூரத்தில் தெரிந்த கந்தனாலயத்தின் கோபுர விமானத்தை அவன் கண்கள் பார்த்தபோதிலும், பார்ப்பதாக அவனால் உணர முடியவில்லை; அவன் அறையில் பணிப் பெண்கள் விளக்கேற்றியதையோ வாசனைத் தூபமிட்டுப் புகையெழுப்பி, அறையில் நறுமணத்தைத் தவழ விட்டதையோ, அவன் காணவோ உணரவோவில்லை. இருளிடையே எதையோ தேடுபவனாக யாழ்ப்பாணத் தமிழ் மன்னன் நின்றிருந்தான்.

"கலீர்......கலீர்......" என்று பாதச் சிலம்பொலி மெதுவாகத் தாளலயத்தோடு எழுந்து மேன் மாடத்தை நாடி யாரோ வருவதை முன்கூட்டியே அறிவித்தது.

"சுவாமி...!" - யாரோ இனிமையைக் குரலிலிட்டு அழைத்தும், மன்னன் திரும்பவில்லை.

"சுவாமி......!" - திரும்பவும் அழைப்பு எழுந்தது. குணவீரனின் தோளிலும் கைவைத்துக் குரலிற்குரியவள் உலுப்பினாள்; மன்னன் நினைவு ஏற்றத்திலிருந்து இறங்கினான்.

"தேவி...! இப்போதா வந்தாய்...?" என்றவன் அவளின் கரங்களைப் பற்றியபடி அவளை ஏறிட்டுப் பார்த்தான். துணைவனின் பார்வையின் வேகத்தைத் தாங்காது அவள் தலைகுனிந்து சற்று மௌனமானாள்; குழலிர் கமழ்ந்த நறுமணமும் உச்சி வகிடும் மன்னனை வெற்றிகொள்ள முடியவில்லை. ராணியே பேசினாள்

"நாளைக்கு ஏர்மங்கல விழா என்பதைத் தாங்கள் மறக்கவில்லையே...?"

"மறக்கவில்லைத் தேவி!...... அதை மறக்காததால்தான் நான் இன்று வேதனைபடுகின்றேன்!... ஏரைக் கையால் வலுவோடு பிடித்து நாடு நன் மழையும், நல்விளைவும் பெறப் பிரார்த்தித்து நான் வயல் உழும் அந்தக்காட்சியைக்காண நாளை மக்கள் கூடப்போகிறார்கள்! மங்கல வாத்தியங்கள் ஒலிக்க, ஏரைச் சையிற்பற்றி நிலத்தில் அமுக்கி நான் உழுகின்றபோது என் கண்கள் அந்த மக்கள் கூட்டத்திடையே புன்னகைமாறாது, அலட்சியமாக நிற்கும் அந்த ஒருவனைத் தேடுமே...? அந்த ஒருவன்...... இன்று எங்கே? அவன் புன்னகை காணாது நான் எப்படி ஏரினால் நிலத்தைக் கீறுவேன், தேவி....? திருவம்பலவா! என் நினைவில் அழியாது ஒன்றிய உன்னை நான் இழந்துவிட்டேன். .! ஏர்மங்கல விழாவின்பின் 'கைவிசேஷம்' கொடுக்கப்போகிறேன்! வெற்றிலை, பாக்கோடு பணமிட்டு நான் தரும்போது உனக்கே உரித்தான அப் புன்னகையோடு இரு கைகள் நீட்டி வாங்குவாயே? பின் நானிட்ட நெல்லை எண்ணி ஒற்றையா, இரட்டையா என்று கணக்கிடுவாயே!... தேவி! நாளை யாருக்கு நான் கைவிசேஷம் அளிக்கப்போகிறேன்?" என்ற குணவீரசிங்கையாரியனின் கண்கள் பனித்தன. மஞ்சத்தைநாடிச் சென்று 'பொத்'தென அதிற் சாய்ந்தான்.

ராணியால் எதுவுமே பேச முடியவில்லை; திருவம்பலவனை எண்ணியபோது அவளுக்கும் வேதனையாகத்தான் இருந்தது; சிரித்துச்சிரித்துப்பேசிப் பிறரையும் சிரிக்கவைத்த அவன், அரண்மனையில் உள்ளவர்களால் நட்பாக நடத்தப் பட்டவன், அவன் இன்று இல்லை. அவன் எண்ணாந்த வேதனையில் தான் மன்னவன் கலங்கின்றான் என்பதை ராணி அறிவாளாயினும் அவன் மனதை வேறுவழியில் திருப்ப எண்ணி, "சுவாமி....!" என்றழைத்ததோடு மன்னனின் முகத்தோடு தன் முகத்தைப் பொருத்தினாள்.

"மன்னா! மன்னா!..." திருவம்பலவன் ஓடிவந்தான்; வேர்த்து 'விறுவிறு'த்துவரும் அவனைச் சிரித்தபடி குணவீரன் வரவேற்றான். கலைந்த தலையோடு, கண்களில் ஏதோ அவசரம் பொங்க வந்த திருவம்பலவன் "மன்னா! இப்படி ஒரு அநியாயம் எங்காவது நடக்குமா?..." என்று கேட்டான்.

"என்ன திருவா? அப்படி என்ன அநியாயம்...? எங்கே நடந்தது...?"

"இங்குதான் மன்னா! குணவீரச்சிங்கையாரிய இராசன் இராச்சியத்தில்தான்...!"

"அப்படி என்ன அநியாயத்தைக் கண்டுவிட்டாய்?"

"திருநெல்வேலி வீதியிலே, புழுதியோடு புழுதியாக ஓர் உயிர், புரவியொன்றின் கால்களினால் சிதைக்கப்பட்டுவிட்டது...! உங்கள் ஆட்சியில் இது நடக்கலாமா?..."

மன்னன் 'விருட்'டென ஆசனத்தினின்றும் எழுந்தான்.

"அந்தப் புரவியைச் செலுத்தியவன் யார்?"

"யாரென்று தெரியவில்லை அரசே! அந்த 'எறும்பை' நசித்துக் கொன்றுவிட்டு வேகமாக ஓடி மறைந்துவிட்டான்!"

இதைக்கேட்ட மன்னன் வாய்விட்டுச் சிரித்தான்; திருவன் முகத்தை "உர்"ரென்று வைத்துக்கொண்டான்.

"என்ன இங்கு பலமாகச் சிரிப்பொலி கேட்கிறதே...?" என்று வினவியபடி ராணி வந்தாள்.

"ஓ! திருவன் இங்கேயா இருக்கின்றான்? அதுதானே பார்த்தேன்!" என்றவள், ஏதோ நினைவு வந்தவள்போல மன்னன் பக்கந்திரும்பி, "உங்களுக்கு ஒன்று தெரியுமா?" என்றாள்.

"என்ன தேவி?"

"இன்று இந்தத் திருவனின் மாமன் மகள் இங்கு, என்னிடம் வந்திருந்தாள்! வந்து, 'இவன் தன்னை மணக்கமாட்டேன், என்று சொல்லிவிட்டானாம்' என்றுகூறி அழத்தொடங்கிவிட்டாள்... நான் ஆறுதல் கூறி அனுப்பி வைத்தேன்! திருவனைக்கேளுங்கள்!"

மன்னவன் திருவன் பக்கந் திரும்பினான்.

"எனக்குக் கலியாணம்செய்ய விருப்பமில்லை அம்மா!"

"ஏன் திருவா, மாமன் மகளைப் பிடிக்க வில்லையா! நீ வேறு யாரையாவது...? நீ ஒருத்தியை விரும்பி மணப்பதிலும் உன்னை விரும்பும் ஒருத்தியை மணப்பதுதான் வாழ்க்கைக்கு நல்லது!"

"அப்படி ஒன்றுமில்லை! கலியாணம் செய்யப் பயமாகவிருக்கிறது!"

மன்னனும், ராணியும் சிரிக்கத் தொடங்கினார்கள்.

"ஏன் சிரிக்கிறீர்கள்?!

"அட திருவா! நீ உணர்ச்சியற்றவனடா! அன்பு, காதல், நட்பு என்று ஒரு பந்தமுமில்லாத மரமாக இருக்கிறாயே? உனக்கு அன்பென்றால், காதலென்றால், நட்பென்றால் என்னென்று தெரியுமாடா? சிரித்துச் சிரித்துப் பேசி பிறரைச் சிரிக்க வைப்பதைத்தவிர வேறுனக்கு என்னதான் தெரியும்?"

சாப்பிடத் தெரியும் என்றான் திருவன்.

மஞ்சத்திற் படுத்திருந்த மன்னன் துடித்துப் பதைத்து எழும்பினான்; 'திருவா! திருவா!'

## சிறுகதை

எனக் குரலிட்டான்; பக்கத்தில் துயின்று கொண்டிருந்த ராணி திடுக்கிட்டு முழித்தாள்.

"சுவாமி! இதென்ன, கனவு கண்டீர்களா?"

"இல்லை, இல்லை! கனவு நான் காணவில்லை! ஆமாம் கனவுதான் கண்டேன்! தேவி! திருவன் என் கனவில் வந்தான்!"

"நீங்கள் இன்று முழுவதும் அவனையே நினைத்துக்கொண்டிருந்ததால் உங்கள் நினைவு கனவாகவந்திருக்கிறது. அமைதியாகத் தூங்குங்கள்!..."

மன்னன் மெதுவாக மஞ்சத்தைவிட்டிறங்கிச் சாளரத்தை நோக்கி நடந்தான். அவனைத் தொடர்ந்து வந்த ராணி சாளரத்திரையை இழுத்து நீக்கினாள்.

வானத்திலே பவனி வந்து கொண்டிருந்த சந்திரனைச்சுற்றிப் படர்ந்திருந்த பரிவட்டத்திலிருந்து நேரம், நடுநிசியைத் தாண்டிவிட்டதென்பதை மன்னன் உணர்ந்தான். கலைநிறைவோடு பவனிவந்த முழுமதியில் யாழ்ப்பாண இராச்சியம் குளித்துக்கொண்டிருந்தது.

"தேவி....!"

"...ம்...."

"திருவனை நான் உணர்ச்சியற்றவன் என்றும், அன்பு, காதல், நட்பு என்ற பந்தமற்றவனென்றும் ஏசினேன்."

"அவனையா ஏசினீர்கள்?"

"ஆமாம்! அவனால் அன்பு செலுத்த முடியாது; ஆனால் பிறர் தன்மீது அன்பு வைக்கத்தக்கதாக அவனால் நடக்க முடியும்!"

"அன்பு செய்யத்தக்கதாக நடக்கமட்டுந்தானா அவனுக்குத் தெரியும்? அவன் செய்த அந்த ஒரு செயலால், தியாகத்தால் அவன் எல்லாரிலும் எவ்வளவு பெரியவனாகிவிட்டான்...!"

மன்னன் பரிவட்டத்தைப் பார்த்தான். கோமாளி என்றும் நட்புக்கொள்ளத் தெரியாதவனென்றும் மன்னனால் மதிக்கப்பட்ட திருவம்பலவன் அப்பரிவட்டத்தினின்றும் சிரித்தான்.

"திருவா....! மன்னனின் கண்கள் கலங்கின.

ஒருநாள் இரவு 'படபட' வெனத் திருவம்பலவன் வீட்டுக் கதவை யாரோ தட்டினார்கள். தட்டப்பட்ட விதத்திலிருந்து தட்டுபவனின் மனநிலையை உணர்ந்து கொண்ட திருவம்பலவன் வேகமாகச்சென்று கதவைத் திறந்ததுதான் தாமதம் 'விர்'ரென உள்ளே நுழைந்த ஒருவன் திறந்த கதவைச் சாத்திப்பூட்டினான்.

மங்கிய விளக்கொளியில் வந்தவனின் முகம் ஓரளவு தெரிந்தது. வியர்வை பயத்தைக் காட்டியபடி நெற்றியில் துளிர்க்க அவன் நின்றிருந்த தோடு பேசவுஞ்செய்தான்.

"நண்பா! என்னை மறந்துவிட்டாயா?"

கேட்டகுரலாகத் திருவம்பலவனுக்குப் பட்டது. வந்தவனின் முகத்தைக் கூர்ந்து கவனித்தான்.

"இமையாணா..? நீயா..?" அவன் ஆச்சரியத்தோடு கூவியபடி அவனைத் தழுவினான். பழைய நினைவுகள் சில மனத்திரையில் நிழலாடின. இமையாணனோடு சிறுவயதில் ஒன்றாகத் திரிந்ததும், விளையாடியதும் நினைவு வந்தது. மாமரத் தோப்புகளில் மாங்காய் களவாடியவைகூட நினைவில் உருப்பெற்றன. ஒருமுறை அவனுக்குப் பாம்பு தீண்டியபோது தன்னுயிரைப்பற்றிச் சிந்தியாது, பாம்பு தீண்டிய கடிவாயில் தன் வாயைப் பதித்து விஷத்தை உமிழ்ந்து துப்பி, அவனைக் காப்பாற்றிய இமையாணன், நெற்றியிலே வியர்வை துளிர்க்க, வெகுவேகமாக ஓடி வந்ததால் உடல் இரைக்க நின்றிருந்தான்.

"இமையாணா' நீயா? என்னால் நம்ப முடியவில்லையே? இன்றாவது என் நினைவு வந்ததே?"

"நினைவு வரவில்லை நண்பா! என்னைத் துரத்திவரும் ஆபத்து உன் வீட்டை நாடி ஓடி வரச் செய்தது!"

"ஆபத்தா? என்ன கூறுகிறாய்?"

"ஆபத்துத்தான்! முதலில் எனக்கு அடைக்கலம் அளி நண்பா! பின் யாவற்றையும் நானே கூறுகிறேன்"

திருவன் அவனுக்கு அடைக்கலம் அளித்தான். ஆபத்தில் உதவுவது நண்பனின் கடமை என்ற எண்ணத்தினாலும் பழைய சில நினைவுகளின் உந்தலினாலும் இமையாணனுக்குத் தயங்காது அடைக்கலந் தந்தான்.

விடியற்காலைவேளையில் திரும்பவும் திருவம்பலவனின் மாளிகைக் கதவு 'படபட'வெனத் தட்டப்பட்டது; திருவன் கதவைத் திறந்தான்; அரண்மனை வீரர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். திருவன் வித்தியாசமாக எதுவும் எண்ணவில்லை. மன்னர் தன்னை வரும்படி அழைத்திருப்பார் என்றே எண்ணி, வீரர்களை வந்தகாரணம் என்ன? என்று கேட்பதுபோல நிமிர்ந்து நோக்கினான்.

வீரர்களில் தலைவன்போலக் காணப்பட்டவன் ஒரு ஓலையை எடுத்துத் திருவனிடம் நீட்டினான். "என்றுமில்லாத அதிசயமாகவிருக்கிறதே? மன்னர்ஏன் ஓலையனுப்பவேண்டும்?'

ஓலையைப் படித்தான், திருவன். யாவும் தலை கரணமாகச் சுழல்வதுபோன்ற மயக்க நிலையை அடைந்தான். அவன் கண்கள் மங்கிமங்கி ஒளிபெற்றன. அந்த ஓலையிலுள்ள செய்தி ஆயிரமடிகளை அவன் தலையிற் போட்டது போலிருந்தது. கண்களைக் கசக்கிவிட்டுத் திரும்பவும் ஓலைமேற் கண்களை ஓட விட்டான்.

"திருவா...." என மன்னர் விளித்திருந்தார்: 'அரண்மனையில் திருட முயன்ற ஒரு குற்றவாளிக்கு நீ உன் மாளிகையில் இடம் அளித்துள்ளதாக அறிகிறேன். நீயே இப்படிச் செய்யலாமா? உடனே அவனை இவ்வோலை கொண்டு வருபவர்களிடம் ஒப்படைத்துவிடு' என மன்னர் எழுதியிருந்தார்-குணவீரசிங்கையாரியன் எழுதியிருந்தான்.

"என்னிடம் அடைக்கலம் புகுந்தவனை இவர்களிடம் எப்படி ஒப்படைப்பேன்? விஷக்கடியில் வாய்பதித்து என்னைக் காப்பாற்றிய நண்பனை எப்படி நான் இவர்களிடம் ஒப்படைக்க முடியும்? அடைக்கலம் அளித்துவிட்டுக் காட்டிக்கொடுப்பதா?"

"நீ மன்னனின் கீழ் சேவகம் செய்பவன்; மன்னனின் உப்பைத் தின்று உடலை வளர்த்துவிட்டு, மன்னனின் கட்டளையை மீறுவதா? கள்ளனை ஒளித்து வைத்துவிட்டு மன்னனுக்கு எப்படிப் பொய்சொல்ல முடியும்?"

நண்பன்—மன்னன் என்ற இரு கொளுக்கிகள் திருவம்பலவனை இரு கரைகளையும் நோக்கி இழுத்தன. இடையே ஓட்டைபட்ட கலம்போலத் தத்தளித்துத் தவித்தான்—திருவன்.

வீரன் ஒருவன் தொண்டையைச் செருமினான்.

"இருங்கள், இதோ வருகிறேன்..!" என்றுஉள்ளேசென்ற திருவம்பலவன் சற்று நேரம் கழித்துத் திரும்பி வந்தான்.

"இந்த ஓலையை மன்னரிடம் அளியுங்கள்!"

குணவீரசிங்கையாரியன் ஓலையைப் பார்த்தான். வெகு வேகமாகக் கண்களை ஓலைமேல் மேயவிட்டான். ஓலையில்—

"அரசே! நண்பன் ஒருவனுக்கு அடைக்கலம் அளித்தபின் அவனை எப்படிக் காட்டிக் கொடுக்க முடியும்? உங்களின் கீழ்ச் சேவகம் செய்யும் நான் உங்கள் கட்டளையை எப்படி மீறமுடியும்..?"

மன்னவன் ஓலையை ஒருதடவைக்கு இருதடவைகள் படித்தான்.

"அப்படியானால் திருவா... நீ..?"-அவனாற் சிந்திக்க முடியவில்லை; வேகமாகப் புரவியேறித் திருவனின் மாளிகை நோக்கிப் பாய்ந்து சென்றான்.

மாளிகையை நெருங்கியபோது, மாளிகையிலிருந்து எழுந்த அழுகுரல் மன்னனின் காதுகளில் நாராசமாக இறங்கியது.

வானத்தை அண்ணாந்து பார்த்தான் குணவீரசிங்கையாரியன்; நிலவு அரண்மனையின் உச்சிக்கப்பாற் சென்றுவிட்டதால் நிலவைக் காண முடியவில்லை.

"தேவி!..." என யாழ்ப்பாண மன்னன் அழைத்தான்.

"சுவாமி!..." என்றாள் ராணி.

"அடைக்கலமளித்துவிட்டு நண்பனைக் காட்டிக்கொடுப்பதும் நீதியல்ல; உப்பிட்ட மன்னனுக்குப் பொய் சொல்வதும் நீதியல்ல என்பதால் திருவன் தன்னையே அழித்துக்கொண்டான்..!" மன்னன் விம்மினான்: அவளை அணைத்துக்கொண்டு சிங்கையர்கோன் சிறுகுழந்தையைப்போல் விம்மிவிம்மி அழுதான்.

**புது டில்லியில்**

# இலங்கைப் பத்திரிகைக்காரர்களுக்கு பிரதமர் நேரு அளித்த பேட்டி

## கோவா விடுதலை: இந்தியாவில் கைத்தொழில் புரட்சி: இந்தியா - இலங்கை பேச்சு எப்போது ?: காங்கிரஸ் வெல்லுமா ?

**கே. பி. ஹரன்**

**[இந்திய அரசாங்கத்தின் அழைப்புக்கிணங்க, இலங்கையிலிருந்து 'ஈழநாடு' லேக்ஹவுஸ், டைம்ஸ், தவஸா முதலிய பத்திரிகை ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் ஆறு பேர், சென்ற ஜனவரி மாதம் 15-ந் திகதி புறப்பட்டு 3 வாரங்கள் சுற்றுப்பிரயாணம் செய்து திரும்பினர். பிரதமர் நேருவை அவர்கள் பேட்டிகண்டு பேசிய விபரங்கள் இக்கட்டுரையில் காணலாம்.]**

புதுடில்லி. ஜனவரி 27-ந் திகதி சனிக்கிழமை காலை 7 மணி. புதிய "ஜன் பாத்" ஹோட்டல் 351ம் நம்பர் அறை 'ஏர்கண்டிஷன்' செய்யப்பெற்றது. கதவைத்திறந்துவெளியே வந்தால் "சில்" என்று காற்று. கிடுகிடுக்கும் குளிர்.

புதுடில்லியில் "கிங்ஸ்வே," "க்வீன்ஸ்வே" என்று இரு ராஜபாட்டைகளுண்டு. சுதந்திரம் கிடைத்தபின்பு "கிங்ஸ்வேயை" "ராஜ்பாத்" என்றும் க்வீன்ஸ்வேயை, 'ஜன்பாத்' என்றும் பெயர் மாற்றினர். 'ஜன்பாத்' ரஸ்தாவிலிருந்ததால் அதற்கு "ஹோட்டல் ஜன்பாத்" என்று பெயரிட்டுள்ளனர்.

அங்கு எல்லா அறைகளுக்கும் நாளொன்றுக்கு வாடகை 40 ரூபாயாம். எல்லாரும் சரி நிகர் சமானம். ரேடியோ, டெலிபோன், பாத்ரூம் முதலிய எல்லா வசதிகளுமுண்டு எங்களை முதல்நம்பர் ஹோட்டலில் வைக்க எவ்வளவோ முயன்றதாயும், ஆனால் குடியரசு விழாவுக்காக பல விருந்தினர் வந்துள்ளதால், இந்த இரண்டாம் பட்ச ஹோட்டலிலே அமர்த்த வேண்டிய தாயிற்றென்றும், அதற்காக மன்னிக்கவேண்டுமென்றும் இலங்கை பத்திரிகைத் தூதுக்கோஷ்டியினரான எங்களை புதுடில்லி "பாலம்" விமான நிலயத்தில் எதிர்கொண்டு சந்தித்து வரவேற்ற இந்திய பத்திரிகை உறவு பெரிய அதிகாரி மிக விநயமாகக் கூறினர் இரண்டாம் பட்ச ஹோட்டலே இவ்வளவு வசதியாக இருப்பின், முதல் தர ஹோட்டல் எப்படி இருக்குமோ என்று தோன்றியது.

புதுடில்லியிலிருந்து சென்னைக்கு வந்து எங்களை மீனம்பாக்கம் விமான நிலயத்தில் வரவேற்று கடைசிவரை கூடவே இருந்து எங்கள் வசதிகளை கவனித்துவந்த இந்திய அரசாங்க பத்திரிகை உறவு இலாகாவைச் சேர்ந்த ஆர். வி ஜூக்ரான் என்பவர் முதல்நாளே எங்களுக்கு நண்பராகிவிட்டார்.

சென்னையில் மதுவிலக்காயிற்றே. மதுபான வசதியுண்டா? என்று நீங்கள் சந்தேகிக்கலாம். ஆனால் வெளிநாட்டிலிருந்து வரும் விருந்தினருக்கும் யாத்திரீகர்களுக்கும் மதுபானத்துக்கு காரணமான "பர்மிட்" கொடுக்கிறார்கள். சென்னையில் நாங்கள் இருந்த "ஹோட்டல் ஓஷியானிக்"கில் மேன் மச்சிலே 'பர்மிட் ரூம்' என்றிருக்கிறது. அங்கோ அல்லது அவர்களது அறையிலோ பர்மிட் உள்ளவர்கள் தாராளமாகக் குடிக்கலாம்.

ஒரு பாரத்தை நீட்டி என்னையும் 'பர்மிட்'டுக்காக கையெழுத்திடக் கூறினர். சற்றே தயங்கிவிட்டு, நண்பர்களுக்காக, கையெழுத்திட்டேன். பர்மிட்டில் குறித்த அளவு தான் மதுபானம் கொடுக்கிறார்கள். என்றாலும் புதுடில்லியிலிருந்தே ஜூக்ரான், உயர்ந்த சரக்குகளை எதேஷ்டமாகக்கொண்டுவந்திருந்தார். என்னைத்தவிர மற்றவர்களுக்கெல்லாம் நல்ல வேட்டை.

புதுடில்லியில் இந்த பர்மிட் சங்கடமே கிடையாது. மதுவிலக்கு அங்கு அமுலிலில்லை. அதனால் தடையின் தாராளமாகக் குடிக்கலாம். என்றாலும் நண்பர்கள் அளவுமீறாமல், ஒரு வரம்புக்கு உட்பட்டே இருந்தது பாராட்டத்தக்கது. இந்தக் கோஷ்டியில் குடிக்காமல் தனித்திருப்பது எனக்கு கடைசிவரை ஒருமாதிரியாகவே இருந்தது. என்றாலும் நண்பர்கள் என்னைப் புரிந்து அன்புடன் சகித்துக்கொண்டார்கள்.

* * *

அன்று காலை 7 மணிக்கு அன்பர் ஜூக்ரான், என் அறைக்குவந்து மத்தியானம் 12 மணிக்கு பிரதமர் நேருவைப் பார்க்க ஒழுங்கு செய்யப்பெற்றுள்ளதாயும், 11-30க்கே தயாராக இருக்கும்படியும் தெரிவித்தார். நேருஜிக்கு எவ்வளவோ ஜோலி முதல்நாள் மழையிலும், குளிரிலும், குடியரசு தின அணிவகுப்பில் பல மணிநேரம் கலந்துகொண்டார். அன்று மாலையே ராஷ்டிரபதி பவன் மாளிகையில் நடந்த சிற்றுண்டி உபசாரத்திலும் பங்குபற்றினர். சற்றும் ஓய்ச்சல் ஒழிவு இல்லாத அவர் இலங்கைப் பத்திரிகைக்காரர்களாகிய எங்களையும் வரவேற்றுப்பேச சம்மதித்ததைக்கேட்க மிக வியப்பாகவும் மகிழ்ச்சியாயுமிருந்தது.

முன்னர் பிரிட்டிஷ் அரசாங்க அழைப்பை ஏற்று, மூன்று பத்திரிகை ஆசிரியர்கள் பிரிட்டனுக்குச் சென்று ஒருமாதம் சுற்றுப்பிரயாணம் செய்தோம். மகாராணியைப்பார்க்கவேண்டுமென்று வாய்விட்டுக் கூறியும் அவர்களால் ஒழுங்கு செய்ய முடியவில்லை. அங்கு பிரதம மந்திரியையும்பார்க்க சந்தர்ப்பமில்லை. இலங்கையிலும் கூட, பிரதமர், பத்திரிகை ஆசிரியர்களை இப்படி நேரில் வரவேற்று இதுவரை நல்லுறவு கொள்ளவில்லை. ஆனால் புதுடில்லியிலே பிரதமர் நேருஜி, எங்களை வரவேற்றுப் பேசச் சம்மதித்தது எங்களுக்கு பெருமகிழ்ச்சியும் பெருமையுமாக இருந்தது.



—காலை 11-30க்கு 'டாண்' என்று மோட்டாரில் பிரதம மந்திரி காரியாலயத்துக்குக் கிளம்பிவிட்டோம். பல காவல்களைத் தாண்டி, பிரதமரின் அறைக்கு வெளியேயுள்ள காரியதரிசி அறைக்கு வந்தோம். அவர் வரவேற்று எங்களை அமரச்சொன்னார். பிரதமருக்கு அதிக ஜோலியென்று 3 அல்லது 4 நிமிடங்களுள் பேசி முடித்தால் நல்லதென்றும் சொன்னார்.

12 மணி ஆயிற்று. நேரு வரவில்லை. வேறு ஏதோ முக்கிய ஜோலியாம். வராமலே இருந்துவிடுவாரோ என்றும் அஞ்சினோம். ஆனால் 12 க்கு அவர் கதவு திறந்தது. அன்பர் ஜூக்ரான் எங்களை உள்ளே அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தினர். பிரதமர் நேரு ஆசனத்திலிருந்து எழுந்து வந்து எங்களை அன்புடன் கைகுலுக்கி வரவேற்றார்.

அது பெரிய விசாலமான அறை. மகாத்மா காந்தியின் படம், நேருஜியின் மேசைமீது சதா காட்சி அளிக்கிறது. காந்தி கோட்பாடுகளை ஒருகணமும் மறக்காமல், தமது பெரிய பொறுப்புகளை நிறைவேற்றவே அவரது படத்தை நேருஜி தம் மேசையில் வைத்துள்ளார் போலும். நேருவுக்கு எதிரே அரைவட்ட மேசையைச்சுற்றி 6 ஆசனங்கள். அவற்றில் நாங்கள் அமர்ந்தோம்.

"நீங்கள் யாரும் இதற்குமுன் இங்கு வந்ததுண்டா ?" என்று நேருஜி கேட்டார். எங்களில் ஒருவர் வந்திருப்பதாகச்சொன்னார்.

கே:- "நேற்று குடியரசு விழாவில் அதிக குளிர் மழை; மிகவும் அவதிப்பட்டீர்களோ?"

ப:- இல்லை. இல்லை. அணிவகுப்புகள் மிக மேலாக இருந்ததைக் கண்டு களித்தோம்' (உண்மையில், பல மணிநேரம் குளிரிலும் மழையிலும் நாங்கள் அங்கு பட்ட அவதி அடகடவுளே! இது நேருவுக்குத் தெரியாதா! மரியாதைக்காக அப்படியொன்றுமில்லைஎன்று என் சகாக்கள் கூறினர் )

கே:- இதுவரை எங்கெந்த இடங்களைப் பார்த்தீர்கள்?

ப:- சென்னை, பங்களூர், மைசூர், பம்பாய், எல்லோரா, அஜந்தா, தாஜ்மஹால். . . . .

பேச்சு பின்னர் மாறியது, "கோவா மக்களை விடுதலை செய்ததற்காக தங்களைப் பெரிதும் பாராட்டுகிறோம்" என்றேன்.

இதைக்கேட்டதும், நேருஜி ஒருவிதமகிழ்ச்சியுடன் 'ஆமாம், ஆசிய நாடுகளும், ஆபிரிக்க நாடுகளும் பாராட்டுகின்றன. ஆனால் மேலை நாடுகளில் சிலர் என்மீது ஏதேதோ பழி சுமத்துகிறார்கள். பசுத்தோல் போர்த்த புலி என்கின்றனர் . . . . என்றார்.

ப:- இப்போது படிப்படியாக இது குறைந்து, உண்மையை அவர்களும் அதிகம் உணர்ந்து வருகிறார்கள் தானே.

நேருஜி:- அப்படித்தான் தோன்றுகிறது. கோவாமூலம் இந்தியாவுக்கு கள்ளக் கடத்தல்கள் அதிகம் நடந்துவந்தன. ஒரு போத்தல் பீர் 6 அணா விஸ்கி 8 ரூபாய். அங்கு போர்ச்சுக்கீயர் சம்பளங்களை மிகவும் அதிகமாகக் கொடுத்துள்ளனர். பொலிஸ் கான்ஸ்டேபிள்களுக்கும் ரூ. 300 சம்பளம் அங்கு நிலைமையை மாற்றி அமைக்கும் பெரிய வேலை காத்திருக்கிறது.

கே:- இந்தியாவிலே பல புதிய கைத்தொழில் சாலைகள் ஆச்சரியமாக முன்னேறிவருவதைக் கண்டோம.

நேருஜி:- ஆமாம். நீங்கள் புதுடில்லியில் நடந்த கைத்தொழில் கண்காட்சியைப் பார்த்திருக்க வேண்டும். நாட்டிலுள்ள பல கைத்தொழில் அபிவிருத்திகளையும் அங்கு ஒருங்கே பார்த்திருக்கலாம். இப்போது இந்தியாவில் கைத்தொழில் புரட்சி நடந்துவருகிறது. இன்னும் 10 வருடங்களில் இந்தியா கைத்தொழில் மயமாகிவிடும். 40 கோடி மக்களின் முன்னேற்றமும் அதில் தான் அடங்கியுள்ளது.

கே:- எங்கள் பிரதமர் இங்கு வந்திருந்தார் தானே.

ப:- ஆமாம். இங்கு பௌத்த புனித ஸ்தலங்களைத் தரிசிக்க வந்திருந்தார் . . . வந்தபோது வேறு விசயங்கள் பற்றியும் பேசினோம்.

கே:- இந்தியா—இலங்கை பிரச்னைகளைபற்றிமீண்டும்எப்போது பேச்சுக்கள் நடக்கும் ?

நேருஜி கைகளால் முகத்தைத் தடவியபடியே, 'தேர்தல் முதலிய சில அவசர ஜோலிகள் இருக்கின்றன. இவை முடிந்ததும் பேசலாம்.

கே:- தாங்கள் எப்போது இலங்கைக்கு வருகிறீர்கள்?

ப:- வரவேண்டும் தான். ஆனால் இங்கு அதிக வேலைகள் உள்ளன. என்றாலும் அதற்கிடையே வரவே விரும்புகிறேன்.

கே:- வருகிற தேர்தலில் காங்கிரஸ் வெல்லுமா ?

ப:- அப்படித்தான் நம்புகிறோம்.

நேரம் 12 நிமிஷங்களுக்கு மேலாகிவிட்டன. மேலும் கணக்காமல் நாங்கள் எழுந்துவிட்டோம். நேருஜி தம் அறைக்கு வெளியேவந்து ஒவ்வொருவராக கைகுலுக்கி அன்புடன் வழியனுப்பினர்.

வேட்டி, ஜிப்பா, அங்கவஸ்திரம் இத்துடன் தேசிய உடையிலிருந்த என்னைப் பார்த்துவிட்டு, என் கையைப்பிடித்து "இந்தக் குளிரை எப்படி இந்த உடையில் தாங்குகிறீர்கள் ?" என்று வியப்புடன் கேட்டார்

உள்ளே கம்பளி உள் உடை தரித்திருந்தேன். "உள்பாது காப்பு இருக்கிறது" என்று சிரித்துக்கொண்டே கூறி, நேருஜியிடம் விடைபெற்றேன். எவ்வளவோஜோலிக்கிடையே, என் குளிரைப்பற்றி அவருக்கு எத்தனை அக்கறை! எவ்வளவு மனித அன்பு!.

---

## பூஜ்யம் தபால்

பிரதமர் நேருஜி,

இந்தியா.

பிரதமரே !

தேர்தல் சூறாவளியில் ஈடுபட்டுள்ள தங்களுக்கு கடிதமெழுதி தொந்தரவு செய்ய மனமில்லை. என்றாலும்சென்னையிலே தாங்கள் பிரம்மாண்டமான கூட்டத்தில் பேசியதைக் கேட்ட எனக்கு இதை எழுதாமல் இருக்கமுடியவில்லை.

ராஜாஜி தங்களையும், காங்கிரஸையும், கண்டபடி ஏசிப் பேசுகிறார். ஆனால் தாங்களோ கடும் சொல் எதுவும் கூறாமல் "ராஜாஜி என்ன கூறினும் சரி அவர் மீது எனக்கு எப்போதும் மதிப்பும் மரியாதையுமிருக்கும்" என்று மிகப்பொறுமையுடனும் பண்புடனும் கூறி, தேர்தலுக்கு முன்பே இதன் மூலம் தாங்கள் ராஜாஜியை தனிப்பட்டமுறையில் வென்றுவிட்டீர்கள்!

"பர்மிட் லைசென்ஸ் தர்பார்" நடக்கிறதென்று, ராஜாஜி கூறிய குற்றச்சாட்டுக்கு, தங்களிடம் யாரும் பர்மிட்டுக்கு வரவில்லை என்றீர்கள். சில தவறுகள் நடந்திருப்பினும், சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்குகையில், லைசென்ஸ் பர்மிட் முறை தவிர்க்கமுடியாததென்றும், ஏழ்மை, வேலையில்லாக் கஷ்டம் இவற்றை வேறு எப்படித்தீர்க்கமுடியுமென்றும் ராஜாஜியைக் கேட்டீர்கள். தாங்கள் பேசியதைப் பார்க்கையில் தாங்கள் கூறுவதே சரியென்று தோன்றுகிறது. தங்களுக்கு ராஜாஜி அளித்துள்ள பதிலைப்பார்க்கையில் அவர் கூறுவதே சரியென்று படுகிறது.

நீங்கள் இருவரும் சுயநலமற்ற தேசாபிமானிகள். தியாக அக்கினியில் பலமுறை ஸ்புடம் போடப்பட்டவர்கள். நாட்டில் ஜனநாயகம் தழைத்து ஓங்க உங்கள் இருவரது சேவையும் அவசியம் தேவை. நீங்கள் இருவரும் நீடூழி வாழ்க.

"பூஜ்யம்"

குறிப்பு:-

தேர்தலில் வெற்றி தங்களுக்குத் தான் என்று இப்போதே சோதிடம் கூறவிரும்புகிறேன். ராஜாஜி கூட, பலமான எதிர்க்கட்சி வேண்டுமென்றுதான் கூறுகிறாரேயன்றி, ஆட்சி அதிகாரத்தை இத்தேர்தலில் கைப்பற்றலாமென்று நம்பவில்லை. என்றாலும், ராஜாஜி எடுத்துக்கூறுவதுபோல், பல சுயநல பெருச்சாளிகள் காங்கிரஸில் புகுந்துள்ளன. அவர்களைப்பற்றி தாங்கள் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

"பூ"

# உலக மேடை

டி. எம். எம்.

## கிருஷ்ணமேனன்

"ஆயிரம் காங்கிரஸ்காரர்கள் வெளியேறட்டும்; ஆனால் ஒரு கிருஷ்ணமேனனை விட மாட்டேன்" எனப் பொருள்படும்படி இந்தியப் பிரதமர் கூறுமளவுக்கு நேருவிடம் செல்வாக்குப்பெற்ற இந்தியப் பாதுகாப்பு மந்திரி போட்டியிடும் வடபம்பாய்த் தொகுதியின் தேர்தல், வருகிற 25-ம் தேதி ஆரம்பமாகிறது அவருடன் போட்டியிடும் ஆச்சார்யா கிருபளானிக்கு மூன்று கட்சிகள் மும்முரமான ஆதரவைத்தந்து மகா தீவிரப்பிரசாரத்தில் இறங்கியுள்ளன.

திரு. மேனனும்சரி - அவரை எதிர்த்துப் போட்டியிடும் கிருபளானியும் சரிசாமான்யப் பேர்வழிகளல்ல. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் இருவருமே தீவிரபங் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். வெளிநாடுகளில் இந்தியாவின் சுதந்திரப்போருக்கு இடைவிடாமல் உழைத்தவர் திரு. கிருஷ்ணமேனன். உள்நாட்டில் சுதந்திரப் போராட்டத்தில் சிறைசென்று தியாகவாழ்வு நடத்தியவர் கிருபளானி. அறிவாற்றல், திறமை ஆகியவற்றைப் பொறுத்தவரை இருவருமே ராட்சஸர்கள்.

"நீங்கள் இந்தியாவில் அல்லது இங்கிலாந்தில் மட்டுமின்றி எகிப்தில் தேர்தலுக்கு நின்றபோதிலும், மக்கள் உங்களைத் தேர்ந்தெடுப்பார்கள்" என கிருஷ்ணமேனனிடம் ஒரு தடவை ஐக்கிய அராபியக்குடியரசு ஜனாதிபதி நாஸர் கூறினார். கிருஷ்ணமேனனின் வாழ்வும் சரித்திரமும் சுவையானது. அவர் பிரிட்டனில் பிரஜா உரிமை பெற்றிருந்தவர். லண்டன் "கவுண்டி கவுன்"ஸிலில் (மாநகரசபை) சென்பங்க்ராய் தொகுதியின் அங்கத்தினராய் நீண்டகாலம் இருந்து சேவை செய்தவர். பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் அங்கத்தினராய் பிரிட்டிஷ் பாராளுமன்றத்துக்கு டண்டீ தொகுதியிலிருந்து போட்டியிடவிருந்தவர். ஆனால் இந்தியா சம்பந்தமான தொழிற் கட்சியின் கொள்கையில் அபிப்பிராயபேதம் ஏற்பட்டதால் தமது நியமனத்தை வாபஸ் பெற்றுக் கொண்டார். இருபத்தைந்து அல்லது முப்பது ஆண்டுகள் தாயகமான இந்தியாவையே அறியாமல் இங்கிலாந்திலேயே தங்கிவிட்டதுடன், அந்நாட்டின் பிரஜையுமாகி, பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கும் போட்டியிட்டு, அங்கே மந்திரியாய் வரக்கூடிய சந்தர்ப்பமும் அவருக்கிருந்தது. ஆனால் இவ்வளவு சிறந்த மூளையை இழந்துவிட நேருஜி விரும்பவில்லை. எனவே தனது மந்திரிசபையில் அவரை அமர்த்திக் கொண்டிருக்கிறார்.

திரு. கிருஷ்ணமேனனுக்கும் நேருவுக்கும் 1936-ம் ஆண்டில் தான் முதலில் பரிச்சயம் ஏற்பட்டது. அச்சமயம் இருவரும் லண்டனில் சந்தித்தனர்.

மலபாரைச்சேர்ந்த கிருஷ்ணமேனன் சென்னையில் உயர்தரக் கல்விகற்றபின் இங்கிலாந்து சென்றது 6 மாதங்கள் லண்டனில் தங்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே. ஆனால் அங்குள்ள கல்விக்கூடங்களும், அறிவு வளர்ச்சிக்கான வாய்ப்புக்களும் இளம்மேனனை வசப்படுத்திக்கொண்டதால் நிரந்தரமாக அங்கேயே இருந்து விட்டார். லண்டனிலுள்ள கலாசாலை ஒன்றில் சரித்திர போதகராகக் கடமையாற்றிய மேனன், பின் மனோதத்துவத்தில் எம். ஏ பரீட்சை எடுத்தார். அதன் பின் பொருளாதார சாஸ்திரத்தில் எம். எஸ். சி. எடுத்ததுடன் பாரிஸ்டர் பரீட்சையிலும் சித்தி எய்தினர். ஆனால் அவர் இந்தியா திரும்பவில்லை. இன்று உலகின் பிரபல தலைவர்கள் பலர் லண்டனிலுள்ள ஹைட் பார்க்கில் சொற்பொழிவுகள் நிகழ்த்தி முன்னேறியவர்கள் தான். கிருஷ்ணமேனனும் ஹைட் பார்க்கையும், பிரிட்டிஷ் மியூஸியம் என்ற உலகப் பெரும் நூல் நிலையத்தையும் தமது பொழுதுபோக்காகக் கொண்டார். ஜோமோ கென்யாட்டா, டாக்டர் நிக்ருமா போன்ற ஆபிரிக்கப் பெருந்தலைவர்களும் இலங்கையிலுள்ள இடதுசாரித் தலைவர்களான டாக்டர் என். எம். பெரேரா, பிலிப் குணவர்த்தன போன்ற தலைவர்களும், மற்றும் பல நாடுகளில் சுதந்திரப் போராட்டத் தலைவர்களாயிருக்கும் பலரும் அப்போது மேனனுடன் சேர்ந்து வேலை செய்ததுமட்டுமின்றி, அவரைத் தங்கள் அரசியல் வழிகாட்டியாகவும் நண்பனாகவும் கொண்டிருந்தனர்.

திரு. கிருஷ்ணமேனன் "இந்தியா லீக்" ஸ்தாபனத்தைத் தோற்றுவித்து நீண்ட காலம் அதன் பொதுக்காரியதரிசியாய் இருந்தார். ஏராளமான பிரிட்டிஷ் எம். பி. க்களும், மற்றும்பிரபலஸ்தர்களும் இதில் அங்கத்தவர்களாய் இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்திய சுதந்திரம் சம்பந்தமாக அப்போது தான் அவர் நூற்றுக்கணக்கான பிரசுரங்களை இயற்றி வெளியிட்டார். ஏராளமான கூட்டங்களில் பிரசாரம் செய்தார்.

அக்காலத்தில் இந்தியமாணவர் விடுதியைப் போலவே, "இந்தியா லீக்"கையும் ஸ்காட்லாந்து யார்டு துப்பறியும் பொலிசார் கண்காணித்து வந்தனர்.

சுதந்திர இந்திய அரசாங்சம் பதவி ஏற்றபின் மேனன் லண்டனில் முதலாவது இந்திய ஹைகமிஷனராகப் பதவிஏற்றார். மற்றும் பல நாடுகளில் தூதுவர் காரியாலயங்களை ஏற்படுத்துவதில் மேனன் பெரும் பங்கு வகித்தார்.

அவரது விசித்திரமான குணதிசயங்களைப்பற்றி ஏராளமான சம்பவங்கள் கூறப்படுவதுண்டு. ஹைகமிஷனராய் இருக்கும்போது தமக்கும், தமது துணைஅதிகாரிகளுக்கும் "ரோல்ஸ் ராய்ஸ்" கார்களை வாங்கிப்போட்டார். ஹைகமிஷனரின் உத்தியோக வாசஸ்தலமாக பெரியமாளிகையும் வாங்கப் பட்டது. ஆனால் அவர் பஸ்களிலேயே பெரும்பாலும் பிரயாணம் செய்வதுண்டு. பஸ்களில் நின்றுகொண்டும் பிரயாணம் செய்வாராம். லண்டனிலுள்ள பஸ் கண்டக்டர்களுக்கும் அவர் நன்ருகப்பரிச்சயமானவர் எனக் கூறப்படுவதுண்டு. ஹைகமிஷனர் காரியாலயத்தின் ஒரு அறையிலேயே இவர் தங்கினர். லண்டனில் வீதியோரமுள்ள விடுதிச்சாலைகளில் வெளிப்புறமாக உட்கார்ந்திருப்பார் மேனன். அவரைச் சுற்றிப் பல நண்பர்கள் இருப்பர். சர்வதேசப் பிரச்சினைகளைப் பற்றியும், மற்றும் பெரிய பெரிய விஷயங்களைப் பற்றியும் ஒரே விவாதத்தில் அவர் ஈடுபட்டு வருவாராம். நாள் ஒன்றுக்கு 30 கப் தேநீர் குடிப்பதும், ஸாண்ட்விச்சுக்களைத் தின்பதுமே மேனனின் உணவாகும். தேநீர் மட்டுமிருந்தால் வேறுசாப்பாடே அவருக்குத் தேவையில்லை. பிரம்மச்சாரியான அவர் நீண்டகாலம் இங்கிலாந்தையே தாயகமாகக் கொண்டிருந்தபோதிலும் மாமிச உணவு புசிப்பதோ, புகை பிடிப்பதோ, மதுபானம் அருந்துவதோ கிடையாது!

லண்டன் நகரசபை பெர்னுட் ஷாவுக்குப் பின், ஷாவுககு அளித்த அதேகௌரவ விருது ஒன்றை மேனனுக்கும் அளித்தது.

பிரபல பிரிட்டிஷ் சரித்திராசிரியரான அபர்கோம்பி, உயிர் வாழும் ராஜதந்திரிகளிலேயே மிகவும் திறமை வாய்ந்தவரென மேனனுக்குப் புகழ்மாலை சூட்டியுள்ளார். நேருவின் பிரசித்தி பெற்ற "உலக சரித்திர கண்ணோட்டம்" என்ற நூலுக்கு திரு கிருஷ்ணமேனன் முன்னுரை எழுதியுள்ளார் என்றால் அவரது தகுதியைப்பற்றி நேரு எவ்வளவு உயர்வாக நினைத்துள்ளார் என்பதை அறியலாம்.

ஒருமுறை எலிஸபெத் மகாராணிக்கு ஆபிரிக்காவில் ஆடம்பரமான விருந்தொன்று நடத்தப்பட்டது அடையாளச்சீட்டு உள்ளவர்கள் மட்டுமே விருந்து மண்டபத்தில் பிரவேசிக்க முடியும். அதுவும் சோதனை செய்யப்பட்ட பின்பே, பெரிய பெரிய தலைவர்கள் உள்ளே அனுமதிக்கப்பட்டனர். ஐ. நா. விலுள்ள பல பிரபலஸ்தர்கள் விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர். ஆனால் கிருஷ்ணமேனன் தன் அடையாளக் கார்ட்டை தொலைத்து விட்டார். விருந்துக்கு ஒழுங்குசெய்த அதிகாரியிடம் மேனன் இதைப்பற்றிக் கூறியபோது, "உங்களையும், உங்களது பெயரையும் அமெரிக்கா முழுதும் அறிந்திருக்கிறார்கள். உங்களுக்கு அடையாளக் கார்டுத்தேவையில்லை" எனக்கூறி, உரிய இடத்தில் அவர் மேனனைக் கொண்டு போய் அமர்த்திவிட்டார். சம்பிரதாயமாக அவருக்கு முன்பு எல்லா விருந்தினர்களையும் போலவே உயர்தர மதுவகைகளும், உணவு வகைகளும் வைக்கப்பட்டன. விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட மாமிசம் கலக்காத உணவுகளும் வைக்கப் பட்டிருந்தன. விருந்தில் அவர் மட்டுமே மாமிச உணவு புசிக்கவில்லை. "ஆனால் அவரது நேர்த்தியான சம்பாஷணை எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்து, இக்குறைபாட்டை ஒரேயடியாக நீக்கிவிட்டது" என லண்டன் பத்திரிகை ஒன்றின் நியுயோர்க் நிருபர் லண்டனுக்குச் செய்தியனுப்பியிருந்தார்!

பேச்சில் வல்லவரான கிருஷ்ணமேனன் விவாதத்தில் அபார திறமை படைத்தவர். குறுக்கேதலையிடும் எதிரிகளின் மண்டையில் அடித்து உட்கார வைப்பதில் தனக்கு இணையில்லை எனப் பெயர் பெற்றவர். டில்லி சட்டசபையில் சத்தியமூர்த்தி இருந்ததைப் போலவே ஐ. நா. விலும், இதர உலகசபைகளிலும் அவரது இந்த தனித்திறமை பன்முறை குழப்பத்தை உண்டாக்கியிருக்கிறது. அவரது முன் கோபத்துக்கு எதிரே எவரும் நிற்க முடியாது. எவராய் இருந்தபோதிலும், சற்றும் பொருட்படுத்தாமல் ஆவேசமாகப் பேசிவிடுவார். இதன் காரணமாக ஜனாதிபதி ஐஸன்ஹோவரும், பிரிட்டிஷ் பிரதமராய் இருந்த அந்தோனி ஈடனும் மேனனை ஐ. நா. வுக்கு அனுப்புவதுபற்றி நேருவிடம் குறைகூறியுள்ளனர்! ஐ. நா. வைப் பார்வையிடச் செல்பவர்கள் மேனனின் பேச்சு இருக்கும்போது காலரிகளைப் பிடிக்கத் தவறமாட்டார்கள். காஷ்மீர் விவாதத்தில் இரண்டு முறை மூர்ச்சித்து விழுந்த பின்பும் மொத்தம் 16 மணிநேரம் பேசி ஐ. நா. வில் தனி ரிக்கார்ட்டை ஏற்படுத்தியவர் திரு. கிருஷ்ணமேனன்.

திரைமறைவான ராஜதந்திரப் பேச்சுக்களில் மேனன் மகாதிறமை வாய்ந்தவர். பல தரப்பட்ட அபிப்பிராயபேதங்களை ஒன்றுபடுத்துவதில் களைப்பின்றி இடைவிடாது முயற்சிப்பதில் அவரது திறமை வெகுவாகப் புகழப் பட்டுள்ளது.

"சர்வதேச அரசியலில் முதல் நம்பர் குழப்பக்காரர்" என காலஞ்சென்ற திரு. டல்லஸ் ஒருமுறை அவரைப்பற்றிக் கூறியுள்ளார். பாதுகாப்பு சபை விவாதம் ஒன்றில் அவர் பேசியவேகத்தில், விஷயத்தை எடுப்பது சுருக்கெழுத்தாளர்களுக்குக் கூட ஓரளவு கஷ்டமாய் இருந்தது! ஐ. நா. வில் முதல் நம்பர் பேர்வழி என்று பல நிருபர்கள் அவரை அழைப்பதுண்டு.

கொரியா யுத்தத்தின் போதுதான் அவரது புகழ் மிகவும் அதிகரித்தது. கொரிய சமாதான ஒப்பந்தத்தை உருவாக்கி அங்கு போர் நிறுத்தத்துக்கு வழிவகுத்த பெருமை மேனனுக்கே உண்டு. இந்தோசீனு, போர்மோஸா சம்பவங்கள் யுத்தநெருக்கடியில் இருந்தபோது மேனன் ஆற்றிய சேவைகள் புகழத்தக்கவை.

சர்வதேச விவகாரங்களில் நிபுணரான அவர் துரிதமாக ஆலோசனை கூறுவதில் இணையற்றவர். போர்மோசா நெருக்கடியின்போது பிரச்சினையை தீர்க்க அவர் ஒரு சில தினங்களில் பல டஜன் பரிகாரங்கள் கூறியதைக் கண்டு நேருவேவியந்துரைத்ததுண்டு. சூயஸ் நெருக்கடியின்போது 29 தடவை ஜனாதிபதி நாஸர் கெய்ரோவுக்கு அவரை அழைத்து ஆலோசனை நடத்தினர். பாண்டுங் மகாநாட்டுக்குப்பின் திரு. சூ என் லாயும் அவரைச் சீனவுககு அழைத்து ஆலோசித்தார்.

மேனனின் பெயர் கீழ்நாடுகளைவிட அதிகமாக மேல்நாடுகளில்தான் அதிகம் பிரசித்தமானது. அவரது விசித்திரப் பழக்கங்களும் இதற்கோர் காரணமாய் இருந்திருக்கலாம். இன்றும்கூட அவர் காரில் செல்லும்போது பெரிய பிரமுகரைப் போல் இன்றி, சாரதிக்குப் பக்கத்திலேயே பிரயாணம் செய்கிறார்! குருஷ்சேவ், கென்னடி உட்பட உலகத்திலுள்ள சகல பெரிய தலைவர்களுடனும் அவர் சமமாகப் பழகுபவர். அவரது வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க பகுதி ஆகாயத்திலேயே கழிந்துள்ளது. அடிக்கடி விமானப் பிரயாணம் செய்வதில் அவரைப்போல் யாருமில்லை

இந்தக் கிருஷ்ணமேனன் தான் வடபம்பாய்த் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகராக நிற்கிறார். ராஜாஜி, ஜயப்பிரகாஷ் நாராயணன் போன்ற பெரிய தலைவர்கள்கூட அவருக்கெதிராகப் பேசியிருக்கும் நிலையில் கிருபளானி பலமாக எதிர்த்துப் போட்டியிடுகிறார். மேனன் திறமையைப் போற்றியுள்ள நாராயணன், அதே சமயத்தில் அவர் கம்யூனிஸ்ட் என்னும் பொருள்படும்படி கூறி கிருபளானியை ஆதரித்துள்ளார். மேனனின் தோல்வி நேருவின் தோல்வியல்ல என ஜயப்பிரகாஷ் கூறியிருக்கிறார். ஆனல் மேனனின் தோல்வி உண்மையில் நேருவின் தோல்வியேதான்.

மேனன் தோற்ருல் நேருவுக்கு அதைவிட மனச்சங்கடம் இத்தேர்தலில் எதுவுமே இருக்காது என்பதை, இந்தியப் பிரதமரின் சமீபத்திய பேச்சுக்களே நிரூபிக்கின்றன. இவ்வளவு பெரிய திறமைசாலியையும், சர்வதேச ஆலோசகரையும், சகாவையும் இழக்க நேரு விரும்பமாட்டார் என்பதில் சந்தேகமில்லை. வடபம்பாய்த் தேர்தல் உலகின் கவனத்தைக் கவர்ந்துள்ளது. கிருபளானி-மேனன் போட்டியில் 50—50 வெற்றியே மேனனுக்கு கிடைக்கும் என ஹேஷ்யம் கூறப் பட்டிருப்பினும், சமீபத்திலே தகவல்கள் சென்ற முறையைவிட அதிகவோட்டுக்களை அவர் பெறுவார் எனக்கூறுகின்றன அவரது தோல்வியை மேற்கு நாடுகள் விரும்பும் என்பதில் சந்தேகமில்லை. மேனனைத் தனிப்பட்ட முறையில் கிருபளானி அடிக்கடி தாக்கிப் பேசியும்கூட, கிருபளானியின் பெயரைக்கூட மேனன் தேர்தல் பிரசாரத்தில் உச்சரிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனல் தனக்கே உரிய பாணியில் "நாய் குரைத்தாலும் யாத்திரை நடைபெறும்" என திரு மேனன் சுருக்கமாகக் கூறியிருக்கிறார்.

## கிருபளானி

ஆச்சார்யா கிருபளானி பேராசிரியர், கல்விமான் பீகார் பெற்றெடுத்த ஒப்பற்ற புதல்வர். காந்தி மகாத்மாவுடன் நீண்ட நெடுங்காலம் தொடர்பு கொண்டு பன்முறை சிறை சென்று பலவித இன்னல்களை அனுபவித்தவர். இன்று உயிர் வாழும் பெரிய தலைவர்களில் நேருவுடன் கோபித்துக் கொண்டு காங்கிரசை விட்டு வெளியேறியவர்களில் அவரும், ராஜாஜியுமே குறிப்பிடத் தக்கவர்கள்.

மகாத்மா காந்தியின் அகிம்சைக் கொள்கையில் அசையாத நம்பிக்கை கொண்டு அதன்படி ஒழுகும் கிருபளானி, எளிய வாழ்க்கை நடத்துபவர். அவரும் அவரது மனைவி சுஜேதாவும் நாட்டு விடுதலையில் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்க அளவில் பெரியதாகும். நீண்ட காலம் காங்கிரசின் பொதுக் காரியதரிசியாகவும், பின் அதன் அக்கிராசனராகவும் பதவி வகித்தவர். நல்ல பாராளுமன்ற விவாதத் திறமை படைத்தவர். பீகாரில் ஏற்பட்ட பூகம்பத்தின்போது ராஜன்பாபுவும் அவரும் அளப்பரிய சேவை செய்ததை எவரும் மறந்துவிட முடியாது.

## கிழக்கு-மேற்கு

சமீபத்தில் ரஷ்யா பிடித்து வைத்திருந்த அமெரிக்க உறவாளி பவர்ஸ் விடுதலை செய்யப்பட்ட செயல், கிழக்கு மேற்கு உறவில் ஒரு சிறிய நல்லெண்ண சமிக்ஞையாக இருந்தது. இதைத் தொடர்ந்து அமெரிக்காவும் தன்வசமிருந்த ரஷ்ய உறவாளியை விட்டிருக்கிறது.

இருவரும் முறையே மேற்கு ஜெர்மனியிலும், கிழக்கு ஜெர்மனியிலும் ஒப்படைக்கப்பட்டனர். இவ்வாறு சிறிய அளவில் நல்லெண்ண சமிக்ஞையைக் காட்டி, பெரிய காரியத்தைச் சாதிக்க முயல்வதில் திரு. குருஷ்சேவ் கெட்டிக்காரர். சில நாட்களுக்கு முன் கிழக்கு பெர்லின் எல்லையில் நிறுத்தப் பட்டிருந்த ரஷ்ய டாங்கிகளை அவர் வாபஸ் பெற்றுக்கொண்டார். அதைத்தொடர்ந்து எல்லையிலிருந்த அமெரிக்க டாங்கிகளும் வாபஸ் ஆயின. ஆயினும் வல்லரசுகள் அடிப்படை விஷயத்தில் இணக்கத்துக்கு வராததே உலகின் பெரிய கவலையாகும். ஜெனிவாவில் ஆயுதப் பரிகரண மகாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கும் 18 நாடுகளின் உச்சி மகாநாட்டை நடத்த வேண்டுமென் குருஷ்சேவ் சமீபத்தில் கூறியிருக்கிறார். ஆனல் அமெரிக்கா தற்போதைக்கு இந்த யோசனையை நிராகரித்ததற்குக் காரணம் இல்லாமலில்லை. மாஸ்கோவில் நடைபெறும் ரஷ்ய-அமெரிக்க ராஜதந்திரப் பேச்சுவார்த்தைகளிலேயே அடிப்படை விஷயத்தில் ஒரு இணக்கத்துக்கு வரமுடியவில்லை. இரண்டு நாடுகள் இணங்க முடியாத விஷயத்தை 18 நாடுகளின் மத்தியில் வேற்றிகரமாகச் சாதிப்பது என்பது கடைமுறையில் சாத்தியமல்ல. அது விஷயத்தை மேலும் குழப்பத்தில் ஆழ்த்துமே தவிர உருப்படியான நன்மை ஏற்படாது.

## நமது நூல் நிலையம்

**மகரத்தில் கிரகங்கள்: மனித வாழ்வில் என்ன?**

ஆசிரியர்: சோதிட ஆசான் செ. தெல்லியூர்;

விலை ரூபா 1-00.

'எட்டுக் கிரகங்கள் மகரத்தில் ஒன்று கூடுகின்றன என்பது சரியல்ல எனவும் மக்களது புலனுக்கு அக்கிரகங்கள் மகர இராசியில் ஒன்று கூடுவது போன்ற தோற்றத்தன்மையையே அவை தருகின்றன' வென ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்; அத்துடன் உலகம் அழிவதற்கு இக்கிரக கூடம் ஒரு போதும் உதவப்போவதில்லை யெனவும் அவர் எழுதியுள்ளார்.

இராசி ரீதியாகவும் பலன்கள் கூறப்பட்டுள்ளன; இப்பலன்கள் இவ்வாண்டுக்குமட்டுமன்றி 1963-1964க்கும் நீடிக்குமென ஆசிரியர் தெரிவித்துள்ளார். பலாபலன்கள் விபரமாகத் தரப்பட்டுள்ளன.

* *

**தங்கத் தாத்தா:**

ஆசிரியர்: தெல்லியூர்

வெளியீடு: தமிழ்மணிப் பதிப்பகம், யாழ்ப்பாணம்.

விலை: சதம் 50.

ஈழம் பெற்ற 'தங்கத்தாத்தா' வென அன்போடும் ஆசையோடும் அழைக்கப்படும் நவாலியூர். க. சோமசுந்தரப் புலவரின் வாழ்க்கை வரலாற்றை ஆசிரியர் இந் நூலில் சுருக்கமாகவும் விளக்கமாகவும் தந்துள்ளார்.

'காமகள் ஆசைப்பத்து' உட்பட புலவர் பிரானது வேறும் சில பாடல்கள் அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. [illegible]ஞர்களுக்கு உபயோகமான நூல்.

* *

**நாதம்:** இலங்கை இசைத் தமிழ் நிலைய வெளியீடு, உடுவில் சுன்னாகம்.

**ஆண்டுச் சந்தா:** ரூபா 4-00

தனிப்பிரதி சதம், 25.

இசைத் தமிழ் வெளியீடாகிய 'நாதம்' பொங்கல் திருநாளிலிருந்து மாத இதழாக வெளியாகி வருகின்றது. இசைக் கலை வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு 'நாதம்' தொண்டாற்றி வருமென்பது. மகிழ்ச்சிக்குரியது. பிரம்ம ஸ்ரீ சங்கர சுப்பையரின் வாழ்க்கைக் குறிப்புக்கள் உபயோகமான முறையில் அமைந்துள்ளன. இசை மாணவர் பகுதி ஒரு நல்ல முயற்சி. கலைஞர்களும் இரசிகர்களும் ஆதரிக்க வேண்டிய வெளியீடு இது. இசைத் தமிழ் நிலையத்தின் அதிபர் இசைப் புலவர் சண்முகரத்தினத்தின் முயற்சிகளைப் பாராட்டுகின்றோம்.

## வைடமின் மாத்திரை பழம்

ஏ. பி. ஸி, வைடமின் சத்துக்கள் நிறைந்த சிறிய பழரகம் ஒன்று பெங்களூர் வால்பாகில் பயிர் செய்யப்படுகிறது. இயற்கை அளிக்கும் பலசத்து வைடமின் மாத்திரை என்று இதை வர்ணிக்கலாம் என்பது இந்திய விஞ்ஞான ஆராய்ச்சி கவுன்சிலில் அதிகாரிகளின் கருத்து.

கா[illegible]ச் கொட்டை[illegible] செ[illegible]யைப்போல், கிளைகள் நிறைந்ததாய, வளருகிறது இந்த செடி. இதை "ஸ்மற்கிநதிப் செரி" என்றும், "பர்புடன் செர்ரி" என்றும் சொல்கிறா[illegible]கள் [illegible]ரில் உள்ள நில வளத்துக்கும் சீதோஷ்ண ஸ்திதிக்கும் ஏற்றதாய் உள்ளதாம் இது. குறிப்பாக இதில், "ஸி" வைட்டமின் சத்து மிகுதியாக உள்ளதாம்.

## செயற்கை கோள்கள் மூலம் தகவல் அனுப்பும் முறை

சர்வதேசத்தன்மை வாய்ந்ததாக விளங்கும் தகவல் போக்குவரத்துச் செயற்கைக்கோள் முறை ஒன்றை நிறுவுமாறு ஜனாதிபதி கென்னடி சட்ட மன்றத்துக்கு யோசனை கூறியிருக்கின்றார்.

மசோதாவில் கண்டுள்ள இலட்சியக் கொள்கைகளில் 'உலகம் முழுமைக்கும் தகவல் போக்குவரத்து, பிறநாடுகளுடன் ஒத்துழைப்பு நடத்தும் முறை ஒன்றை விரைவாக உருவாக்குதல், தொழில் துறையில் முன்னேறியுள்ள நாடுகளுக்கும் வளர்ச்சிக் குறைவான நாடுகளுக்கும் பணியாற்றும் ஏற்பாடு, அத்தாட்சி பெற்றவர்கள் இம்முறையைப் பயன்படுத்துவதில் பாரபட்சமின்மை" ஆகியவற்றிற்கு உறுதி செய்யப்பட்டுள்ளதென்று ஜனாதிபதி கூறினர்.

விண்வெளியில் அஞ்சல் நிலையங்களாகப் பணிபுரியும் செயற்கைக்கோள்கள் டெலிபோன், ரேடியோ, டெலிவிஷன் ஆகியவற்றின் மூலம் சர்வதேசத்தகவல் போக்குவரத்துக்கு வரம்பில்லாத வாய்ப்புகள் ஏற்படுத்தவல்லவை.

அமெரிக்கா இருவகை தகவல் போக்குவரத்து செயற்கைக் கோள்களை உருவாக்கி வருகிறது. ஒன்று, 1960 ஆகஸ்ட்மாதம் அனுப்பப்பட்ட எகிரோவி-1, பலூன் செயற்கைக் கோள் போன்ற 'அஞ்சல்' கோள் வகை. பூமியில் ஒரு நிலையம் அனுப்பும் ரேடியோ அலைகளைப் பிரதிபலிப்பு முறை மூலம் பூமியிலுள்ள மற்றொரு நிலையத்துக்கு இது அனுப்பும்.

மற்றொன்று 'ஒலி பெருக்கிப் பிரதி பலிப்பு' வகை. அதாவது, ஒரு நிலையத்திலிருந்து அனுப்பப்படும் செய்திகளைப் பெற்று, அவற்றின் ஒலியைப் பெருக்கிப் பின்பு, பூமியிலுள்ள மற்றொரு நிலையத்துக்கு அனுப்பும். இரண்டாவது வகைச் செயற்கைக் கோள்களில் ஒலியைப் பெருக்குவதற்கான மின்னணுப் பொறிகள் உண்டு.

## போக்கு வரத்து சப்தம் முதல் நம்பர் எதிரி

நாகரிகம்காரணமாகவிளைந்த ஒரு உபபொருள் போக்குவரத்துகளினுல் ஏற்படும் சப்தங்கள். இவை மனிதர்களின் முதல் நம்பர் விரோதி என்பது நிபுணர்களின் கருத்து. இந்த எதிரியை ஒழித்துக்கட்ட பவேரியத் தலைநகரான மூனிச்சில் பெரு முயற்சி செய்யப் பட்டு வருகிறது. இந்த ஒலியை எப்படி தடுப்பது என்பதைக் குறித்து சுமார் 100 நிபுணர்கள் இங்கு கூடி ஆலோசித்தனர். இந்தசப்தங்களினுல் ஏற்படும் தீமைகள், அதை தவிர்ப்பது எப்படி? சகிக்கும் அளவுக்கு இதைக் குறைக்க முடியுமா? என்பது பற்றி எல்லாம் இவர்கள் விவாதித்தனர்.

மனித நரம்பு முறை 80 போன் அளவுக்குத்தான் ஒலியைத் தாங்க முடியும் என்று

(11-ம் பக்கம் பார்க்க)




# மகளிர் மன்றம்

## அழகு மேடை

—"ஐரீன் ரஞ்சிதம்"—

கண்ணுக்கு மையிட்டுக் கண்களைப் பாதுகாப்பதுபற்றியும், வேப்பம் கொழுந்து மை சரிக்கட்டுவதுபற்றியும் சென்ற அழகு மேடையில் கூறியிருந்தேன். சகல அலங்காரங்களும் செய்துகொண்டு வைபவங்களுக்கு வெளிக்கிளம்பும்போது கண்களை எப்படி அழகு செய்துகொள்ளலாம் என்பதுபற்றி இன்று சுருக்கமாகத் தருகின்றேன்.

முக லட்சணத்துக்குக் கவர்ச்சியளிக்கும் அங்கம் கண்களே. ஆகவே வெளிக்கிளம்பும்போது கண்கள் கவர்ச்சியாக இருக்கின்றனவா என்று ஒவ்வொரு பெண்ணும் பார்த்துக்கொள்ளவேண்டும். முகத்துக்கு இளமையான தோற்றத்தையும் செஞ்செழிப்பான அழகையும் குளிர்மையான கண்களைதான் எடுத்துக்காட்டலாம். கண்கள் குளிர்மையாகவிருப்பதற்கும் காட்சியளிப்பதற்கும் கண்மை பாவிப்பதோடு வேறுசில "மேக் அப்"களையும் கையாளலாம். குளிர்மைக்கு என்றே தினமும் கண்மை இட்டுக்கொள்ளுவதோடும் வைபவங்களுக்கும் கொண்டாட்டங்களுக்கும் செல்லும்போது நவீன மேக் அப் சிலவற்றைப் பாவிப்பதில் தீமை எதுவுமில்லை. யுக்திகள் நிறைந்த நவீன மேக் அப்கள் சிலவற்றால் முகத்தோற்றத்துக்கு சிறிதாக அமைந்துள்ள கண்களைப்பெரிதாகவும், கருமை குறைந்த கண்களைக் கருமையாகவும் தோற்ற வைக்கலாம். கண்களை இவ்வாறு அழகுசெய்து கொள்வது முகத்தின் முழுத்தோற்றத்துக்கும் மெருகு கொடுப்பதாயும் அமையும்.

நவீன அழகு சாதனங்கள் சிலவற்றுக்குப் பெண்கள் நன்றி செலுத்தாமல் இருக்க முடியாது என்று முன்னர் கூறினேனல்லவா. கண்களை அழகு செய்யும் சில சாதனங்களைப் பொறுத்தவரை பெண்கள் பெரிதும் கடமைப்பட்டவர்களாவர்.

### புருவங்கள்

முகத்துக்குக் கெம்பீரமான தோற்றமளிப்பவை கண்புருவங்களே. இயற்கையான புருவங்கள் தான் அழகு வாய்ந்தவை. ஆனால் எல்லோருக்கும் இயற்கையாகவே அழகிய புருவங்கள் இருப்பதில்லை. கோடிட்டது போன்ற கருமைமான வளைந்த புருவங்கள் முகத்துக்கு அதிக அழகு கொடுக்கும். சிலருக்குப் புருவரோமமே மிகவும் லேசாகத்தான் இருக்கும். புருவரோமம் குறைந்து காணப்பட்டால் கண்களின் அழகும் குறைவாகத்தான் இருக்கும். இங்கு நவீன சாதனம் உதவுகிறது. 'மஸ்காரா' என்னும் புருவம் தீட்டும் பென்சிலைக்கொண்டு அடர்த்தியும் கருமையும் குறைந்த புருவங்களை அழகுபடுத்தலாம். இப் பென்சிலைக் கொண்டு புருவங்களைச்சிறிது நீட்டாகத் தோற்றவும் செய்யலாம். கண்ணின் இருமடல்களும் சந்திக்கும் வெளிப்புறக் கோணத்தில் இப்பென்சிலைக்கொண்டு மேல்புறம் நோக்கியவாறு ஜாடையானகோடிட்டு கோணத்தைக் கருமையாக்குவது கண்ணுக்கு மேலும் அழகைத் தரும். புருவக்கோடுகளும் இந்தக்கோடும் கண்களை அகலமானவையாகவும் கருமையானவையாகவும் எடுத்துக்காட்டும். 'பெருந்தடங்' கண்கள் தானே அழகென்று புலவர்களும் பாடியுள்ளார்கள். ஆனால் இதற்காக அளவுக்கு மீறிப் புருவங்களைத்தீட்டிவிடக்கூடாது. மேக் அப் எதுவும் செய்து கொள்ளாத இயற்கையான கண்கள் என்று பார்ப்பவர் நினைக்கும்படி சாதுரியமாக மேக் அப் செய்துகொள்ள வேண்டும். குறிப்பாகக் கண்களுக்கு அளவுக்கு மிஞ்சிய மேக் அப் செய்துகொண்டால் பயங்கர தோற்றமாகக்கூட ஒரு சிலர் காட்சியளிக்கலாம். இயற்கையாகவே கருமையும் அழகுமுள்ள கண்களை உடையவர்கள் எதுவித 'மேப்அப்'க்களை உபயோகிக்க வேண்டியதேயில்லை.

கண் புருவங்களைப்போலவே கண் இமைகளிலும் கவனம் செலுத்தப்படவேண்டும். இமைகளில் படிந்திருக்கக்கூடிய பவுடர் ஏனைய பொருள்களை மென்மையான இமை 'ப்ரஷ்' ஒன்றைக்கொண்டு அகற்ற வேண்டும்.

வெளி 'மேக்அப்'களோடு உள்விழியும் குளிர்மையாகவிருந்தால் தான் கண்களில் பிரகாசம் ஏற்படும். வெள்ளை விழியும் கண்களின் கருமணிகளும் பிரகாசமாகத் தோற்றுவதற்கு அவற்றைச்சுத்தமாகவும் குளிர்மையாகவும் வைத்திருக்க வேண்டியது அவசியம். நந்தியாவட்டை மலர் ஊறவைத்த நீரில் கண்களை இடைக்கிடைய கழுவுவது அவற்றுக்குக் குளிர்மையை ஏற்படுத்தும். 'ஒப்ரெக்ஸ்' (OPTREX) 'ஐஜீன்' (EYEGENE) எனப்படும் கண் சுத்தி சாதனங்களை உபயோகிப்பதாலும் கண்களுக்குப் பாதுகாப்பும் அழகும் தேடலாம்.

## மகிழ்ச்சியூட்ட மனோதைரியம்!

கன்னியாக இருக்கும்போது பெற்றோருக்கும், கலியாணம் செய்தபின்னர் கணவனுக்கும், தாயான பின்னர் பிள்ளைகளுக்கும் கவலை போக்கிக் களிப்பூட்ட வேண்டியவள் பெண். பிறருக்குக் கவலை தீர்க்கும் பெண்களிடமே கவலை குடி கொள்வது கிட்டடிக்கும் ஆகாது. எந்தச் சூழ்நிலையையும் ஏற்றும், எதிர்த்துப் போராடியும் வெற்றி காணும் மனோதைரியம் இருந்தால்தான் தம்மைக் கவலை அணுகாது பார்த்துக்கொள்ளவும் பிறருக்கு மகிழ்ச்சி அளிப்பதற்கும் பெண்களால் முடியும்!

## என்ன செய்யலாம்?

'கௌரி'

### தொடர்ந்து வாந்தி எடுத்தால்...

சில சமயங்களில் வீட்டிலுள்ள எவராவது தொடர்ந்து விடாப்பிடியாக வாந்தி எடுப்பதுண்டு. தொடர்ந்து நெடுநேரம் வாந்தி ஏற்படுவதற்கான காரணத்தை வெகு இலகுவாகக் கண்டுபிடித்துவிடமுடியாது. எனினும் வாந்தி எடுக்கும் ஒருவருக்கு வழங்கக்கூடிய சிகிச்சையை ஒவ்வொரு பெண்ணும் அறிந்திருப்பது நல்லது.

பல காரணங்களைக்கொண்டு வாந்தி ஏற்படலாம், மதுபானம் போன்ற பலவகை நஞ்சுகளினால் அதிகமான வாந்தி ஏற்படலாம். மூளைப்பகுதியில் இரத்த ஒழுக்கு ஏற்பட்டு மூளையில் சதை வளருகிற பொழுதும் அப்பகுதியில் இரத்த ஓட்டத்துக்குத் தடை ஏற்படும் பொழுதும் வாந்தி ஏற்படுவது சகஜம். அச்சமயங்களில் வாந்தி கட்டுப்படாது. கடலில் முதன்முதலாகப் பிரயாணஞ்செய்யும்போதும் பலருக்கு வாந்தி ஏற்படுவதுண்டு. செவியின் உட்பகுதியில் ஏதாவது நோய் தோற்றும்போதும் பலத்த வாந்தி ஏற்படலாம். கண் கடுமையாக உறுத்தும் பொழுதும் கண்ணடி போட வேண்டியதாகிறபோதும் கண்ணின் கருவிழியைச் சுற்றிலும் சதைக் கனம் சமமாக இராத காரணத்தாலும் வாந்தி ஏற்படுவதுண்டு. கர்ப்ப காலத்தில் நரம்புத்தளர்வால் வாந்தி உண்டாகின்றது. பஸ்ஸில் பிரயாணம் செய்யும்பொழுதும், விமானத்தில் பிரயாணம்செய்யும்பொழுதும் கடுமையான குமட்டலும் வாந்தியும் ஏற்படுவதுண்டு.

வயிற்றைக்கு குமட்டி வாந்தி தொடர்ந்து வரும்போது ஏற்படும் அனுபவம் மிகவும் சிரமமானது. எந்தக்காரணத்தினால் வாந்தி எடுத்தாலும் குமட்டல் இருக்கும்பொழுது ஏற்படும் உணர்வினால் மட்டும் உடல்நிலை எத்தகைய மோசமானதென்பதை அறியமுடியாது.

வாந்தி கறுப்பு நிறமாகவோ, தவிட்டு நிறமாகவோ, தண்ணீரைப்போன்றோ இருக்கலாம். ஆகாரத்துடன் கலந்தோ தனி இரத்தமாகவோ ஒருவர் வாந்தி எடுக்கலாம். உறைந்த இரத்தமாகவோ அல்லது மஞ்சள் பச்சை நிறமுடைய பித்தநீராகவோ வாந்தி வெளிப்படலாம்.

நோயாளியைப் படுக்கையில் வைத்தே 24 மணி நேரத்துக்கு ஆகாரம் கொடுக்காமல் இருக்கும்போது மறுபடியும் தொடர்ந்து வாந்தி இருந்துவந்தால் கண்டிப்பாக ஒரு டாக்டரை அழைத்தாகவேண்டும். அவ்வாறு வாந்தி ஏற்படுவது கடுமையான நோயின் அறிகுறியாகும். வாந்தி எடுத்ததன் காரணத்தைக் கண்டுபிடித்து அதைத் தடுக்காவிடின் உயிருக்கே மிகுந்த ஆபத்து நேரலாம்.

குமட்டி கடுமையான வாந்தி எடுக்கும்போது நோயாளியைப் படுக்க வைத்து அவருடைய பாதங்களுக்குக் கீழே வெந்நீர் அடைத்த ரப்பர் புட்டியைவைத்து, அடி வயிற்றுக்கு குளிர் ஒத்தனம் கொடுக்க வேண்டும். சிறிது அளவு சூப அல்லது கஞ்சி, ஐஸ் பால், இலேசாக அவித்த முட்டை ஆகியவற்றை உணவாகக் கொடுக்கலாம். இவற்றையும் வாந்த எடுக்க ஆரபித்தால் ரொட்டி ஊறவைத்த தண்ணீரைக் கொடுத்துப் பார்க்கலாம் அதையும் வாந்தியெடுத்துவிட்டால் உணவு எதுவும் கொடுக்காதிருப்பதே நலம்.

24 மணி நேரத்துக்கு ஆகாரமின்றிப் படுக்கையிலே இருக்கும்பொழுதும் தொடர்ந்து வாந்தி எடுத்தால் டாக்டரிடம் காண்பிக்கவேண்டும். வாந்திக்குக் காரணம் இன்னதென்பதைக் கண்டுபிடித்து அதற்கேற்ப சிகிச்சை வழங்கபபட வேண்டும்.

## "கணவரிடம் கூறிவிடாதீர்..."

—'சசி'—

காலத்துக்கும் சந்தர்ப்பத்துக்கும் ஏற்றவாறு கணவரிடம் ஒரு மனைவி பேச்சுக்கொடுப்பதென்றால் அது சுலபமான வேலையல்ல. காரணம் எதுவுமின்றி மனைவியின் சாதாரண பேச்சுக்கும் கடிந்துவிழும் கணவர்களின் எண்ணிக்கைக்கு குறைவில்லை. பெரும்பாலான கணவர்களிடம் இந்தக்குணம் இருக்கத்தான் செய்கிறது. இதை அப்படியான கணவர்களே ஏற்றுக்கொள்வர். 'எந்த நேரத்தில் எந்த விஷயம் பற்றிப் பேச வேண்டும் என்று தெரியாதா'? என்று தமது குற்றத்தையுணர்ந்தபின் மனைவிமாரைக் கடிந்துகொள்ளும் கணவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

கணவன் தீவிரமாகஏதாவது முயற்சியில் ஈடுபட்டிருக்கும் போது முட்டாள் தனமாகப் பேச்சுக் கொடுத்துவிடும் சில மனைவிமார் பின்னர் தமக்காக வேதனைப்படுவதோடு கணவன் மாருக்காகவுமே கவலைப்படுவதுண்டு. கணவரிடம் சாதுரியமாகவும் சமர்த்தாகவும் தாம் பேச்சுக்கொடுக்கிறார்களா என்பதை இதை வாசிக்கும் மனைவிகள் யோசித்துப் பார்ப்பார்களா?

தமக்கான காரியங்கள் எதையும் கணவன் மூலமாக ஒப்பேற்ற விரும்பும் மனைவிமார், கணவரின் மனநிலையை நன்கு அறிந்தே அக்காரியங்கள் பற்றிப் பேச்சுக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் எத்தகைய நல்ல கணவனிடமிருந்தும் படுதோல்வியைத் தான் எதிர்பார்க்க வேண்டும். ஆமாம்! காரியாலயத்தில் தலைமை அதிகாரியுடன் தகராறு பட்டுக்கொண்டுகுழம்பிய மனநிலையுடன் வீடு திரும்பியுள்ள கணவரிடம் 'காஷ்மீர்' சாரி வாங்கித்தரும்படி கேட்டால் காரியம் கை கூடுமா? காஷமீர் சேலை வாங்கித்தரும்படி கணவரிடம் மனைவிகேட்பதில் குற்றமெதுவுமில்லை. காரியம் பலிதமாகும் வகையில் கோரிக்கையைப் போடவேண்டாமா? எடுத்துக்கொள்ளப்பட்ட விஷயம் பற்றிப்பேச்சுக் கொடுப்பதற்கேற்ப சந்தர்ப்பத்தை முதலில் தயார் செய்துகொள்ளவேண்டும்.

கணவருடன் ஏற்படக்கூடிய தகராறுகள் எவற்றையும் தவிர்க்கக்கூடிய வகையில் மனைவிமார் அவர்களுடன் பேச்சுக் கொடுக்க வேண்டும் கணவர்களிடையே பொதுவாகக் காணப்படும் குணதிசயங்களை மனைவிமார் உணராதவர்களல்ல.

என்னைப்பார்க்க எப்படி இருக்கிறது? என்று ஒருமனைவி கணவரிடம் ஒரு போதும் கேட்டுவிடக்கூடாது.பார்வைக்குத் தகுதியற்றிருந்தால் கணவர் ஏற்கனவே ஏதாவது சொல்லாமல் இருந்திருக்கமாட்டார். பார்வைக்கு நன்றாக இருந்தால் கணவர் உற்றுக் கவனிக்கமாட்டார். உடையோ அலங்காரங்களோ கோணல் மாணலாக இருந்தால் கட்டாயமாக அவை கணவரின் கவனத்திலிருந்து தப்பி விடமாட்டா. மனைவியின் அலங்காரங்களும் தோற்றமும் அழகாக இருக்கும் போது இக்கேள்வியை மனைவி கேட்டு விட்டால் 'ஜோர் ஜோர்' என்று தனது செயலில் கவனம் செலுத்தியவாறே கடமைக்குக் கூறிவிட்டு அசட்டையாகவிருப்பது பல கணவர்களிடையே காணப்படும் பொதுக் குணதிசயம்.

"என் அம்மாவைப் பைத்தியம் என்றுதான் நான் கருதுகிறேன்" என்று கணவர் கூறிவிட்டால் 'ஆமாம் சுத்தப் பைத்தியம்தான் என்று மனைவி கூறி விடக் கூடாது. உடனே கணவர் 'தாம் அப்படி நினைக்கவில்லை' என்று திருப்பிப் பதில் கூறிவிடுவார். அப்போது மாமியாரை ஒரு பைத்தியம்என்று மனைவி கூறிவிடநேரிடும்.

"எனக்குக் களைப்பாக இருக்கிறது" என்று கணவரிடம் கூறிவிடாதீர்கள். அதைக் கணவரின் செவியில் போட்டுவிட இதோ உபாயம்! "நீங்கள் நன்கு இளைத்துவிட்டீர்கள். ஏன் ஆபீஸில் கடும் வேலையா?" என்றுவிட்டால் போதும். "சீச்சீ அப்படியொன்றுமில்லை; எப்படி உன் உடம்பு..."? என்று வளத்திலே அளப்பார்.

"அம்புஜம் எப்படித்தான் அவள் கணவனுடன் காலம் விடுகிறாளோ. பாக்கியநாதன் படுமோசமாகிவிட்டார்" என்று கணவரிடம் மனைவி பிறர் விஷயம்பற்றிப் பேசிவிட்டால் அவள் முழுமுட்டாள்தான். பாக்கியநாதன் கணவரின் நண்பனாக இருந்துவிட்டால் அம்புஜம் மட்டுமல்ல அவளின சிநேகிதிகள் அத்தனைபேரையுமே பேச்சைக்கேட்ட கணவர் குற்றவாளிப் பட்டத்துள்ளாக்கி விடுவார். பக்கம் எதுவும் சாராமல் அம்புஜத்துக்கும் அவள் கணவருக்கும் ஒத்து வருவதில்லை என்று பொதுவாகச் சொல்லிவிட்டால் காரியம் பிழைபோகாது.

விவாகமாகுமுன்னர் நட்புறவாகவிருந்த ஆடவர் எவர் பற்றியும் மனைவிமார் கணவரிடம் பேச்சுக்கொடுப்பது விபரீதத்தில் முடியவுங்கூடும். 'பரவாயில்லை. நான் செய்கிறேன்' என்று கூறிவிட்டு கணவரின் சொந்த வேலைகளையும் செய்ய முற்படும் மனைவி கணவனைப் பழுதாக்கியே விடுவாள்.

கணவரிடம் உங்கள் கனவுகள்பற்றிக் கூறிவிடாதீர்கள் நடுநிசி வேளையில் கனவு கண்டு எழும்பிய ஒரு மனைவி தன் கணவரை எழுப்பி தனது கனவைச் சொல்ல ஆரம்பித்தாராம். "பயங்கரமான ஒரு கனவு கண்டேன். அந்நிய ஆஸ்பத்திரி ஒன்றில் எனக்கு ஒரு பயங்கரமான ஆப்பரேஷன் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அப்போது உங்களை அழைத்துவரும்படி நான் கத்தினேன். ஆனால் உங்களைக் காணாமல் எல்லா இடங்களிலும் தேடினார்கள்"

மனைவி கனவைக் கூறியதும் கூறாததும் கட்டிலில் புரண்டவண்ணம் கணவர் என்ன கேட்டார் தெரியுமா?

"என்னைக் 'கிளப்பில்' தேடிப்பார்த்தார்களா?"

இதுதான் அவர் கேட்ட அசட்டைக் கேள்வி

# ஆரம்ப மேற் பிரிவுக் கல்வியும், போதனு மொழியும்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

படிக்கவேண்டும். விஞ்ஞான கணித சாஸ்திர பாடங்களை ஆங்கிலத்தில்மட்டும் பயின்று மற்றும் 'ஆட்ஸ்' பாடங்களைத் தமிழிலே பயின்றால் அது பின்னுக்கு உங்களுக்கு மிகவும் சிறந்த நன்மைதரும்.

"தமிழ் உங்கள் உள்ளத்தைப் பண்படுத்தி உயர்த்த, உங்களுக்குச் சமய அறிவை ஊட்ட, உங்களின் உயிரான உணர்ச்சியைப் பெருக்க உதவும். ஆங்கிலம் உங்கள் உடலை வளர்க்க உதவும். அதாவது: உலகத்தில் பல்வேறு இடங்களுக்கும் சென்று பல விஷயங்களையும் அறிந்துவர, விஞ்ஞானத்தின் வளர்ச்சியையும், விந்தைகளையும் விளங்கி அவற்றை உங்கள் நேர்த்தியான ஒழுங்கான உல்லாசமான உலக வாழ்வுக்குப் பயன்படுத்த ஆங்கிலப் படிப்பறிவு உதவும். இன்னும், உங்கள் காலத்தில் உத்தியோகம் பெறுவதற்கும், உயர்ந்த பதவிகளை வகிப்பதற்கும் ஆங்கில அறிவு இருந்தால் கூடிய சந்தர்ப்பங்கள் கிடைப்பது சுலபமாகும் ஆகவேதான் சொல்லுகிறேன் 'அகம் செழிக்க அன்னைத் தமிழ் மொழி அறிவு பயன்படும்; புறம் சிறக்க அந்நிய ஆங்கில மொழி அறிவு பெரிதும் பயன்தரும். திறமையுடன் இரு மொழிகளையும் தினம் படித்துச் சித்தியெய்தினால் சிறப்புடன் வாழ்வது திண்ணம் தெரிந்துகொள்ளுங்கள்."

## இயலாத காரியம்

சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் எல்லாப் பிள்ளைகளுக்கும் கற்பிக்கவேண்டும் என்று வாதிக்கும் ஒருசாரார் தற்போது இலங்கையில் இருக்கின்றார்கள். அப்படிச் செய்வதென்பது இயலாதவோர் காரியம். செயல் முறையில்சரி, அநுபவ முறையில்சரி, இது விவேகமுள்ள, பயன்தருவதற்குரிய ஒப்பேறக்கூடிய ஒரு முயற்சியாயிருக்காது என்பதைமட்டும் அவர்கள் உணர்ந்து கொள்ளாதது கவலைக்குரிய விஷயம். இது கல்வித்துறை அறிஞர் ஆராய்ந்து கண்ட முடிவு. சிறுபிள்ளைகளைக் கட்டாயப்படுத்தி மூன்று பாஷைகளையும் கற்பிப்பதனால் அவர்களுடைய மன வளர்ச்சியும், மூளை அபிவிருத்தியும் கிரமமாகவும், உறுதியாகவும் முன்னேற்றமடைதல் பாதிக்கப்படும். உங்களையும், உங்களைப் போன்ற மற்றும் எல்லாப் பிள்ளைகளையும் இரண்டு மொழிகளை மிகவும் அநுகூலமான முறையில் படிக்கவேண்டும் என்று நான் எப்போதும் தூண்டுவேன். வாசிக்க, எழுத, பேசக்கூடிய திறமை பெறும் வரைக்கும், "தமிழையும், ஆங்கிலத்தையும் தமிழ்ப் பேசும் பிள்ளைகளும் அல்லது சிங்களத்தையும் ஆங்கிலத்தையும் சிங்களம் பேசும் பிள்ளைகளும் படிப்பதுதான் சிறந்த முறையாகும். ஒருபிள்ளை தனது பள்ளிக்கூடப் படிப்பையோ அல்லது சர்வகலாசாலைப் படிப்பையோ பூர்த்திசெய்துகொள்ளும் வரை இரு மொழியறிவும் போதுமானது. படிப்பு முடித்துப் பின்வாழ்க்கை ஆரம்பிக்கும் நாட்களில், தனது தொழில் முறை காரணமாக, தேவையென்று காணும் பட்சத்தில், மூன்றாவது மொழியைப் படித்துத் தேர்ச்சியடைவதில் நன்மையுண்டு. உத்தியோகம், தொழில் முறை, ஒருவரோடொருவர் எண்ணத்தைப் பரிமாற, சமூக ஒற்றுமை ஆகியவற்றுக்காக சிங்கள உத்தியோகத்தர் தமிழையும், தமிழ் உத்தியோகத்தர் சிங்களத்தையும் பிழைப்பின் நிமித்தம் படித்தறிந்து கொள்வது எக்காலத்தும், எல்லா மக்களுக்கும் நன்மை பயக்கக்கூடியவோர் விஷயமாகும்.

உங்கள் அப்பாவுக்கு வீட்டில் ஆங்கிலம் பேசிப்பழகும் வசதியொன்று மிருக்கவில்லை. ஆதலால் பள்ளிக்கூடத்திலும் உங்கள் அப்பா அதிகமாகத் தமிழில்தான் பேசுவார். பிள்ளைகள் ஆங்கிலத்திலும் தேர்ச்சியடையவேண்டும் என்னும் விருப்பத்தினால், பள்ளிக்கூட நேரத்தில்சரி, வகுப்பறைகளில் சரி, தமிழில் பேசினால் ஆசிரியர்கள் சிலதருணம் பிரம்பால் அடித்தும் சிலதருணம் குற்றமடித்தும் பிள்ளைகளைத் தண்டிப்பது வழக்கம். ஆனால் ஆங்கிலத்தை விரைவாகப் படித்துவிடவேண்டுமென்று ஆர்வத்தோடு முயற்சி செய்யும் போதுகூட, இரகசியமாக, அதிகமான கணக்குகளைச் செய்வதிலேயே என்மனம் ஈடுபாடு கொண்டு என்னையறியாமல் மூழ்ந்து நிற்கும்.

## உண்மையான கதை

நான் சுந்தரேந்திரனுக்கு எழுதிய கடிதத்தை நீங்களும் படித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். உங்கள் ஞானிமாமாவை றோயல் ஆரம்ப பயிற்சிப் பள்ளிக்கூடத்திற் சேர்ப்பதற்கு நான் சிரமப்பட்டதைப் பற்றி அதிலிருந்து அறிந்திருப்பீர்கள். நான் அவரைப் பற்றி இன்னுமோர் உண்மையான கதை சொல்லப்போகிறேன். ஞானி மாமா றோயல் ஆரம்பப் பயிற்சிப் பாடசாலையில் சேர்ந்து ஐந்து வருடங்கள் சென்றுவிட்டன ஒருநாள் அவரின் பள்ளிக்கூடத்தில் நடந்த பெற்றோர்—ஆசிரியர் தினக் கொண்டாட்டத்திற்கு (உங்கள் ஆச்சாவும், அப்பாவும்) நாங்கள் அழைக்கப்பட்டிருந்தோம். பிள்ளைகள் "அலிஸ் இன் உவண்டர்லண்ட்" அதிசய உலக அலிஸ்) என்னும் கதையின் ஒரு பாகத்தை ஆங்கிலத்தில் நடித்துக்காட்டினார்கள். அந்தக் கதையின் முதற்பகுதியில் முக்கிய பாத்திரமாக—கதாநாயகனாக-நடித்தவர் பாடசாலை அதிபரான வெள்ளைக்காரப் பிறின்ஸிப்பலின் மகன். அடுத்த பகுதியில் முக்கிய பாத்திரமாக—கதாநாயகனுக்கு — நடித்தவர் உங்கள் ஞானிமாமா. அந்த ஐரோப்பிய அதிபரும், நானும் அக்கம்பக்கமாக நின்று பிள்ளைகள் நடிக்கும் முறையைக் கவனமாகப் பார்த்து இரசித்தோம். சடுதியாக, அக்கிளிப் பினால், ஆரவாரம் செய்துகொண்டு. "அந்தப் பையன் மிகவும் மெச்சத்தக்கமாதிரி நடிக்கின்றானல்லவா!" என்றார் பிறின்ஸிபல். நான் கேட்டேன், "உங்களுக்கு அந்தப் பையன் யார் என்று தெரியுமா?" என்று. "இல்லை, தெரியாது" என்றார் பிறின்ஸிப்பல். "அந்தப் பிள்ளையைப்பற்றித்தான், அவர் தமிழ்ப்பிள்ளை, உங்கள் பள்ளிக்கூடம் இங்கிலிஷ் பள்ளிக்கூடம் என்றெல்லாம் நீங்களும், நானும் பல காகிதங்கள் பரிமாறினோம், ஞாபகமிருக்கின்றதா?" என்றேன் நான். பிறின்ஸிப்பல் ஆச்சரியத்தோடு சிரித்தபடியே 'அவர் உங்கள் மகனா?' என்றார். நான் 'ஆம்' என்றேன்.

பார்த்தீர்களா, உங்கள் ஞானி மாமா அரிவரி அறிவுகூட இல்லாமல் ஆங்கிலம் படிக்க ஆரம்பித்து ஐந்து வருடத்தில் அவர் வகுப்பில் படித்த ஐரோப்பிய அதிபரின் மகனுடைய—ஒரு இங்கிலிஷ் பையனுடைய—அளவுக்கு திறமை பெற்றிருந்தார். ஞானி மாமா தமிழில் அவ்வளவு தெளிவாகவும், அழகாகவும் பேச தற்போது விளங்கப்படுவதை நீங்கள் கண்டிருக்கிறீர்கள். அது ஏன் தெரியுமா? இங்கிலாந்தில் பிரபல்யம் வாய்ந்த கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தில் அவர் உயர்தரக் கல்வி பயின்று முதன்மை வாய்ந்த விஞ்ஞானத்துறைக் கலாநிதியானார் அதற்கு எந்நேரமும் ஆங்கில சுற்றுப்புறத்தில் வாழ்ந்து, ஆங்கிலத்திலே படித்து, ஆங்கிலத்தின்மூலம் நினைத்து, ஆங்கிலத்திலேயே ஆராய்ச்சிகளும் செய்யவேண்டியிருந்தது. அப்படிப் படித்து ஆங்கில மொழியில் பாண்டித்தியம் அடைந்திராவிடின் இன்று விஞ்ஞான உலகில் அவர் பெற்றிருக்கும் அறிவாற்றலையும், மேன்மையையும் ஒருபொழுதும் அடைந்திருக்கமாட்டார். நான் ஏற்கெனவே இந்தக் கடிதத்தில் வரையறுத்துக் கூறியமாதிரி ஆங்கிலத்தில் மட்டும் அவர் விஞ்ஞானபாடங்களைப் படித்துத் தேர்ச்சியடைந்தபடியால் — கேம்பிறிஜ் சர்வகலாசாலை—ட்றினிக்றி கல்லூரி—விஞ்ஞான ஆராய்ச்சித் துறை அங்கத்தவர் (Fலோ) என்னும் அபூர்வமான பட்டத்தையும், கௌரவத்தையும் பெறமுடிந்தது என்பது உங்களுக்கு ஞாபகமிருக்கட்டும்.

## இன்னுமோர் உண்மை

இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னுமோர் உண்மையான கதையை நான் சொல்லத்தான் வேண்டும். காலஞ்சென்ற இலங்கைப் பிரதமர் கனம் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கின்றீர்கள். பத்திரிகைகள் மூலமாகவும் பலபேரிடமுமிருந்து நீங்கள் அவரைப்பற்றி அநேக விஷயங்களை அறிந்திருப்பீர்கள். அவர் அலங்காரப் பேச்சில் கெட்டிக்காரன். இலங்கையெங்கும் சிங்கள மொழியில் பிள்ளைகளுக்குக் கல்வி போதிப்பதின் சிறப்புகள்—மேன்மைகள் பற்றியும் அந்தத் திட்டத்தை அமுல் நடத்தவேண்டியதின் அவசியம் பற்றியும் ஆணித்தரமாகவும், விவேகமாகவும் அநேகம் முறை பார்லிமெண்டில் பல மணி நேரங்கள் பேசியிருக்கிறார். நான் அவருடைய கோணல் நியாயங்களைச் சுட்டிக்காட்டி, ஆங்கிலத்தில் கல்வி போதிப்பதின் அதிமுக்கியத்துவம் பற்றி அவரிலும் கூடிய ஆதார பூர்வமாகப் பேசினேன். இச்சம்பவம் நடந்த சில நாட்களின்பின் இப்போது இலங்கைப் பிரதம மந்திரியாக இருக்கும் அவருடைய மனைவியாரையும், அவரையும் ஒரு விருந்து வைபவத்தில் சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அப்போது நான் அவர் முகதாவில் அவ்விடம் வேடிக்கையாக வினவினேன்; "உங்கள் பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்கும் விஷயத்தில் உங்கள் புருஷன் பார்லிமெண்டில் பேசிய கொள்கையைக் கடைப்பிடிக்கின்றீர்களா அல்லது நான் தெரிவித்த அபிப்பிராயத்தைப் பின்பற்றபோகின்றீர்களா?". அதற்கு; "எனது கணவனுடைய கொள்கையிலும் பார்க்க உங்கள் அபிப்பிராயந்தான் சிறந்தது என்றெனக்குப் படுகின்றபடியால், கல்வி விஷயத்தில் நீங்கள் சொன்னவழியைத்தான் நான் ஏற்றுக்கொள்ளுகின்றேன்", என்று அவவும் என்னைப்போலவே வேடிக்கையாகப் பதிலளித்தா.

உங்களுக்குத் தெரியுமா' இராஜ் - குமார்! எத்தனையோ உயர்ந்த விஷயங்களும் பெரும் உண்மைகளும் வேடிக்கையாகவும், வேடிக்கை போலவும் தான், பேசப்படுகின்றன!

நீர்க்குமிழிபோல் நிலையற்றதான, இன்றைய உணர்ச்சி வேகம்பற்றி நான் கவலைப்படவில்லை. எவரும் அதனால் தூண்டப்பட வேண்டியதுமில்லை. அகில இலங்கைக்கும் எல்லாப் பிள்ளைகளுக்கும், எக்காலத்திற்கும் ஏற்புடைய சாத்தியமான கல்விக் கொள்கையும், சிறந்த மொழிவழிப் போதனையும், நான் இந்தத் தபாலில் ஒப்புரவுடன் உணர்த்திய ஒரே வழிதான்; இதில் உங்களுக்கு எள்ளளவும் ஐமிசமோ, அபிப்பிராய பேதமோ இருக்கவேண்டியதில்லை.

எனக்கு எட்டு வயதாய் இருக்கும்போது எனது தகப்பனார் இறந்துவிட்டார் நானும், எனது தாய் சகோதரங்களும் குடும்பமாக உரும்பிராய்க்கு மீண்டும் சென்றோம். அங்கிருந்து கொண்டு எனது மத்திய பிரிவுக் கல்வியைத் தொடர்ந்து படிக்க கோப்பாயிலுள்ள ஆங்கிலப் பள்ளிக்கூடத்திற்குச் செல்லவேண்டியிருந்தது.

இராஜ்-குமார்! உங்கள் அப்பா அனுபவித்த கஷ்டங்களைக் கேட்டு நீங்கள் துக்கப்படுவீர்கள் என்று எண்ணுகிறேன். உங்களுக்கு நல்ல பல வசதிகளுண்டு. இந்த வசதிகளையெல்லாம் உங்கள் காலத்தில் தக்க வேளையில் சரியான பாதையில் நீங்கள் உபயோகப்படுத்திப் பயன் பெற வேண்டும். ஊக்கமும், முயற்சியும் மிக்க உத்தம மாணவன் நீங்களல்லவா! இயற்கை விவேகமும், திறமையும் நிரம்பவுள்ள பேரன் என்று உங்கள் ஆச்சாவும், அப்பாவும் பெருமைப்படும்படியாக, உங்கள் பெற்றோருக்கு புகழும், மகிழ்வும் உண்டாகும்படியாக நீங்கள் படிப்பிலும், ஒழுக்கத்திலும் சிறப்படையவேண்டும். உங்கள் அம்மா உங்களின் எதிர்கால நன்மை கருதியே வெளியில் உங்களோடு கண்டிப்பாகவும், கடுமையாகவும் நடந்துகொள்வது வழக்கம்.

அன்பும், ஆதரவும், அறிவிற் சிறந்த வழிகாட்டியும் உங்கள் அம்மா.

உங்களில் மிக்க அன்புள்ள
அப்பா.

# குள்ளமாக இருப்பவர்களை வளரச்செய்ய வழி

மிகக் குள்ளமாக உள்ளவர்களை ஹார்மோன் சிகிச்சைக்கு உட்படுத்துவதன் மூலம் வளரச் செய்துவிட முடியும் என்பது இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆரம்பக் கட்டத்தில் கிடைத்துள்ள வெற்றி மிகச் சிறியதேயானாலும் பூரண வெற்றி வெகு சீக்கிரத்திலேயே கிடைத்துவிடும் என்று எதிர் பார்க்கப்படுகிறது

உடல் வளர்ச்சி குன்றி குள்ளமாக இருப்பவர்களை ஹார்மோன் சிகிச்சைக்கு உட்படுத்துவதன் மூலம் வளரச் செய்ய முடியும் என்பதை மேற்கு ஜெர்மன் நிபுணர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர். சுமார் 40 வருடங்களாக இது சம்பந்தமான ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. ஆண்கள் 59 அங்குல உயரத்திற்கும் பெண்கள் 54 அங்குல உயரத்திற்கும் குறைந்தவர்களாக இருந்தால் அவர்களை "குள்ளர்கள்" என்றே கருதவேண்டும் என்று கருதப்பட்டு வருகிறது. பிராங்பர்ட் பல்கலைக் கழகத்திற் கண்டுபிடிக்கப்பட்ட இந்த சிகிச்சை முறை சாதனை பிரபலமடைந்து நிபுணர்களின் ஆர்வத்தைத் தூண்டி விட்டுள்ளது

உடலை வளரச் செய்வதற்கான ஒரு பொருளை "பிட்னிடரி" நாளம் உற்பத்தி செய்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஹார்மோன் உயர்தர பிராணிகளிடமிருந்து எடுக்கப்பட்டு கீழ்த்தரப்பிராணிகளின் உடலில் பிரயோகிக்கப்பட்டது. இதில் வெற்றி காணப்படவே கால்நடைகளின் ஹார்மோன்கள் எலிகள் உடம்பில் .செலுத்தப்பட்டது: இதன் மூலம் ஒரு அங்குல வளர்ச்சி காணப்பட்டது. தாழ்ந்த பிராணிகளின் ஹார்மோன்கள் உயர்தர பிராணிகளின் உடம்பில் புகுத்தப்பட்டபோது எவ்வித வளர்ச்சியும் காணப்படவில்லை.

இந்த ஹார்மோன் சிகிச்சை பின்னர் மனிதர்களுக்கு செய்யப்பட்டது. இதற்காக மனிதக்குரங்கின் உடலிலிருந்து ஹார்மோன் எடுக்கப்பட்டு உபயோகிக்கப்பட்டன. இந்த பரிசோதனைகள் இன்னும் முடிவானபாடில்லை.

மனிதர்கள் உடம்பிலேயுள்ள "பிட்னிடரி" நாளத்திலிருந்து கிடைக்கும் பொருளை எடுத்து மனிதர்களுக்கு உபயோகிப்பது மூலம், பலன் கிடைக்குமா என்று பார்க்கப்பட்ட இந்த சோதனைக்குட்பட்ட ஒருவர் முக்கால் அங்குல உயரமும், மற்றொருவர் ஒரு அங்குல உயரமும், வளர்ச்சியடைந்துள்ளனர் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இருவருக்கும் உடலெடையில் சுமார் 11 பவுண்டுகள் அதிகரித்திருந்தது ரத்த

(11-ம் பக்கம் பார்க்க)

# இந்திய நாடக மேடை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பிடத்தக்க முறையில் உதவுகின்றன. எமது மேடை அலங்காரமும் துரித மாற்றமடைகின்றது. யதார்த்தம் நிலைத்திருக்க, கிட்டத்தட்ட சென்ற பாதி நூற்றாண்டு காலத்தில் இவற்றில் புகுந்திருந்த முரண்பாடுகளும் செயற்கைகளையும் விரைந்து மறைகின்றன. அலங்காரங்கள், காட்சி ஜோடனைகள், திரைச்சீலைகள் தேர்ந்தெடுதலில் கூடிய பண்பு தெளிவாகிறது. அத்தோடு சரித்திர உண்மை நிலையோடு ஒப்ப நிற்பதற்குக் கூடிய கவனம் அளிக்கப்படுகின்றது

இக்கண்டிப்புக்கு, ஓரளவு, காட்சி ஜோடனைகள், ஆடைகள், இசை ஆகியவற்றில் சமூக, சரித்திர உண்மை நிலைக்கு ஒப்ப அமைவதற்கான கூடிய கவனம் எடுக்கப்படும் திரைப்படங்களின் தாக்குதலே காரணம். ஆயினும் இப்போதைய போக்கு மேடையமைப்பிலும், ஆடையலங்காரத்திலும் எளிமையை வேண்டுகிறது. பின்னணியாகச் சாதாரணமான திரைச்சீலையின் அல்லது எளிமையான மண்ணிறத்தானினால் ஆன திரைச்சீலையின் முன் நாடகங்களை அரங்கேற்றுவதற்கான பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன.

## தேசிய வாழ்வில்

எமது பாரம்பரிய நாடகங்களும் அவற்றின் கருப்பொருள்களும் எமது தேசிய வாழ்விலே பிரதான சீரிய இடம் வகித்தல் வேண்டும். அவையோரின் உணர்ச்சியை எழுப்பி அவர்களை மனவெழுச்சி அடைவிக்கும், விசேஷமாக நம் நாட்டு மக்களின் விஷயத்தில் அவர்களின் மறை மெய்மைத் தாகத்தையும் அகப்பொருள் ஆராய்ச்சிக்கான ஆர்வத்தையும் திருப்திப்படுத்தும்ஆற்றலுள்ள நேரடியான மூல உணர்ச்சிகள் ஏராளமாய் இவற்றிலுள்ளன. அதோடு, முற்கால மக்கள் பெரிதும் வேண்டிய கருப்பொருளான யதார்த்தம், இப்பண்டை அறிவுக்குவையின் ஒவ்வொரு நுண்ணிய கடினமான கருத்தின் உள்ளும் தவிர்க்கமுடியாது பின்னிக்கிடக்கின்றது. இது ஒருபுறமிருக்க இவை மேடையிலிருந்து உபதேசிக்கப்படும் அறவுரையான தனிப்பட்ட கருத்தாக அன்றி, நிகழும் சரித்திரத்தைச் சித்திரிக்கும் மதிபபுள்ள நிகழ்ச்சிகளின் காட்சித்தொடராக அதன் உரிய பின்னணியில், சரியான நோக்கிலே அளிக்கப்பட்டால் நிலைபேறுள சமூக மதிப்புள்ளவையாய் இருப்பன

## உங்களுடன் சில நிமிஷம்

கதை, கட்டுரைகள் எழுதும் தம்பி தங்கைகள் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் சுருக்கமாக எழுதவேண்டும்.

சில தம்பி, தங்கைககள் தங்கள் கதை, கட்டுரைகள் பூங்காவில் இடம்பெறவில்லையெனக் குறைபட்டு எழுதுகின்றனர். ஒரே இதழில் எல்லாத் தம்பி, தங்கைகளின் கதை, கட்டுரைகளையும் அடக்கிவிடமுடியுமா? பொறுமையுடன் இருங்கள்.

ஹாலிஎலவிலுள்ள மரகல்ல தோட்டத்தைச் சேர்ந்த தம்பி ஒருவர் சிறுவர் பூங்காவில் தம்மை ஓர் அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளும்படி கேட்டிருக்கின்றார். எல்லாத் தம்பி, தங்கைகளும் 'சிறுவர் பூங்கா' வின் அங்கத்தவர்களே. அனைவரும் கதைகள், கட்டுரைகள் எழுதி அனுப்பலாம்.

# அந்தக் காலத்திலே...

— சிவா —

(சென்ற வாரத் தொடர்ச்சி)

எல்லாஊர்களிலும் இருந்து, சனங்கள் றெயிலைப் பார்க்க ஆயத்தப்படுத்தினர்கள். யாழ்ப்பாணக்குடாநாட்டில் உள்ள கொக்குவில், கோண்டாவில், சன்னுகம், சுளுவில், சங்கானை, பண்டத்தரிப்பு முதலிய எல்லாக் கிராமங்களில் இருந்தும் 'மாட்டுவண்டிகள் கட்டிக்கொண்டு பயணமானுர்கள். எத்தனை மணித்தியாலம் எடுக்குமென்று நினைக்கிறீர்கள். ஒரு மணித்தியாலமா? இரண்டு மணித்தியாலங்களா? இரண்டு, மூன்று நாட்களும் எடுக்கும். றெயில் வருகிற திகதிக்கு இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பே பயணத்துக்கு ஆயத்தம் தொடங்கிவிட்டது. நாங்கள் புகையிரதநிலையத்துக்கு அண்மையில் இருந்ததினல் எங்களுக்கு றெயில் பாதை பக்கத்தில். நாங்கள் நடந்துதான் சென்ருேம். நாங்கள் என்ருல் நான், அப்பு, ஆச்சி, தம்பி, நால்வரும்தான. அன்றைக்கு ஒரே அமளி. விட்டு விலகமுடியாத நெருக்கடி. அவ்வளவு தொகையான சனங்கள். அதற்கும் முன்னெப்பொழுதும் இப்படிக்கூட்டமில்லை. றெயில் பாதை நீட்டுக்கு வெள்ளம் போலத் திரண்டு நின்ருர்கள். எங்கு பார்த்தாலும் சனங்கள் தான். எங்கும் ஒரே இரைச்சல். றெயில் வரும் நேரம் நெருங்க நெருங்க எல்லோரும் றெயில் பாதையையே பார்க்கத் தொடங்கி விட்டார்கள். சற்றுநேரத்தின் பின் கண்ணுக் கெட்டாத தூரத்தில் 'கூ...' என்ற சப்தம் கேட்டது. அதைக்கேட்டதும் எல்லோரும் பயந்துவிட்டார்கள் எனக்கும் உள்ளுக்கு நடுக்கம்தான். இரண்டு, மூன்று நிமிடங்கள் சென்றபின் 'சக்குபுக்கு சக்கு புக்கு' என்ற இரைச்சல் கூடிக்கொண்டேவந்தது. சனங்களுக்கு முன்பு இருந்த பயம் கூடிவிட்டது. "எல்லாரும் தள்ளி நில்லுங்கள்! கிட்டப் போகாதீர்கள்! எட்டிநின்று பாருங்கள்! ஒருவரை ஒருவர் பிடித்துக்கொள்ளுங்கள்!" என்றெல்லாம் ஒவ்வொருவரும் சொல்லிக்கொண்டனர். பாதையில் இருந்து ஐந்துயார் தூரத்துக்கப்பால் ஒதுங்கிநின்றபடி, கண் இமைக்காமல் எல்லோரும் றெயில் பாதையையே பார்த்தவாறு நின்றனர்.

சிறிது நேரத்தில், சமீபமாக 'கூ' வென்ற சப்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து பெரிய கறுத்த உருவம் முன்னுக்கு ஓடி வந்தது. அது என்ன வென்று நினைக்கிறீர்கள். அது தான், 'இஞ்சின்'. நீங்களும் 'இஞ்சினை' ப பார்த்திருக்கிறீர்கள் தானே.

அதைக்கண்டதும் சில குழந்தைகள் வீரிட்டுக்கத்தத் தொடங்கிவிட்டன. சில பெரியவர்களே பின்வாங்கததொடங்கிவிட்டனர். எவ்வளவு பயம் என்று பாருங்கள்! அதைத் தொடர்ந்து றெயில்பெட்டிகள் வந்தன. எல்லோரும் 'ஆ' வென்று வாயைப்பிளந்து பார்த்துக்கொண்டு நின்றனர். அவ்வளவு அதிசயம்! அதிசயமாகத்தானே இருக்கும். அதற்குமுன் அப்படி ஒன்றையும் அந்தக் காலத்தில் நாம் கண்டதில்லையே. நீங்கள் இப்போதும் ஆகாயவிமானத்தை அதிசயத்தோடு பார்ப்பதில்லையா? முதல் வந்த றெயில் எதனுல் இயங்கியது தெரியுமா? நீராவியில் என்று படித்திருப்பீர்கள். றெயில் 'கூ' வென்று கத்திக்கொண்டு வரும்போது புகை வானத்தை முட்டும். றெயில் பாதை நீட்டுக்கு கரி கொட்டுப்பட்டுக்கிடக்கும்

றெயில் வந்து ஒரு மாதமாக எல்லோர் வாயிலும் இதே பேச்சுத்தான். றெயில்பாதை நீளத்துக்கு ஒவ்வொருநாளும் சனங்கள் வந்து அதிசயத்தோடு பார்த்துக்கொண்டே நிற்பார்கள். உங்களுக்கு இது சிரிப்பாக இருக்கும். அன்றைக்கு எத்தனை பேர் வீரிட்டுக் கத்தினர்கள் தெரியுமா? எத்தனை பேருக்குப் பயத்தால் காய்ச்சல் வந்தது தெரியுமா? எத்தனைபேர் பயத்தில் றெயிலைப் பார்க்கவே போகவில்லை! றெயிலில் ஏறிப் பிரயாணம் செய்வதற்கு எவ்வளவு காலம் எடுத்தது தெரியுமா? றெயிலுக்குக்கிட்டப்போகவே பயம்! இப்போதென்ருல் நீங்கள் ஆசையோடு முண்டியடித்துக்கொண்டு ஏறுகிறீர்கள். ஒரு பயமுமில்லை. ஏன், உங்களில் அநேகர் றெயிலில் தான் பட்டினப் பள்ளிக் கூடங்களுக்குப் போகிறீர்கள் என்று நினைக்கிறேன். இந்த முதல் றெயில் யாழ்ப்பாணத்துக்கு எந்த ஆண்டில் வந்தது தெரியுமா? ஆயிரத்துத்தொளாயிரத்து இரண்டாம் ஆண்டு. உங்கள் தாய் தகப்பன்மாரே பிறந்திருக்கமாட்டார்கள். இதற்குப் பிறகுதான் டீசல் றெயில் என்றும், யாழ்தேவி என்றும் வந்தது. தெரியுமோ?

## குள்ளமாக...

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

த்திலுள்ள சர்க்கரை அளவும் கூடுதலாக இருந்தது.

உடல் வளர்ச்சி ஒரு அங்குலம் தான் சாத்யமானது என்பது மிகக் குறைந்த வெற்றி என்றே கருதப்படலாம். ஆனல் உடல் இன்னும் அதிகமாக வளர என்ன செய்யலாம் என்பதற்கான வழி கண்டு பிடிக்கப்பட்டுவிட்டது. மேலும் மேலும் செய்யப்படும் ஆராய்ச்சிகள் காரணமாக வெகு சீக்கிரமே பூரண உடல் வளர்ச்சிக்கான வழி கண்டு பிடிக்கப்பட்டுவிடலாம்.

## போக்கு வரத்து..

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜெர்மன் நிபுணர்கள் கண்டுபிடித்திருக்கிருர்கள். இந்த சப்தம் காரணமாக மன வியாதியுடன் உடல் வியாதியும் ஏற்படுகிறதாம் நரம்புத்தளர்ச்சி; ஒரு விஷயத்தில் ஊன்றிமனதை செலுத்த முடியாமை, மனதில் நினைக்காமலே ஒரு காரியத்தைச் செய்தல், அதிகமாக மதுபானங்களையோ, லாகிரிப் பொருள்களையோ உபயோகிக்கத் தூண்டுவது இவை எல்லாம் இந்த சப்தத்தின் காரணமாக ஏற்படக்கூடியவை.

போக்குவரத்து சாதனங்களினல் ஏற்படக்கூடிய ஒலியின் அளவு 10[illegible] போன்களாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. சர்வதேச விமான நிலயங்களுக்கருகில் ஜெட் விமானங்களினல் ஏற்படும் சப்தம்சகிக்க முடியாதது. இந்த ஒலியினல் ஏற்படும் கெடுதிகளைக்குறைக்க பல சட்டங்களும் ஜெர்மன் பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. எதிர் காலத்தில் போக்குவரத்து சப்தம் இன்னும் பன்மடங்கு அதிகரிக்கும். போக்குவரத்து சாதனங்களைத் தயாரிப்பவர்கள் இந்த சப்தத்தைக் குறைக்கும் விஷயமாகக் கவனம் செலுத்த வேண்டும்.

நகரங்களை அமைப்பவர்கள் ஜன நெருக்கமான இடங்களில் போக்கு வரத்துகள் கூடுமானவரை இல்லாமல் இருக்க திட்டமிடவேண்டும்.

# "தன்னம்பிக்கை"

—"நடா"—

எழுத்துலகில் பிரவேசித்த அறிஞர் பெர்னட்ஷா ஒன்பது வருடகாலம் கந்தல் உடையுடனும், கிழிந்த சப்பாத்துடனும், லண்டன் வீதிகளில் திரிந்தவர். அவர் தனது இருபதாவது வயதில் குமாஸ்தா வேலையை உதறித்தள்ளியபின் எழுத்துலகில் பிரவேசித்து பல வருடங்கள் எழுதினர். ஆனல், பத்திரிகைகள் அவற்றைத் திருப்பிஅனுப்பிவிட்டன. இருந்தும் மனந்தளராமல், தன்னம்பிக்கையுடன் மேலும் மேலும் பலநாடகங்களை எழுதியதனலேயே இன்று அவர் "நாடகத்தின் தந்தை" எனப் போற்றப்படுகிருர். அவருடைய நாடகங்கள் இன்று உலக மக்களால் போற்றப்படுகின்றன.

மண்வெட்டியில் சுண்ணும்பினல் எழுதிப்படித்த எச. ஜி. வெல்ஸ் இன்று, தலைசிறந்த எழுத்தாளர் எனப் போற்றப்படுகின்ருர். இளமையிலே படிக்க வசதியற்ற இவர், ஆர்வத்துடன் தனது அறிவை வளர்த்ததனலேயே இன்று அறிஞர் எனப் போற்றப்படுகின்ருர். இதெல்லாவற்றுக்கும் காரணம் தன்னம்பிக்கையே

அடிமைத்தளையறுத்த ஆபிரகாம் லிங்கன் ஓர் ஏழையின் புதல்வனே. அவன் மடிந்தும் புகழ் மறையவில்லை. உலகையே க்டுகிடுக்கவைத்த சர்வாதிகாரிகளான ஹிட்லரும்முசோலினியும் இளமையில் உணவுக்கும் உடைக்குமே கஷ்டப்பட்டனர்! ஏன், இன்று உலக மக்களின் கவனத்தைக் கவர்ந்துகொண்டிருக்கின்ற ரஷ்யாவின் பிரதமர் குருஷ்சேவ் அன்று ஓர் ஏழைச் சிறுவன்.

ஆகவே, நாம் ஏழையாகப் பிறந்துவிட்டோம் என்று வருந்தாமல், நாமும் பெரிய அறிஞர்களாக—தலைவர்களாக—பணக்காரர்களாக முடியும்என்னும் தன்னம்பிக்கையுடன் வாழ்ந்தால் உயர்நிலை அடைய முடியும்—இது உறுதி.

## பாட்டியின் கற்பனை

எனது பூட்டப்பிள்ளைகள் அதாவது எனது மகளுடைய மகளுடைய குழந்தைகள், வருகிறகிழமை சிங்கப்பூரிலிருந்து வருகிருர்களாம். அப்பப்பா! நான் இவ்வளவு காலம் வாழ்ந்துவிட்டேனே! இன்னும் எவ்வளவுகாலம்? இன்ருே நாளையோ என்றிருக்கின்றேன். ஆமாம், நான் செத்துப்போய் விடுவேன். அதற்கு முன்னர் நான் அவர்களைப் பார்த்து விடுவேன். அதை நினைக்கும்போது எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கிறது. ஆனல் ஒன்றை மட்டும் நினைக்கும் போது வேதனையாயிருக்கின்றது.

அவர்கள் சிங்கப்பூரிலிருந்து வந்ததும் இந்தப் பாட்டியண்டை வருவார்களா? அல்லது அயலிலுள்ள குழந்தைகள் மாதிரி அழ ஆரம்பித்துவிட்டால்? குழந்தைகளைக் காணும்போது எனக்கு எவ்வளவு ஆசையாயிருக்கிறது. சிங்கப்பூரில் பிறந்த குழந்தைகளென்ருல் பட்டுமாதிரியிருப்பார்கள். சொகுசு ஊரல்லவா?

எனது பூட்டக் குழந்தைகள் என்னண்டை வரமாட்டார்கள் தான். ஆனல் சிறிது சிறிதாகப் பழகிவிட்டால்.. ஆமாம், பழகத்தானே வேண்டும். எனது பேத்தி எனது ஆசையை அறியாமலா விடுவாள்? தனது குழந்தைகளை, அவள் எப்படியும் என்னுடன் பழகச் செய்வாள். அவள் ஒரு சுட்டிப்பெண்.

த. பத்மநாதன்

# சிறுவர் பூங்கா

## உங்கள் கருத்து

சிறுவராகிய நாம் எழுத்தாளராக வர அழகிய ஒரு சிறுவர் பூங்காவை அமைத்துத் தந்ததற்காக எமது நன்றி.

பூங்காவிலே, சிறுகதைகள், பாடாப்பாட்டுகள்; பொன்மொழிகள்; நொடிகள் ஆகிய மலர்கள் பூத்துக்குலுங்க நாம் நமது கற்பனையாய நீரை யூற்றி ஊக்கமளிப்போம் என உறுதி கூறுகிறேம். செழித்து வளர்க சிறுவர் பூங்கா.

— மாவிப்பாயிலிருந்து, சில சிறுவர்கள்.

"...... சிறுவர் பூங்காவும் அதில் மலரும் மலர்களும் எம்போன்ருேரை வண்டுகளாக்கிவிட்டன. பூங்காவைக் கண்டதும் நான் ஆனந்தப்பட்டேன்."

—வசந்தி பீட்டர்,
யாழ்ப்பாணம்.

"சிறுவர் பூங்காவைக்கண்டு மகிழ்ந்தேன். எழுத்தார்வமுள்ள எம்போன்றசிறுவருக்கு இது ஓர் அரிய வாய்ப்பாகும் சிறுவர் பூங்கா வாழ்க."

—கே. நடராஜா,
1-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

"11-2-62 சிறுவர் பூங்காவில் வெளியான "அந்தக் காலத்திலே" என்ற தலைப்பில் வந்த பாட்டியின் கதையைப் படித்து வயிறுகுலுங்கச் சிரித்தோம். ஆனல், 'அடுத்த இதழில் முடியும்' என்பதைப் படித்துவிட்டு அழுதோம். எங்களை இப்படி ஏமாற்றலாமா?......"

—த. பத்மநாதன்,
சு. சண்முகானந்தன்.
யாழ்ப்பாணம்.

"... சிறுவர் பூங்காவில், கேள்வி—பதில் பகுதி வைத்துக் கொண்டாலென்ன? ..."

—'பாலன்'
திருகோணமலை.

## விளக்கு மனிதன்

ஏதென்ஸ் நகரில் ஒரு நாள், பட்டப்பகலில் எரியும் விளக்குடன் வீதி வழியே ஒருவன் ஓடிக்கொண்டிருந்தான். அவனைப் பார்த்து எல்லோரும் அதிசயப்பட்டனர். பகலிலே விளக்கு எதற்கு என எல்லோரும் அவனைக் கேட்டனர். "மனிதனைக்கண்டு அறியப் போகிறேன்" என்று அவன் பதில் அளித்தான். எல்லோரும் ஆச்சரியப்பட்டனர். ஒருவருக்கும் ஒன்றும் புரியவில்லை.

அவன் ஓடிக் கொண்டிருந்தான். வழியில் இளவரசர் குறுக்கிட்டார். அவர் குதிரை வண்டியில் வந்தார். இளவரசரைப் பார்த்து, "இளவரசே, பசி தாங்கவில்லை. ஏதாவது தாருங்கள்" என்ருன் விளக்கு மனிதன். அவனுக்குக்கிடைத்தது சாட்டையடிதான். அடுத்து, ஒரு பிரபு வந்தார். விளக்கு மனிதன், அவரையும் இரந்து கேட்டான். பிரபு, அவன்மீது காறி உமிழ்ந்தார்.

கடைசியில், ஒரு பிச்சைக்காரன் அவ்வழியே வந்தான். விளக்கு மனிதன், அவனை நோக்கி, பசி தாங்க முடியவில்லையென்றும், ஏதாவது ஆகாரம் கொடுக்குமாறும் வேண்டினன். பிச்சைக்காரன் முகம்மலர்ந்து, தனது உணவுப் பொட்டலத்தைக் கொடுத்தான். "நண்பா, மிகவும் நன்றி. நான் விளக்கு மனிதனைக் கண்டுவிட்டேன்" என்று கூறிக்கொண்டு, விளக்கு மனிதன், திரும்பினன்.

—ம. இளங்கோவன்

## தலை நிமிர்ந்த பனை மரம்

— திசை தேவரஞ்சனி —

பனைமரம் எங்கள் பனைமரம்
பனம்பழம் தரும் பனைமரம்
பரிதி தந்த வெயிலாலே
பனட்டுத் தரும் பனைமரம்

வீடுவேய ஓலை தரும்
விறகு தரும் பனைமரம்
வித்தை நட்டால் கிழங்கு தரும்
விந்தையான பனைமரம்

ஏடுதந்து எழுத வைத்த
இறைவனன பனைமரம்
நாடு முழுதும் நம்பி நிற்கும்
நன்மையான பனைமரம்

நீண்டுயர்ந்த பனைமரம்
நேர்த்தியான பனைமரம்
நிலையுயர்ந்த பனைமரம்
தலை நிமிர்ந்த பனைமரம்

# ‘ஸ்ரீ’ வழக்கில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பமாகிவிடும்" என்று முடிக்குரிய வழக்கறிஞர் திரு. அபயசூரியா தெரிவித்தார்.

"காரின் சொந்தக்காரர் யார் என்பது பற்றி பிராஸிக்கியூஷன் தரப்பினர் நிருபிக்க வேண்டிய அவசியமில்லை. எனவே முடிக்குரிய தரப்பு, செஸி இலக்கம்பற்றிய விபரம் மீது அக்கறை கொள்ளவில்லை. கறுப்பு "பேர்ஜோ" 403 கார் ஒன்றின் அடையாளத் தகட்டில் பதிவுப் பத்திரத்தின்படியான இலக்கம் காணப்படவில்லை என இன்ஸ்பெக்டர் பீட்டர் நேரடியாகக் குற்றஞ்சாட்டியிருக்கிறார். அடையாளத்தகட்டில் இலக்கம் புரியாதபடி மறைக்கப்பட்டுள்ளதற்கு கோர்ட்டில் சாட்சியம் இருக்கிறது.

பதிவுப் பத்திரப்படி இலக்கத்தகடு இருக்கவில்லை. மோட்டார் போக்குவரத்துச் சட்டத்துக்கு இது மாறானது.

அலகாபாத் சமஷ்டி நீதிமன்றத்தில், பிரதம நீதியரசரும், மற்றோர் நீதியரசரும் இதே போன்ற ஒரு வழக்கில் தீர்ப்பளித்துள்ளனர். அங்கு ஒரு காரின் சொந்தக்காரர் 'யு பி 56 டி எஸ்' என்ற இலக்கத்தில் அதிலிருந்த ஆங்கில எழுத்துக்களுக்குப் பதில் ஹிந்தி எழுத்தை பொறித்திருந்தார். அங்கு எதிர் தரப்பு வாதம் இக்கோர்ட்டில் உள்ளபடியே இருந்தது. எழுத்தின் ஒலியும் ஒரேவிதமாய் இருந்தது.

ஆனால் பதிவுப் பத்திரத்திலுள்ளபடியே இலக்கத் தகடு இருக்க வேண்டுமென நீதிபதிகள் கருதி எதிரியைக் குற்றவாளிகளாகக் கண்டனர்" என்றும் திரு. அபயசூரியா கூறினார்.

நீதிமன்றச் சட்டத்திலுள்ள சிங்களச் சொல்லின் அர்த்தம் பற்றியும் நீதிமன்றம் கவனத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் எதிரிதரப்பில் சாட்சியம் அளித்த திரு. பெர்னாண்டோ 'ஸ்ரீ' பற்றி விளக்கம் தெரிவிக்கும் தகுதியில்லாதவர் என்றும் அவர் ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) பரீட்சையில் சித்திபெற்றவர்தானென்றும் முடிக்குரிய வழக்கறிஞர் கூறினர்.

'ஸ்ரீ' எழுத்தின் சுருக்க நீள வடிவங்கள் பற்றி சிங்கள-ஆங்கில அகராதியின் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளதென்பதை நீதிமன்றம் கவனத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று முடிக்குரிய வழக்கறிஞர் கூறினர்.

எதிரி தரப்பு பிரதம வழக்கறிஞர் திரு. எம். திருச்செல்வம் கியூ. ஸி. தமது தொகுப்புரையில் கூறியதாவது:-

"'ஸ்ரீ' என்பதைக் காட்டும் எழுத்தும் குறிகளும் சட்டத்தில் அடங்கியவையல்ல. 'ஸ்ரீ' என்னும் கருத்தைத் தெரிவிக்கும் எழுத்தை சட்டத்துக்குத் தேவையானது. சிங்கள மொழியில் 'ஸ்ரீ' எழுத்து கிடையாது என்பதற்கு போதுமான அத்தாட்சி கொடுக்கப்பட்டுள்ளது. பெர்னாண்டோவின் வாக்குமூலம் ஒரு நிபுணரின் வாக்கு மூலம் அல்லவென்று ஒதுக்கி விட முடியாது. அவர் சிங்களத்தில் ஜி. ஸி. ஈ. பரீட்சையில் சித்தியெய்தியிருக்கிறார். அவரது வாக்குமூலம் இவ் விஷயத்தில் போதுமானது. தமிழ்ப் பகுதிகளைப் பொறுத்தவரை பெர்னாண்டோவின் சாட்சியம் ஒரு நிபுணரின் சாட்சியத்துடன் ஒப்பிடக்கூடியது

காரை அடையாளம் கண்டு பிடிக்கும் பொருட்டே அடையாள இலக்கத் தகடுகள் வைக்கப்பட்டுள்ளன. வேறு கார் ஒன்றின் இலக்கத்தை இக்காருக்குப் பொருத்தி தவறான அடையாளம் காட்டப்படவில்லை. எனவே முடிக்குரிய தரப்புக்கு இவ் விஷயத்தில் வழக்கு ஒன்றும் கிடையாது. வழக்கில் சம்பந்தப்பட்ட குறிப்பிட்ட காருக்கு 2 ஸ்ரீ 1577 என்ற அடையாளம் இருக்கவில்லை என்பதை பிராஸிக்கியூஷன் தரப்பினர் நிருபிக்கத் தவறிவிட்டனர்."

இரு தரப்பு தொகுப்புரைகளும் முடிவுற்றபின் மாஜிஸ்டிரேட் தனது தீர்ப்பை மார்ச் 7-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

இதே போன்ற மற்றும் 8 வழக்குகள் அதே திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன.

# கிரிமினல்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டிருப்பதாக நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இன்று அதிகாலை மூன்றரை மணிக்கு சபையில் அறிவித்தார். மசோதாவின் இரண்டாம் மூன்றும் நான்காம் பகுதிகளை சதிவழக்கு முடிவடையும் வரை அல்லது ஒரு வருட காலத்துக்கு அமுலில் வைத்திருக்கலாமென்றும் திரு. பண்டாரநாயக்கா தெரிவித்தார். சட்டபூர்வமான வேலை நிறுத்தங்களுக்கு எதிராக இச்சட்டம் உபயோகிக்கப் படமாட்டாதென அவர் அறிவித்தார்.

ஜனப்பிரதிநிதிகள் சபையில் கிரிமினல் சட்ட (விசேஷ விதிகள்) மசோதா மீது நேற்றிரவு முழுவதும் விவாதம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. மசோதாவின் ஷரத்துக்கு எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் பலர் வன்மையாகக் கண்டனம் தெரிவித்துப்பேசிக் கொண்டிருந்தனர்.

பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் பார்லிமெண்டரிக் காரியதரிசி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இருபகுதியினரும் இணங்கக்கூடிய ஒரு திட்டத்தை அதிகாலை 3-20க்கு சபையில் அறிவித்தார்.

கிரிமினல் சட்ட (விசேஷவிதிகள்) மசோதாவின் முதல் பகுதி சதித்திட்டம் சம்பந்தமானவர்களுக்கு மட்டுமே உபயோகப்படுத்தப்படும் என்று மசோதா கமிட்டிநிலையில் பரிசீலனை செய்யப்படும் போது திருத்தம் கொண்டுவரப்படும் என்று திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா அறிவித்தார்.

சதித்திட்டத்தில் சம்பந்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படுபவர்களைக் கைதுசெய்யவும், காவலில் வைக்கவும் விரிவான அதிகாரங்களை கிரிமினல்சட்ட (விசேஷ விதிகள்) மசோதாவின் முதல்பகுதி அளிக்கிறது இந்த அதிகாரங்களைக் கட்டுப்படுத்தாவிட்டால் ஆபத்தான விளைவுகள் ஏற்படக்கூடுமென்று எதிர்க்கட்சி அங்கத்தினர் பலர் கருத்துத்தெரிவித்தனர்.

மசோதாவின் இரண்டாவது மூன்றாவது, நான்காவது பகுதிகள் பற்றிக் குறிப்பிடுகையில் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பின்வருமாறு தெரிவித்தார்:-

மசோதாவின் 2, 3, 4-ம் பகுதிகள் பற்றி மூன்று விதமான அபிப்பிராயங்களிருப்பதாகத் தோன்றுகிறது.

சதித்திட்டம் சம்பந்தமான வழக்கு விசாரணைகள் யாவும் முடிவடையும் வரை அல்லது ஒருவருட காலத்துக்கு மட்டும் மசோதாவின் 2, 3, 4-ம் பகுதிகள் அதிலிருக்கவேண்டும் என்பது எனது மாற்றுத்திட்டம். வழக்கு முடியும் வரையுமோ அல்லது ஒருவருட காலத்துக்கோ எது குறைவானதோ அதன்படி இப்பகுதிகளை அமுலில் வைத்திருக்கலாம்.

மேலும் ஒரு வருடத்துக்கு இப்பகுதிகள் அமுலிலிருக்க வேண்டுமாகில் பார்லிமெண்டின் இருசபைகளின் அங்கீகாரத்தையும் பெறவேண்டும். எனது இந்தத் திட்டத்தை கம்யூனிஸ்ட்கட்சியும் எம். ஈ. பி. யும் ஏற்றுக்கொண்டுள்ளன.

திரு பண்டாரநாயக்க மேலும் கூறியதாவது:-

சதிகாரர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கவேண்டுமென்பதில் எங்கள் எல்லோருக்கிடையிலும் கருத்துவேறுபாடில்லை.

65,000 தடவைகள் சுடக்கூடிய துப்பாக்கி ரவைகள் சேகரித்துவைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. பார்லிமெண்ட் அங்கத்தவர்களை முடித்துக் கட்டுவதற்கு இவ்வளவு தொகை தேவையில்லை எனவே மக்களுக்கெதிராக துப்பாக்கிக்குண்டுகளைச் சேகரித்து வைத்தவர்களிடமிருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டியது மக்களால் தெரிந்தெடுக்கப் பட்ட அரசாங்கத்தின் கடமை.

# “ஒரு வருடத்துக்கேனும் அனுமதிக்க முடியாது”

—திரு. லெஸ்லி

கொழும்பு, சனி

கிரிமினல் சட்ட (விசேஷ விதிகள்) மசோதா சதித்திட்டத்துக்கு மாத்திரம் உபயோகப் படுத்தப்படுமானல் இந்த மசோதாவை லங்கா சமசமாஜக் கட்சி ஆதரிக்கத் தயாராக இருக்கிறது என்று இந்த விவாதத்தின் ஆரம்பத்திலேயே நாங்கள் தெரிவித்துள்ளோம்" என்று பாணந்துறை எம். பி. திரு. லெஸ்லி குணவர்த்தன நேற்றிரவு பார்லிமெண்டில் கூறினர். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

இப்பொழுதுள்ள சட்டம் சதிகாரர்களைச் சரியான முறையில் தண்டிப்பதற்குப் போதாதென்பதை நாங்கள் ஒப்புக் கொள்கிறோம்.

புரட்சிச் சதி சம்பந்தமாக மட்டும் இம்மசோதாவின் முதல் பகுதியை உபயோகப்படுத்துவதென்பதற்கு அரசாங்கம் இணங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மசோதாவில் பிரதம மந்திரிக்கும் இதர மந்திரிகளுக்கும் பூரண பாதுகாப்பளிக்கும் நிரந்தர வசதிகள் செய்யப்படவேண்டுமென்றும் இனி மேலும் சதிமுயற்சி செய்யப்பட்டால் அதைச் சமாளிப்பதற்கான நிரந்தர சட்ட வசதிகளைச் செய்வதற்கு ஒரு மசோதா தயாரிப்பதுக்கும் ஒத்துழைப்பளிப்பதாக நாங்கள் தெரிவித்திருந்தோம் ஆனல் இதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாதது வருத்தத்துக்குரியது.

திரு. லெஸ்லி மேலும் பேசுகையில் இம்மசோதாவின் ஷரத்துக்கள் வேலை நிறுத்தம் செய்பவர்களையும் ஜனவரி 5-ந் திகதி வேலை நிறுத்தம் செய்தவர்களையும் மரண தண்டனைக்குள்ளாக்கக் கூடியதாக இருக்கிறதென்றும் குறிப்பிட்டார்.

"சதிகாரர்களுக்கெதிராக அல்லாது மக்களுக்கு எதிராகவுள்ள- இச்சட்ட ஷரத்துக்களை ஒரு வருடத்துக்குத் தானும் அல்லது மற்றொருவருடத்துக்கு நீடிக்கத்தானும் நாங்கள் ஒப்புக்கொள்ளமாட்டோம்" என்று திரு.லெஸ்லி கூறினர்.

## வைத்தீசுவர வித்தியாலயத்தில் மாணவர் தேசிய சேவை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் வைத்தீசுவர வித்தியாலயத்தில் பள்ளிக்கூடங்களுக்கான தேசியசேவை இன்று ஆரம்பிக்கப்பட்டது நாகமுத்து இல்லத்தைச் சேர்ந்த மாணவர்களும் ஆசிரியர்களும் இச்சேவையில் ஈடுபட்டனர். வித்தியாலய அதிபரும் பிரசன்னமாயிருந்தார். வேலியடைத்தல், காங்கிறீட் கற்கள் அறுத்தல், கரும்பலகைகளுக்கு மை பூசுதல், விஞ்ஞான கூடம், வகுப்பறைகளைத் தூசி நீக்கிக்கழுவுதல் ஆகிய வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

மாணவிகள் தங்கள் சமையல் அறையைக்கழுவிச் சுத்தம் செய்ததுடன் தேனீர் தயாரித்து ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் வழங்கினர்.

## கலை அரங்கம்

இடமின்மையால் இன்று கலை அரங்கம் வெளிவரவில்லை.

## தியேட்டர் செய்திகள்

யாழ்ப்பாணம் வெலிங்டன் சிவாஜிகணேசன் - ஜெமினி கணேசன் நடித்த பாச மலர்

●

யாழ்ப்பாணம் மனோகரா ஜெமினி கணேசன், பத்மினி நடித்த மீண்ட சொர்க்கம்

## கிருஷிகப் பாடசாலைக்கு 180 விண்ணப்பம்

வவனியா, வெள்ளி

வவனியா கிருஷிகப் பாடசாலையில் ஒருவருடப் பயிற்சி பெறுவதற்கு விண்ணப்பகாரரன நேர்முகப்பரீட்சை வவனியா கிருஷிக இலாகக கந்தோரில் நடைபெற்றது. மன்னார் முல்லைத்தீவு, வவனியா ஆகிய இடங்களிலிருந்து 180 பேர் சமூகம் கொடுத்திருந்தனர். நேர்முகப் பரீட்சையை கிருஷிக இலாகா அதிபர் திரு. எஸ். என் ஜயசீலன், மன்னார் கிருஷிக இலாகா அதிபர் திரு. எஸ். நடேசர், வவனியா கிருஷிகப் பாடசாலை அதிபர் ஆகியோர் நடத்தினர் இதில் 35 பேர்மட்டும் பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்படுவர்.

## நாவலர் வித்தியாசாலையில் பண்டித வகுப்புக்கள்

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கப் பரீட்சைகளுக்குரிய பிரவேச, பால பண்டித, பண்டித வகுப்புக்கள் ஷை பாடசாலையில் 3 - 1 - 62 காலை 9 மணிக்குத் தொடங்கப் பெற்று, ஒவ்வொரு சனி, ஞாயிறும் விடுமுறைக் காலங்களிலும் நடைபெறும். விண்ணப்பங்களைத் தலைமையாசிரியருக்கு அனுப்புக.

வித்துவான் இ. திருநாவுக்கரசு
தலைமையாசிரியர்


## வேது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி)


ஸ்ரீகிருஷ்ணா (திருக்கோணமலை) லக்ஷ்மி (இரத்தினபுரி) மொடர்ன் (பதுளை)

விஜிதா (மஸ்கெலியா) தீபொளி (நுவரெலியா) ஜெமினி (ராகல)

பெண்மையின் நிறைவு!
தாய்மையின் பரிவு! தன்மானத் துணிவு!
பாசத்தின் விளைவு! தியாகத்தின் முடிவு!

இத்தனைக்கும் நடுவே தத்தளித்து வெற்றி காணும் உத்தமியின் காவியம்!

இன்றே பாருங்கள்!



சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, எம். என். ராஜம், தங்கவேலு, எம். சரோஜா, எம். என். நம்பியார்

நடித்த

# பாச மலர்

திரைக் கதை - டைரக்ஷன்: ஏ. பீம்சிங்

மனோகரா (யாழ்ப்பாணம்)

ஜெமினி கணேசன் பத்மினி நடித்த

மீண்ட சொர்க்கம்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.